கல்கி



ALKI ஜூன் 7, 1953 4 அணா



உங்கள்
குழந்தைகள்
கிப்ஸ் உபயோகிக்கிறார்களா?
கிப்ஸ் உபயோகிக்கும் குழந்தைகள் அதன் ருசியை விரும்புகிறார்கள் –
மகிழ்ச்சி தரும் மணத்தை ரசிக்கிறார்கள்!
பெற்றோர்கள் அதன் விலையை விரும்பு-கிறார்கள் –
அது மிகவும் குறைந்த விலையில் கிடைக்கிறது.
அழகான
நீலம்,
சிவப்பு,
பச்சை
டப்பிகளில்
எல்லோரும் கிப்ஸ் தரும் வெண்மையை மெச்சுகிறார்கள் –
அது பற்களை வெண்மையாக சுத்தம் செய்கிறது, ஈறுகளை ஆரோக்கியமாக வைத்திருக்கிறது!
கிப்ஸ் டென்டிபிரிஸ்
Gibbs
பற்களுக்கு சீரிய குணமளிக்கிறது—குறைந்த செலவில்!

கல்கி பொருளடக்கம்


மலர் 12 இதழ் 45

1953 ஜூன் 7

விஜய ஞு வைகாசி 25உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

பிரபல திருமணம்




மோட்டார் இன்ஷ்யூரன்ஸ்
உங்கள் மோட்டார்களை வான்கார்டில் இன்ஷ்யூர் செய்யுங்கள். மிகக் குறைந்த பிரீமியம் – திருப்திகரமான சேவைகள்.
வான்கார்டு
பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.
"வான்கார்டு ஹவுஸ்", 11 & 12, செகண்டு லேன் பீச்; மதராஸ்-1
N.P.B. 21.


உலகத்தின் உச்சி உணர்ச்சிக்கு
போனிக்ஸ்
விசிறிகளை உபயோகியுங்கள்
PHOENIX
FANS
ஆபிஸிலோ அல்லது வீட்டிலோ இருந்தவண்ணமாகவே, குளிர்ந்த கடற்காற்றையோ, மந்தமாருதத்தையோ அனுபவிக்க, போனிக்ஸ் விசிறிகளைப் பொருத்தினலேயே போதுமானது!
EWI LTD
R.M.S. & CO. LTD., 16, Broadway, Madras.1.
டேபிள், கேபின், பெடஸ்டல், எக்ஸாஸ்ட் ரக விசிறிகளும் கிடைக்கின்றன

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 45

ஏட்டுக் கல்விப் பித்தர்களுக்கு

நம் நாட்டு உயர்தரப் பள்ளிக்கூடங்களில் எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் (அதாவது ஆறும் படிவத்தில்) படிக்கும் மாணவர்களுக்காக ஆங்கில பாட புத்தகம் வருஷந்தோறும் தொகுக்கப் படுகிறது. இந்தத் தொகுப்பு நூலில் ஆப்ரஹாம் லிங்கனின் கெட்டிஸ்பர்க் சொற்பொழிவு சில சமயம் இடம் பெறுவதுண்டு.

ஆப்ரஹாம் லிங்கன் அமெரிக்காவின் ஜனாதிபதிகளில் கீர்த்தி மிகப் பெற்றவர். அமெரிக்காவிலிருந்து அடிமை முறையை ஒழித்து லட்சக்கணக்கான நீக்ரோ அடிமைகளை விடுதலை செய்தவர். இதன்பொருட்டு அமெரிக்காவில் நடந்த உள்நாட்டு யுத்தம் சரித்திரப் பிரசித்தமானது. அந்த விடுதலைப் போருக்குத் தலைமை வகித்த ஆப்ரஹாம் லிங்கனும் உலக சரித்திரத்தில் அழியாத இடம் பெற்று அமரர் ஆனவர். நம் பாரத நாட்டில் காந்தி மகானை ஒரு வெறியன் சுட்டுக் கொன்றதுபோல் அமெரிக்காவில் ஆப்ரஹாம் லிங்கனையும் வெறியன் ஒருவன் சுட்டுக் கொன்றான்.

ஆப்ரஹாம் லிங்கன் ஜனாதிபதி ஆவதற்கு முன்னும், ஜனாதிபதி பதவி வகித்த போதும் பற்பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியதுண்டு. அவற்றில் பல உலகத்தின் மிகச் சிறந்த வசன இலக்கியங்களாகத் திகழ்ந்து வருகின்றன. அவருடைய சொற்பொழிவுகளி லெல்லாம் மிகச் சிறந்தது கெட்டிஸ்பர்க் சொற்பொழிவு. நீக்ரோ அடிமைகளின் விடுதலைக்காக நடத்திய யுத்தத்தில், அடிமை ஒழிப்புக் கட்சியில் நின்று போராடி உயிர் நீத்தவர்களுக்கு கெட்டிஸ்பர்க் என்னுமிடத்தில் ஞாபகச் சின்ன சமாதி எழுப்பப்பட்டது. அந்த இடத்தில் அச் சந்தர்ப்பத்தில் ஆப்ரஹாம் லிங்கன் நிகழ்த்திய பிரசங்கந்தான் 'கெட்டிஸ்பர்க் சொற்பொழிவு' என்று பெயர் பெற்றது.

சுமார் இருபத்தைந்து வரிகளும் பன்னிரண்டே வாக்கியங்களும் அடங்கிய இந்தச் சொற்பொழிவைக் குறித்து ஆங்கில மொழியில் பல பெரிய ஆராய்ச்சிப் புத்தகங்கள் எழுதப் பட்டிருக்கின்றன!

அதை யெல்லாம் காட்டிலும், நமது நாட்டு ஆறும் படிவ மாணாக்கர்களின் ஆங்கில பாட புத்தகத்திலும் அந்தச் சொற்பொழிவு இடம் பெறுகிறதென்றால், அது எவ்வளவு மகிமை பொருந்தியதா யிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை யல்லவா?

"எண்பதும் ஏழுமான ஆண்டுகளுக்கு முன்னால் நம் தந்தையர்கள் இந்தக் கண்டத்தில் ஒரு புதிய ஜாதியைச் சிருஷ்டித்தார்கள்......" என்னும் அந்தச் சொற்பொழிவின் ஆரம்ப வார்த்தைகளைக் கேட்கும்போதே அமெரிக்கர்கள் ரோமாஞ்சனம் அடைவார்கள்.


சரி; அந்த அற்புதமான சொற்பொழிவைப் பற்றி ஆராய்ச்சி செய்வது இங்கே நமது நோக்கம் அன்று. அதை நிகழ்த்திய மகா புருஷரான ஆப்ரஹாம் லிங்கனின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு பகுதியை எடுத்துக் காட்டவே விரும்புகிறோம்.

அமெரிக்க ஜனாதிபதி பதவி தேர்தலுக்கு ஆப்ரஹாம் லிங்கன் நிற்பதென்று தீர்மானிக்கப்பட்ட போது, அவருடைய வாழ்க்கை வரலாறு தேவை என்று அவருடைய நண்பர்கள் வற்புறுத்தினார்கள். அதன்பேரில் ஆப்ரஹாம் லிங்கன் தமது சுய சரிதத்தைத் தமது கைப்படச் சுருக்கமாக எழுதிக் கொடுத்தார். ஆனால் மூன்றாவது மனிதரைப் பற்றி எழுதுவதைப்போல் எழுதினார். அவர் கைப்பட எழுதிய அந்தச் சுய வரலாறு அவருடைய கையெழுத்தில் எழுதியபடியே இன்றும் அமெரிக்காவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஆப்ரஹாம் லிங்கன் தமது இளம் பிராயத்தைப் பற்றித் தாமே எழுதி யிருப்பதைக் கீழே தந்திருக்கிறோம்:—

"ஆப்ரஹாமின் எட்டாவது வயதில், 1816-ம் வருஷம் இலையுதிர் காலத்தில், அவனுடைய தகப்பனார் இண்டியானா மாகாணத்துக்குச் சென்றார். கெண்டக்கியில் ஏற்பட்ட நிலத் தகராறு காரணமாக அவர் இண்டியானாவுக்குப் போக நேர்ந்தது. அங்கே அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் குடியேறினார். காட்டில் நெருக்கமாக இருந்த மரங்களை வெட்டி அப்புறப் படுத்தி நிலத்தைச் சாகுபடிக்குப் பண்படுத்துவது முக்கியமான முன்னணி வேலை

தலைநகர் பிரச்னை !



ஆந்திர காங்கிரஸ் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியினர் புதிய ஆந்திர மாகாணத்தின் தலைநகரமாகக் கர்நூல் நகரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால் ஆந்திர கம்யூனிஸ்டுக் கட்சியினரோ அதைப் பலமாக எதிர்த்து வருகின்றனர்.

யாக இருந்தது. ஆப்ரஹாம் எட்டு வயதுச் சிறுவனாயிருந்தாலும் வளர்ச்சி பெற்றிருந்தான். அவன் கையில் உடனே ஒரு கோடாரி கொடுக்கப்பட்டது. அதுமுதல் இருபத்து மூன்றும் வயது வரையில் ஆப்ரஹாம் அந்த மிக உபயோகமான கருவியை இடைவிடாமல் கையாண்டு வந்தான். உழவு, அறுவடைக் காலங்களில் அந்தந்த வேலைகளையும் செய்தான். இடையில் ஏ பி ஸி டி சொல்லித் தந்த பள்ளிக்கூடங்களுக்குச் சில தினங்கள் சென்றான். பள்ளிக்கூடம் சென்ற நாட்களையெல்லாம் கணக்கிட்டால் ஒரு வருஷத்துக்கு மேற்போகாது. காலேஜு அல்லது அகாடமி கட்டிடத்துக்குள் அவன் நுழைந்ததேயில்லை. அவன் கற்ற கல்வியெல்லாம் வேலை செய்த நேரம் போக ஓழிந்த நேரங்களில் அவனே படித்துத் தெரிந்து கொண்டவை தான். இருபத்து மூன்றுவது வயதில் தகப்பனாரைப் பிரிந்த பிறகு அவன் ஆங்கில இலக்கணம் கற்றான். அவ்வளவு நன்றாகக் கற்கவில்லை. இப்போது பேசவும் எழுதவும் தெரிந்திருக்கும் அளவுக்கு மட்டுமே கற்றான்......

பத்தொன்பதாம் பிராயத்தில் ஆப்ரஹாம் கூலிக்குப் படகு ஓட்டிக் கொண்டு போனான். அவனும் படகின் சொந்தக்காரன் மகனுமாக அப் பிரயாணத்தைச் செய்து முடித்தனர்......

இருபத்தோராவது வயதில் ஆப்ரஹாம் தன்னுடைய தந்தையுடனும் குடும்பத்தாருடனும் இண்டியானாவை விட்டு இல்லினாய் மாகாணத்துக்குப் போகும்படி நேர்ந்தது. காளை மாடுகள் பூட்டிய வண்டிகளில் அவர்கள் பிரயாணம் செய்தார்கள். ஒரு வண்டியை ஆப்ரஹாம் ஓட்டிச் சென்றான். ஸங்காமன் நதிக்கரையில் அவர்கள் குடியேறினார்கள். இங்கே மரக் கட்டைகளினால் வீடு கட்டிக் கொண்டார்கள். மேலும் பல மரக் கட்டைகளைப் பிளந்து பத்து ஏக்கரா நிலத்துக்கு அம்மரப் பிளாச்சுகளைக் கொண்டு வேலி எடுத்தார்கள். பிறகு, அதே வருஷத்தில் விதை விதைத்துத் தானியம் உற்பத்தி செய்தார்கள். மேற்கூறிய மரப் பிளாச்சுகள் சமீபத்தில் சிறிது பிரசித்தி அடைந்தன. ஆனால் ஆப்ரஹாம் பிளந்த மரப் பிளாச்சுகள் அவை மட்டுமல்ல; முன்னும் பின்னும் இம்மாதிரி எவ்வளவோ மரப் பிளாச்சுகள் ஆப்ரஹாம் லிங்கன் பிளந்தது உண்டு !......"

உலக சரித்திரத்தில் என்றும் அழியாத புகழ் பெற்ற ஜனாதிபதி லிங்கனின் இளம் பிராய வாழ்க்கை இவ்வாறு அமைந்திருந்தது. லிங்கன் தம் சுயசரிதக் குறிப்பில் தாம் பிளந்த மரப் பிளாச்சுகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் அல்லவா ! அதற்கு ஒரு விசேஷ காரணம் உண்டு.

ஆப்ரஹாம் லிங்கனை அமெரிக்க ஜனாதிபதி பதவிக்குத் தேர்ந்தெடுக்கும் யோசனை வந்த போது, அவருடைய எதிரிகள் பரிகசித்தார்கள். " ஆப்ரஹாம் லிங்கனுக்கு என்ன தெரியும் ! மரக் கட்டைகளைப் பிளக்கத்தான் தெரியும் !" என்

ளர்கள். மேலும் அதை நன்றாய்ப் பிரசாரம் செய்வதற்காக, ஸங்காமன் நதிக்கரை வேலியிலிருந்து இரண்டு பிளந்த மரக் கட்டைகளைக் கொண்டு வந்து, "இவை ஆப்ரஹாம் லிங்கன் பிளந்தவை!" என்று எழுதித் தொங்க விட்டார்கள்.

இதைக் குறிப்பிட்டுத்தான் ஆப்ரஹாம் லிங்கன் "இன்னும் எத்தனையோ மரக் கட்டைகளை ஆப்ரஹாம் பிளந்து பிளாச்சுகளாகச் செய்ததுண்டு" என்று எழுதினார்.

அமெரிக்காவில் அக்காலத்தில் வசித்தவர்களில் பெரும்பாலோர் ஏட்டுக் கல்விப் பித்தர்கள் அல்ல. ஆகையால் இளம் பிராயத்தில் உடலுழைத்துப் பாடுபட்டவரான ஆப்ரஹாம் லிங்கனையே ஜனாதிபதி பதவிக்குத் தேர்தெடுத்தார்கள்.

இப்படி உடலுழைப்புக்குப் பெருமை தந்த ஜாதியானபடியால்தான் இன்றைக்கு அமெரிக்கர்கள் எல்லாத் தொழில்களிலும், எல்லா அறிவுத் துறைகளிலும் முன்னணியில் நிற்கிறார்கள்.

நமது நாட்டில் மெக்காலே கல்வி முறையின் அடிமைப் பரம்பரையில் வந்துள்ள ஏட்டுக் கல்விப் பித்தர்களுக்கெல்லாம் ஆப்ரஹாம் லிங்கனின் மேற்கூறிய இளம் பிராய வரலாற்றைச் சமர்ப்பணம் செய்கிறோம்.

மங்களூரில் மகாநாடு கூடி, "அரை நாள் ஏட்டுக் கல்வியும் அரை நாள் தொழிலும் பயிலும் கல்வித் திட்டம் குழந்தைகளுக்குத் தீங்கு பயப்பது" என்று தீர்மானம் செய்தார்களே, அந்த ஆசிரியர் சிகாமணிகளுக்கும் சமர்ப்பணம் செய்கிறோம்.

தந்தையின் தொழிலை மகன் கற்றுக் கொள்வது கேவலம் என்றும், பெற்றோர்களுக்கு அவர்களுடைய வேலையில் குழந்தைகள் உதவி செய்வது பாதகம் என்றும் சொல்லும் மகா மேதாவிகளையும் லிங்கனின் இளம் பிராய வரலாற்றைப் படிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ஆப்ரஹாம் லிங்கனுடைய வரலாறு ஒரு தனிப்பட்ட அபூர்வமான உதாரணம் அல்ல. இதிகாச புராணங்களிலிருந்து இக்கால சரித்திரம் வரையில் அம்மாதிரி எத்தனையோ உதாரணங்கள் எடுத்துக் காட்டும்படி இருக்கின்றன.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா இளம் பருவத்தில் பள்ளிக்கூடம் போகவில்லை; மாடு மேய்க்கப் போனார். ஆனால் பிற்காலத்தில் பீஷ்மர், துரோணர் முதலியவர்களாலும் போற்றப்பட்ட இணையற்ற இராஜ தந்திரியாக விளங்கினார்.

திருவள்ளுவர் கைத்தறி நெசவுத் தொழில் செய்து ஜீவனம் நடத்தினார். அத் தொழிலை அவர் பள்ளிக்கூடத்தில் கற்கவில்லை. அவரை வளர்த்த தகப்பனாரிடந்தான் கற்றிருக்க வேண்டும். ஆனால் ஒப்புயர்வற்ற திருக்குறள் என்னும் தமிழ் மறையை அவர் அருளினார்.

வைஷ்ணவ சமயத்தின் ஆச்சாரிய புருஷர்களில் முதன்மை பெற்ற ஸ்ரீ வேதாந்த தேசிகர் செருப்புத் தைக்கும் தொழில் கூடக் கற்றுத் தேர்ந்தார். ஆயினும் படிப்பவர்கள் தலை கிறுங்கும்படியான தத்துவப் பொருள்களை அற்புதமாக எழுதி வைத்து விட்டுப் போனார்.

இப்படிப்பட்ட உதாரணங்கள் முற்காலத்திலும் இந்த நாளிலும் எவ்வளவோ உண்டு. நம் ஏட்டுக் கல்வியாளர்களையே அவர்களுடைய வரலாறுகளை எழுதச் சொன்னால், அபாரமாக எழுதித் தள்ளி விடுவார்கள்.

ஆயினும், நம் குழந்தைகளுக்கு ஏட்டுக் கல்வியுடன் கைத்தொழில் திறமையும் அளிக்கும் கல்வித் திட்டத்தை எதிர்க்கிறார்கள்.

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது!" என்ற பழமொழியை மெய்ப்பிக்க இதைக் காட்டிலும் வேறு என்ன உதாரணம் வேண்டும்!

* * *

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் பயனாக ஏற்பட்ட பெருந் தீமைகளிலே மிகப் பெரும் தீமை இந்த ஏட்டுக் கல்வி முறை.

காந்தி மகானும் அவருடைய தலைமையை ஒப்புக் கொண்ட நம் தலைவர்களும் அந்த ஏட்டுக் கல்வி அடிமைத் தனத்திலிருந்து முதலில் விடுதலை பெற்றார்கள். அதற்கு அறிகுறியாகவே கைராட்டை சுற்றினார்கள். அதனாலேயே அவர்களுடைய தலைமையில் நடந்த போராட்டத்தில் இந்தப் பாரத புண்ணிய பூமி வெற்றியடைந்து அரசியல் சுதந்திரம் அடைந்தது.

சுதந்திர இந்தியாவில் ஏட்டுக் கல்வி அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெற்ற புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்க வேண்டும். அப்போதுதான், நம் தலைவர்கள் நமக்குத் தேடித் தந்த சுதந்திரத்தை நாம் பாதுகாத்துக் கொண்டு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய முடியும்.

அத்தகைய புது சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதற்கு உகந்தது சென்னை இராஜ்யத்தில் அமுலுக்கு வரப்போகும் புதிய கல்வி முறை.

அதைக் கிராமங்களிலே மட்டுமன்றி நகரங்களிலும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஸ்ரீ அகர்வால் கூறுவதை நாம் முற்றிலும் ஆதரிக்கிறோம்.

பழுவேட்டரையர் வருகிறார்!

"பொன்னியின் செல்வன்" கதையைப் படித்து வரும் நேயர்களுக்குத் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையரைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. நாட்டில் ஜனங்களுக்கு என்ன கஷ்டங்கள் நேர்ந்தாலும் பெரிய பழுவேட்டரையர் பொருட்படுத்தாமல் தமது பொக்கிஷ நிலவறையைப் பத்திரமாகப் பூட்டி வைத்திருந்தார். "யுத்தங்கள் நேர்ந்தால், அப்போது செலவழிக்கப் பணம் வேண்டாமா" என்று சொன்னார். அவர் எவ்வளவு பத்திரமாய்ப் பூட்டி வைத்திருந்தாலும், அவரை அறியாமல் பொக்கிஷத்திலிருந்த பணம் நாட்டுக்கு விரோதமாகப் பயன்பட்டது என்பதை அறிந்த போது, அளவில்லாத பச்சாத்தாபம் அடைந்தார்.

இந்திய சர்க்காரின் பொக்கிஷ மந்திரி ஸ்ரீ தேசமுக் பெரிய பழுவேட்டரையராகவே இன்று நமக்குக் காட்சி அளிக்கிறார். சென்னை மாகாணத்தில், தமிழ் நாட்டில், பஞ்சத்தையும் பட்டினியையும் போக்கப் பணம் கேட்டால், "பணத்துக்கு எங்கே போவது? இராணுவச் செலவு இருநூறு கோடி ரூபாய் ஆகிறதே!" என்கிறார்.

இராணுவத்துக்குத் தளவாட சாமான்கள் வாங்கும் துறையில் எவ்வளவு கோடானுகோடி ரூபாய்கள் வீணாகியிருக்கின்றன என்பதைப் பத்திரிகையில் பார்த்து வருகிறோம். அவற்றைத் தடுக்க ஸ்ரீ தேசமுக்கினால் முடியவில்லை.

பஞ்ச நிவாரணத்துக்கு மட்டும் "பணம் இல்லை" என்கிறார். "அது இராஜ்ய சர்க்காரின் பொறுப்பு" என்கிறார். "கடனாக வேண்டுமானால் ஒரு பகுதி தரலாம்" என்கிறார்.

இந்திய சர்க்காரின் பொக்கிஷத்துக்குத் தமிழ் நாட்டிலிருந்து பணம் போவதில்லையா? தமிழ் நாட்டில் மக்கள் பஞ்சத்தால் செத்தால், இந்திய

சர்க்காருக்குப் பொறுப்பு இல்லையா! "இல்லை" என்று சொன்னால், உலகம் ஒப்புக்கொள்ளுமா!

சமீபத்தில் கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தமிழ் நாட்டு மழையில்லாப் பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுப் போன பிறகு நமக்குச் சிறிது தைரியம் உண்டாயிற்று. நேரில் கண்டறிந்தவற்றை எடுத்துச் சொல்லித் தம் சகாவான ஸ்ரீ தேசமுக்கின் மனதை மாற்றி விடுவார் என்று நம்பினோம். அந்த நம்பிக்கை அவ்வளவாகப் பலிக்கவில்லை.

இந்திய சர்க்கார் அழைப்பின் பேரில் சென்னை சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் புது டில்லிக்குப் போய்த் திரும்பியும் வந்து விட்டார்கள்.

எல்லாவற்றுக்கும் "ஒட்டைக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்!" என்னும் பதிலையே ஸ்ரீ தேசமுக் தருகிறார்.

பஞ்ச நிவாரண நிரந்தர வேலைகளுக்காக மொத்தம் மூன்று கோடி ரூபாய் கொடுப்பாராம். அதில் ஒன்றரைக் கோடி சென்னை சர்க்காருக்குக் கடனும். மற்ற ஒன்றரைக் கோடி சென்னை சர்க்காருக்கு அட்வான்ஸாகக் கொடுக்கப்படுமாம். — இவ்விதம் பம்பாயில் ஸ்ரீ தேசமுக் அறிவித்ததாகச் செய்தி வந்து பத்திரிகைகளில் பிரசுரமாகி யிருக்கிறது.

இந்தத் தொகை ஆனைப் பசிக்குச் சோளப் பொரியை ஒத்தது என்று சொல்ல வேண்டுமா!

புது டில்லியிலிருந்து வந்திருக்கும் மற்றொரு செய்தி, மாதம் ஒரு கோடி ரூபாய் வீதம் ஆறு மாதத்துக்குத் தரப்படும் என்றும், அதற்குப் பல நிபந்தனைகள் விதிக்கப்படும் என்றும் தெரியப்படுத்துகிறது.

உண்மையில் என்ன உதவிதான் கிடைக்கப் போகிறது என்று நிச்சயம் தெரியவில்லை.

சென்னை சர்க்கார் சென்ற இரண்டு வருஷங்களில் முக்கியமாக ராயலசீமைப் பஞ்ச நிவாரணத்துக்காகப் பதினேழு கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். பஞ்ச நிவாரணத்துக்காக ஏற்பட்ட இந்தக் கடனை இந்திய சர்க்கார் தள்ளிக் கொடுக்க வேண்டும் என்று கோருகிறார்கள்.

இதைக் குறித்து ஸ்ரீ தேசமுக் வாய் திறப்பதில்லை. "எல்லாம் அக்டோபருக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்!" என்கிறார்.

அக்டோபருக்குப் பிறகு, அதாவது ஆந்திரா பிரிந்து போன பிறகு, அந்தப் புதிய மாகாணத்தின் தலையில் கடனைச் சுமத்துவது தவறு என்று காரணம் சொல்லி விட்டு, பதினேழு கோடி ரூபாய்க் கடனையும் எஞ்சிய சென்னை இராஜ்யத்தின் தலையிலேயே கட்டிவிடப் பார்ப்பாரோ, என்னவோ, தெரியவில்லை.

இவ்விதம் ஸ்ரீ தேசமுக் செய்தால், மிச்சமுள்ள சென்னை இராஜ்யத்தை, அதாவது தமிழ் நாட்டைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். கடவுளுக்கு அந்தச் சிரமத்தை வைக்கக் கூடாது என்றால், இந்திய சர்க்காருடன் தமிழ் நாட்டார் பெரும் போர் நடத்தியே தீரவேண்டும்.

இவ்வாறெல்லாம் விபரீதம் ஒன்றும் விளையாது என்று நம்புவோமாக!

பழுவேட்டரையர் தமது புதிய ராணி நந்தினியுடன் சென்னைக்கு அடுத்த வாரம் விஜயம் செய்கிறார்! (தவறு! தவறு!) நிதிமந்திரி ஸ்ரீ தேசமுக்கும் அவருடைய புதிய மனைவி ஸ்ரீமதி துர்க்காபாயும் விஜயம் செய்கிறார்கள்.

அவர்களை மனமார வரவேற்கிறோம். அவர்கள் தமிழ் நாட்டில் இருக்கும்போது, நேரிலே பஞ்சப் பிரதேசங்களைப் பார்வையிட்ட பிறகாவது, ஸ்ரீ தேசமுக் தம் மனத்தை மாற்றிக் கொண்டு, சென்னை இராஜ்யத்துக்கு அத்தியாவசியமாக வேண்டி யிருக்கும் பஞ்ச நிவாரண நிதியை மீன மேஷம் பார்க்காமல் உடனே கொடுத்து உதவி புரிவார் என்று நம்புகிறோம்.

கோபம் தணித்த தணிகை

வில்லினை யொத்த புருவம்
வளைத்தனை வேலவா! — அங்கோர்
வெற்பு நொறுங்கிப் பொடிப்பொடி
யானது வேலவா! —பாரதியார்

வெற்றி வடிவேலர் தமது வில்லையொத்த புருவத்தை நெறித்தாராம்! உடனே அசுர சக்திகளை மறைத்து வைத்துக் கொண்டிருந்த மலை தவிடு பொடியாயிற்றாம்! அப்பப்பா! முருகப் பெருமானின் கோபம் தான் என்ன கோபம்!

ஆனால், அந்தக் கோபத்தின் விளைவாக நன்மையே விளைந்தது உலகத்துக்கு. தீயசக்திகளின் உருவமாக விளங்கிய சூரபத்மன் அந்தக் கோபக் கனலில் சாம்பராகித் தொலைந்தான். ஆயினும், முருகனுடைய கோபம் தணியவில்லை!

தமிழ்நாட்டு மண்ணின் மகிமையை என்னவென்று சொல்வது! சூர பத்மனைத் தொலைத்து விட்டு வந்து கொண்டிருந்த முருகப் பெருமானின் திருவடிகள் தணிகை மலையில் பட்டது; என்ன விந்தை! வேலவரின் கோபம் அந்தக் கணமே தணிந்தது. உள்ளத்தில் சாந்தி நிலவியது; அன்பு சுரந்தது!

தணிகை மலைக்கு அருகாமையிலுள்ள காட்டில் வேடர் குலக்கொடி வள்ளி தினைப் புனத்தைக் காத்து வந்தாள். அவளை அங்கே கண்டு மணந்த மகிழ்ச்சியுடன் முருகன் திருத்தணியிலே கோயில் கொண்டிருப்பதை அருணகிரியார் கூறுகிறார்:—

வனத்தில் வாழும யிற்குல மொத்திடு
குறத்தி பாரம பக்கிய னைத்துள
மகிழ்ச்சி யோடுதி ருத்தணி பற்றிய பெருமாளே

* * *

திருத்தணிகைக்கு அருகில் தினைப்புனத்தைக் காத்துக் கொண்டிருக்கும் போது ஒரு தடவை வள்ளிக்கு முருகனுடைய திரு உருவத் தோற்றம் நினைவுக்கு வந்து விடுகிறது. உடனே மெய்மறந்து விடுகிறாள். கையிற் பிடித்த கவண் சும்மா இருக்கிறது. கிளிகள் கூசாமல் வந்து தானியங்களைக் கொத்தித் தின்னவும் தொடங்கி விடுகின்றன. திடீரென்று சுயநினைவு வந்து சுற்றுமுற்றும் பார்த்தாள் வள்ளி. கிளிகளை ஓட்டுவதற்குப் பதிலாகப் பாட்டுப் பாடத் தொடங்கினாள்:—

"கூடிக் குலாவி மெத்த
குகனோடு வாழ்ந்த தெல்லாம்
வேடிக்கையல்ல வடி—கிளியே!
வெகு நாளைத் தொந்தமடி!"

இந்த வள்ளியின் நிலையைத் தான் நமது சித்திரக்காரர் இந்த இதழின் அட்டைச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார். தினைப்புனம் காக்கும் வள்ளியையும், அவள் அகக் கண் முன் தோன்றும் முருகனையும், திருத்தணிகை மலையையும், அதன் மேல் உள்ள கோயிலையும் காட்டியிருக்கிறார்.

திருத்தணியும் தமிழகமும்

திருத்தணிக்கும் தமிழ் மக்களுக்கும் உள்ள தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டதன்று; வெகுகாலையத் தொடர்பு. "தமிழ்க் கடவுளாகிய முருகனும் தமிழ்நாட்டு மலைமகளான வள்ளியும் மணம் புரிந்துகொண்ட இடம்" என்றால், அந்த ஊருக்கும் தமிழகத்துக்கும் உள்ள தொடர்பைப் பற்றி வேறு என்ன சொல்ல வேண்டும்!

அத்தகைய திருத்தணிகை தற்சமயம் சித்தூர் ஜில்லாவில் சேர்ந்தா யிருப்பதால் தமிழ் மக்களில் பலர் கவலையுறத் தொடங்கி யிருக்கிறார்கள்.

சித்தூர் ஜில்லாவில் சித்தூர், புத்தூர், திருத்தணி பிரதேசங்களில் வாழுகின்றவர்களில் மிக மிகப் பெரும்பாலோர் தமிழர்களே. திருத்தணி பட்டணத்தில் சில நாளைக்கு முன்பு பஞ்சாயத்துத் தேர்தல் நடந்தது. திரு. விநாயகம் எம். எல். ஏ. தமிழர் கட்சி திரட்டித் தமிழ் அபேட்சகர்களைத் தேர்தலில் நிறுத்தி நல்ல முறையில் பிரசாரமும் செய்தார். அதன் பயனாக, திருத்தணி பஞ்சாயத்தில் ஒரே ஒரு ஸ்தானத்தைத் தவிர மற்றவை யெல்லாம் தமிழர்களுக்கே கிடைத்தன. திருத்தணி தமிழகத்தின் ஒரு பகுதிதான் என்பதை மேற்படி தேர்தல் ஐயமற நிரூபித்தது.

1911-ம் ஆண்டு வரையில் திருத்தணி, சித்தூர், புத்தூர் பிரதேசங்கள் வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்திருந்தன. அந்த ஆண்டில் நிர்வாக சௌகரியத்தின் நிமித்தம் ஜில்லாக்களைப் புனர் நிர்மாணம் செய்தபோது சித்தூரைத் தனி ஜில்லாவாக அமைத்தார்கள். அது இப்போது தமிழர்களுக்குக் கவலை தரக் காரணமாகி விட்டது.

ஆந்திரப் பிரிவினைக் கிளர்ச்சி தீவிரமாக நடந்த போதும், தமிழ் மக்கள் தங்கள் பெருந்தன்மை காரணமாக அந்த வெறிச்சுழலில் அகப்பட்டுக் கொள்ளவில்லை. கொஞ்சம் மிதோன்மத்தமாக இருந்து விட்டார்கள் என்றுகூடச் சொல்லலாம்.

மேற்படி காரணங்களினால், ஆந்திர இராஜ்யப் பிரிவினை பற்றிய இந்திய சர்க்காரின் உத்தரவில், "விவாதத்துக் கிடமில்லாத ஜில்லா" என்ற தலைப்பில் சித்தூர் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

பெல்லாரியில் உள்ள கன்னடிய சகோதரர்கள் வெகு காலமாகத் தீவிரக் கிளர்ச்சி செய்து வந்தார்கள். ஆகையால் ஆந்திர ராஜ்ய உத்தரவு போடும்போதே, பெல்லாரிப் பிரச்னையைத் தீர்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. நீதிபதி மிஸ்ரா வந்து பெல்லாரி தாலுகா மைசூர் ராஜ்யத்துக்குப் போகவேண்டியதே என்று தீர்ப்பும் கூறிவிட்டார். அதை இந்திய சர்க்காரும் ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

தமிழ் நாட்டுத் தலைவர்களோ, கடைசி நேரத்தில்தான் விழித்தெழுந்து போராட்டம் துவங்கினார்கள். சென்னைப் பட்டினம் பறிபோகாமல் பாதுகாப்பதே பிரம்மப் பிரயத்தனமான காரியம் ஆகிவிட்டது. கடைசியில், ராஜாஜியின் பிடிவாதமான தார்மிகப் போராட்டத்தினால்தான் அதைச் சாதிக்க முடிந்தது.

இந்தப் பெரும் காரியத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் திருத்தணி முதலிய சித்தூர் ஜில்லாப் பிரதேசத்தில் கவனம் செலுத்தத் தவறி விட்டார்கள்.

காரணம் எதுவா யிருந்தாலும் திருத்தணியில் வாழும் தமிழர்களுக்கு இந்நிலைமை கவலை தருவது இயல்பேயல்லவா! "நாமும் தூங்கிவிடக் கூடாது; இனிமேலாவது நமது கோரிக்கையை வலியுறுத்த வேண்டும்" என்று கிளர்ச்சி ஆரம்பித்தார்கள். அஹிம்சை முறையில் கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள். பொதுக்கூட்டம், ஊர்வலம், சாத்விக மறியல் ஆகிய முறைகளைக் கையாண்டார்கள்.

இந்த நியாயமான போராட்டத்தில் அவர்களுக்குப் பல சோதனைகள் நேர்ந்தன.

சித்தூர் ஜில்லாத் தமிழர்கள் உதவியும் அனுதாபமும் எதிர்பார்க்கக் கூடிய இடங்களிலிருந்து எதிர்ப்பு வருவதைக் கண்டு திகைக்க நேர்ந்தது.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியார் "திருத்தணிக் கிளர்ச்சி அனாவசியம்" என்று அபிப்பிராயம் கூறினார்கள்.

இதனால் வருத்தம் அடைந்த போதிலும், சோர்வு அடையாமல் திருத்தணிப் பகுதித் தமிழர்கள் சாத்விக கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்தினார்கள்.

ஆனால் அக்கம் பக்கத்திலுள்ள ஆந்திர சகோதரர்கள் அக்கிளர்ச்சியைச் சாத்விகமாக நடைபெறுவதற்கு விடவில்லை.

சர்வதேச மனப்பான்மை யுள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஆந்திர கம்யூனிஸ்டுகளும் தமிழர்களுக்கு விரோதமாகத் தடி எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள். புத்தூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் புகுந்து தடியடித் தொண்டை நடத்தினார்கள்.

இதன்பேரில் முதன் மந்திரி ராஜாஜியும் "திருத்தணிக் கிளர்ச்சியை நிறுத்துங்கள். விரும்பத் தகாத விளைவுகள் அதிலிருந்து ஏற்படத் தொடங்கி விட்டன! எல்லைக் கமிஷன் எல்லாவற்றையும் கவனிக்கும்!" என்று கூறி விட்டார்.

திருத்தணிப் பகுதியில் உள்ள தமிழர்களுக்கு நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்கள் இப்போது மிக மிகத் தர்ம சங்கடமான நிலைமையில் இருக்கிறார்கள்.

தமிழ் நாட்டுத் தலைவர்கள், "கிளர்ச்சி இப்போது வேண்டாம். எல்லைக் கமிஷன் நியமிக்கப் படும்போது உங்கள் பிரச்னை தீர்த்து வைக்கப் படும்" என்று கூறுகிறார்கள்.

"எல்லைக் கமிஷன் தீர்ப்புக்கு இந்தப் பிரச்னை விடப்படும் என்பது என்ன நிச்சயம்? சித்தூர் ஜில்லாவை 'விவாதத்துக்கு இடமில்லாத ஜில்லா' என்று இந்திய சர்க்கார் உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறதே!" என்று திருத்தணித் தமிழர்கள் கேட்கிறார்கள். இதற்குத் தக்க பதில் தமிழ் நாட்டுத் தலைவர்களால் சொல்ல முடியவில்லை.

கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதினால் புத்தூரில் நடந்தது போன்ற விபரீத விளைவுகள் ஏற்படவும் இடம் இருக்கிறது.

அப்படி நேரிடாமல் தடுப்பது ராஜாஜி சர்க்காரின் பொறுப்பு என்று சொல்லுவதில் பயனில்லை. ராஜாஜி சர்க்கார் இப்போது எந்த நிலையில் இருந்து நிர்வாகம் நடத்துகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே.

எத்தனை நேர்மையாகச் செய்யும் காரியத்திலும் குற்றம் கண்டு பிடித்து அவதூறு கூற ஆந்திர அரசியல் வாதிகள் தயாராயிருக்கிறார்கள்.

ஆகவே, திருத்தணித் தமிழர்கள் ராஜாஜியிடம் தங்கள் நேர்மையான கட்சிக்கு ஆதரவும் அனுதாபமும் எதிர்பார்ப்பது போல், ராஜாஜியும் திருத்தணி தமிழர்களிடம் தமது தர்ம சங்கடமான நிலைமைக்கு அனுதாபத்தை எதிர்பார்க்கிறார். எந்தப் பக்கம் போனாலும் திருத்தணிப் பகுதித் தமிழர்களுக்குக் கஷ்டமும் தொல்லையும் இருக்கத்தான் செய்கின்றன.

இத்தகைய நிலைமையில் திருத்தணிப் பகுதியில் கிளர்ச்சி நடத்தி வந்த எல்லைப் பாதுகாப்புக் கமிட்டியார் கடைசியாகச் செய்திருக்கும் தீர்மானத்தை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

அந்தப் பகுதியில் கிளர்ச்சியை நிறுத்தி வைத்து விட்டு, சென்னை நகரில் தொடர்ந்து நடத்துவது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

சென்னையில் நடத்தும் கிளர்ச்சியில் மறியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மற்றப்படி பொதுக் கூட்டம், ஊர்வலம் முதலிய கிளர்ச்சி முறைகளைக் கடைப்பிடிக்கலாம். சித்தூர்ப் பகுதி தமிழர்களின் கோரிக்கையை இந்திய சர்க்காருக்கு ஞாபகப் படுத்திக் கொண்டே இருக்கலாம்.

இத்தகைய கிளர்ச்சிக்குச் சென்னை நகரவாசிகளும் தமிழர்கள் அனைவரும் தங்கள் ஆதரவை அளித்து வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

திருத்தணி மலையில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் தமது திருக் கண்ணோட்டத்திற்கு உட்பட்ட பகுதியிலுள்ள தமிழர்களைக் கைவிடமாட்டார் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். அந்த ஆறுதல் ஒன்றையே திருத்தணி, சித்தூர், புத்தூர் தமிழர்களுக்கும் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகின்றோம்.

களஞ்சியம் திறந்தது!

மகா கவி ரவீந்திரநாத் டாகூர், புத்த பகவானின் சரித்திர சம்பந்தமான பின் வரும் அற்புதமான கதையை அமர கவிதையில் அமைத்து அளித்திருக்கிறார் :—

சிராவஸ்தி நாட்டில் கொடிய பஞ்சம் பரவியிருந்தது. புத்தர் பெருமான் தமது சீடர்களைப் பார்த்து "உங்களில் யாரால் பசித்தவர்களுக்கு அன்ன மிடும் பணியை ஏற்றுக் கொள்ள இயலும்?" என்றார்.

செல்வச் சீமானாகிய ரத்னாகரன் தலையைக் குனிந்த வண்ணமாக, "பிரபு! இந்த நாட்டில் இப்போது பசித்தவர்களுக்கு அன்னம் அளிக்க என்னிடமுள்ள பணமெல்லாம் போதாதே?" என்றான்.

சேனாதிபதி ஜயசேனன், "ஜனங்களின் பசிப் பிணியை நீக்க என் உயிரை வேணுமானாலும் கொடுப்பேன். ஆனால் என் களஞ்சியத்தில் தான்யம் இல்லையே?" என்றான்.

ஏராளமான நன்செய் புன்செய் நிலங்களுக்கு அதிபதியான தர்மபாலன் "மழை இல்லாமல் என் வயல்கள் காய்ந்து விட்டனவே? அரசருக்குரிய வரியையே என்னால் செலுத்த முடியவில்லை!" என்றான்.

இரவலன் மகளாகிய ஸுப்ரியை எழுந்தாள். எல்லாருக்கும் பணிவுடன் வணங்கி விட்டு, "குருதேவா! நான் பசித்தவர்களுக்கு அன்னமிடுவேன்!" என்றாள்.

அனைவரும் பேராச்சரியம் அடைந்து "என்ன சொன்னாய்? உன்னால் அது எப்படி முடியும்?" என்று கூவினார்கள்.

"உங்கள் எல்லாரிலும் நான் எளியவள். ஆனால் அதுதான் எனக்குள்ள அநுகூலம். என்னுடைய பொக்கிஷமும் களஞ்சியமும் உங்கள் எல்லாருடைய வீடுகளிலும் இருக்கின்றன!" என்றாள் ஸுப்ரியா.

இந்த அற்புதமான புத்த பகவானுடைய வரலாற்றுக் கதைக்கு உதாரண புருஷராக நமது காலத்தில் விளங்கியவர் தேப் பெருமான் கல்லூர் அன்னதான சிவன். அவர் பரம ஏழை. கையில் காலணா இல்லாதவர். கந்தைத் துணி உடுத்திக் கால் நடையாக ஊர் ஊராக நடந்து சென்றவர். ஆயினும் அவர் தம் வாழ்நாளில் லட்சக்கணக்கான மக்களுக்கு அன்னதான கைங்கரியம் செய்தார்.

நாட்டில் தர்ம சிந்தை படைத்த தனவர்தர்கள், சாதாரண குடும்பஸ்தர்கள், — எல்லாருடைய வீட்டுத் தானியக் களஞ்சியங்களும் பணப் பெட்டிகளும் அன்னதான சிவனைக் கண்ட உடனே திறந்து கொண்டன.

* * *

சமீப காலத்தில் தமிழ் நாட்டில் மழை இன்மையால் பல பிரதேசங்களில் பசிக் கொடுமை பரவியிருக்கிறது.

அதைக் கேவலம் அரசியல் துர்நோக்கங்களுக்காகச் சில தூர்த்தர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

"பட்டினிச் சாவுப் பத்திரிகைகள்" இருக்கின்றன. அவற்றின் "விசேஷ பிரேத நிருபர்கள்" இருக்கிறார்கள். எங்கேயாவது அனாதைப் பிரேதம் கிடப்பதாகத் தெரிந்தால், உடனே இந்த விசேஷப் பிரேத நிருபர்கள் காமெராவும் கையுமாய் அங்கே ஓடுகிறார்கள். போட்டோ எடுத்துப் பத்திரிகைக்கு அனுப்புகிறார்கள்.

* * *

பாமரப்போன அரசியல் பதவி மோகத்தினால் மனிதர்கள் இவ்விதம் அசுரர்களாக மாறி வரும் நாளில், அன்னதான சிவன் அவர்களுடைய அரும் பெரும் பணிகளை நாம் நினைவு படுத்திக் கொள்வது மிக நலமாகும்.

கையில் காலணா இல்லாத பரம ஏழையான அன்னதான சிவன் லட்சக்கணக்கானவர்களுக்கு உணவு அளித்தார் என்றால், இந்தக் காலத்தில் செல்வாக்கும் வசதியும் உள்ளவர்கள் அவசியமான இடங்களில் அன்னதானத்துக்கு ஏற்பாடு செய்து, பட்டினிச் சாவுகளைத் தடுக்க முடியாதா! மனமிருந்தால் கட்டாயம் முடியும்.

* * *

கும்பகோணத்தில் ஜூலை 13உ 14உகளில் அன்னதான சிவன் ஞாபகார்த்த விழா சிறப்பாகக் கொண்டாடப்படும் என்பதை யறிந்து மிகவும் மகிழ்ச்சி யடைகிறோம். ஸ்ரீ கி. சுப்பிரமணியம் விழாவைத் திறந்து வைக்கிறார். ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் விழாவுக்குத் தலைமை வகிக்கிறார். தஞ்சாவூர் ஜில்லாப் பிரமுகர்கள் பலரும் அன்னதான சிவன் விழாவில் கலந்து கொள்கிறார்கள்; ஒத்துழைத்துப் பணி செய்கிறார்கள்.

இந்தப் புண்ணியத் திருவிழாவை யொட்டி ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னதானம் செய்யப்படும் என்று அறிந்து மகிழ்கிறோம்.

அன்னதான சிவன் சங்கத்தாரை வாழ்த்துகிறோம். காலத்துக் கேற்றவாறு அவர்கள் புரியும் அரும் பெரும் அன்னதானத் தொண்டைப் போற்றிப் பாராட்டுகிறோம்.



அத்தியாயம் 20

பறவைக் குஞ்சுகள்

கொடும்பாளூரிலிருந்து வானதி பழையாறை நகருக்கு வந்த புதிதில், சோழ நாட்டின் நீர் வளம் அவளை ஒரே ஆச்சரியக் கடலில் ஆழ்த்தி யிருந்தது. கொடும்பாளூர்ப் பக்கத்தில் நதி ஒன்றும் கிடையாது. ஏரிகள்தான் உண்டு. மழை பெய்யும் காலங்களில் ஏரிகள் தண்ணீர் நிறைந்து ததும்பிக் கொண்டிருக்கும். கோடைக் காலத்தில் காய்ந்து விடும். இம்மாதிரி இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு தண்ணீர் ததும்பிச் சுழிகளும் சுழல்களுமாய் ஓடும் நதிகளும், வாய்க்கால்களும், கண்ணிகளும் அங்கே இல்லை. தாமரையும் செங்கழுநீரும் தழைத்துப் பூத்துக் கொழித்த தடாகங்களை வானதி பிறந்த ஊரில் பார்க்க முடியாது. இவற்றையெல்லாம் வானதி பார்த்துப் பார்த்து மெய்மறந்து உட்கார்ந் திருப்பாள். குளத்து மீனுக்குக் குடைபிடித்த தாமரை இலைகளின் மீது முத்துக்கள் போன்ற நீர்த்துளிகள் அங்கு மிங்கும் ஓடிக் களிப்பதைப் பார்த்து மகிழ்வாள். கமல மலர்களையும் அல்லிப் பூக்களையும் கருவண்டுகள் சுற்றிச் சுழன்று வந்து ஆடிப் பாடுவதைக் கண்டதும் பரவசமாகி விடுவாள். பொழுது போவதே தெரியாமல் போய் விடும்.

ஒரு சமயம் வானதியும் குந்தவையும் செம்பியன் மாதேவி அழைத்ததின் பேரில் திருநல்ல*த்துக்குப் போயிருந்தார்கள். வசந்த மாளிகையில் தங்கியிருந்தார்கள். செம்பியன் மாதேவியும் குந்தவையும் அடிக்கடி சைவ சமய குரவர்களின் வரலாறுகளைப் பற்றியும், அவர்களுடைய பதிகங்களில் கனிந்து சொட்டும் பக்தி ரஸத்தைப் பற்றியும் பேசத் தொடங்கி விடுவார்கள். செம்பியன் மாதேவி, மேற்கெழுந்தருளிய தேவரான தம் அருமைக் கணவர் கண்டராதித்தருடன் தாம் க்ஷேத்திர யாத்திரை செய்த வரலாறுகளையும் சொல்லத் தொடங்கி விடுவார். அதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பதில் வானதிக்குச் சிரத்தை இருப்பதில்லை. அதைக் காட்டிலும் வசந்த மாளிகையை யொட்டியிருந்த தோட்டங்களிலே சென்று பறவைகளின் இனிய கீதங்களைக் கேட்பதிலும், தடாகத்தில் பூத்துக் குலுங்கிய தாமரை மலர்களைச் சுற்றி வந்து கொண்டிருந்த கருநீல வண்டுகளின் இன்ப ரீங்காரத்தைக் கேட்பதிலும் அவளுக்கு ஆர்வம் அதிகமாயிருந்தது. இன்னும் மாளிகையின் ஒரு பக்கமாகச் சென்று கொண்டிருந்த

* இக் காலத்தில் திருநல்லத்துக்குக் கோனேரி ராஜபுரம் என்று பெயர் வழங்குகிறது.

நதி வெள்ளம் சுழி போட்டுக் கொண்டு ஓடுவதையும் அந்தச் சுழிகளில் அழுகிய செக்கச் சிவந்த கடம்ப மலர்கள் சுழன்று கொண்டிருப்பதையும் பார்க்க அவளுக்கு மிக்க ஆர்வம் இருந்தது. கொடும்பாளூர் பகுதிகளில் இம்மாதிரி மனோரம்யமான காட்சிகளைப் பார்க்க இயலாதல்லவா?

ஒரு நாள் மழவரையர் மகளாரும் இளைய பிராட்டி குந்தவையும் சுவாரஸ்யமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். வானதி அவர்கள் அருகில் சென்றபோது இளைய பிராட்டி "வானதி! நீ தோட்டத்துக்குப் போ! சற்று நேரத்துக்கெல்லாம் நானும் வருகிறேன்!" என்றார். வானதி குதூகலத்துடன் துள்ளிக் குதித்து ஓடினாள். தோட்டத்தில் சற்று நேரம் சுற்றி அலைந்து விட்டுத் தாமரைக் குளக்கரைக்குச் சென்றாள். குளக்கரையில் வானை மறைத்துக் கொண்டு வளர்ந்திருந்த மரங்கள் பல இருந்தன. அவற்றில் நெடிதுயர்ந்து பல்கிப் பரவித் தழைத்திருந்த இலுப்பை மரம் ஒன்றிருந்தது. இலுப்பை மரம் பூக்கும் காலம் அது. அந்த மரத்தடியில் இலுப்பைப் பூக்கள் உதிர்ந்து பூமியை அடியோடு மறைத்துக் கொண்டிருந்தன. அவற்றின் நறுமணம் கம்மென்று வீசித் தோட்டம் முழுவதிலும் பரவியிருந்தது. அந்த மரத்தடியில் ஒரு பெரிய வேரின் பேரில் வானதி உட்கார்ந்தாள். அடிமரத்தில் சாய்ந்து கொண்டு மேலும் கீழும் நாலாபுறமும் பார்த்துக்கொண்டிருந்தாள். பறவை இனங்களின் இனிய கீதங்கள் அவளுடைய செவிகளில் அமுத வெள்ளமாகப் பாய்ந்து கொண்டிருந்தன. அவள் அந்த நாள்வரை அநுபவித்திராத இன்ப உணர்ச்சி அவள் இதயத்தில் தோன்றியது. அந்த உள்ளக் களிப்பு அடிக்கடி பொங்கித் ததும்பி அவள் மேனியெல்லாம் பரவியது. வாழ்க்கை இவ்வளவு ஆனந்த மயமாக இருக்கக் கூடும் என்று வானதி அன்று வரை கனவிலும் கருதியதில்லை.

அந்த மரத்தடியிலிருந்து பார்த்தால் சற்றுத் தூரத்தில் ஆற்று வெள்ளம் தெரிந்தது. அவ்வப்போது நதி ஓட்டத்தின் இனிய காட்சிகளையும் அவள் மரங்களின் இடைவெளி வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒருமுறை யாரோ ஒரு வாலிபன் ஆற்றில் நீந்திக் கொண்டிருப்பதும் தெரிந்தது. செந்நிற நீர்ப் பிரவாகத்தில் அவனுடைய பொன்னொளிர் மேனி பாதி தண்ணீரிலும் பாதி மேலேயும் மிதந்த வனப்பு மிக்க காட்சி அவள் உள்ளத்தைக் கவர்ந்தது. சீச்சீ! யாரோ இளம் பிள்ளை ஒருவனுடைய தோற்றத்தில் தனது கவனம் செல்வது என்ன அசட்டுத் தனம்?—நாணம், மடம் என்னும் இயல்புகளைத் தன் உடன் பிறந்த செல்வங்களாகக் கொண்டிருந்த வானதிக்கு அந்த எண்ணம் மிக்க கூச்சத்தை உண்டாக்கியது. அவளுடைய உள்ளக் கட்டுப்பாட்டையும் மீறிக் கண்கள் மீண்டும் இரண்டொரு தடவைகள் நதிப் பக்கம் சென்றன.

வானதிக்குத் தன் பேரில் கோபமே உண்டாயிற்று. அங்கிருந்து எழுந்து போய் விடலாமா என்று எண்ணினாள். அச்சமயம் வேறொரு நிகழ்ச்சி அவளுடைய உள்ளத்தைக் கவர்ந்தது.

அவள் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகாமையில், தலைக்கு மேலே பறவைக் குஞ்சுகளின் கூக்குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளுக்கு ஏக காலத்தில் பரிதாபத்தையும் திகிலையும் உண்டாக்கின.

ஒரு மரக் கிளையில் கவணை போலப் பிரிந்த இடத்தில் பட்சிக் கூடு ஒன்று இருந்தது. அதில் சில பறவைக் குஞ்சுகள் தலைகளை நீட்டிக் கொண்டிருந்தன. அவைதான் 'கிறீச்' 'கிறீச்' என்று மெல்லிய குரலில் சத்தமிட்டன. அந்தச் சத்தத்தில் பயமும், அபாய அறிவிப்பும், பரிதாபமான அடைக்கல விண்ணப்ப முறையீடும் கலந்திருந்தன. அவ்விதம் கலந்திருந்ததாக வானதியின் செவிகளில் ஒலித்தன. கூட்டுக்கு அருகில் மரக் கிளையில் ஒரு காட்டுப் பூனை ஏறிக் கொண்டிருந்தது. மெள்ள மெள்ள அது கூட்டை நெருங்கிவந்துகொண்டிருந்தது!

அதைப் பார்த்த வானதி "ஐயோ! ஐயோ!" என்று சத்தமிட்டாள். அடுத்த கணத்தில், "என்ன? என்ன?" என்று ஒரு குரல் கேட்டது. யாரோ விரைந்து ஓடி வரும் காலடிச் சத்தமும் கேட்டது. வானதி அந்தப் பக்கம் பார்த்தாள். சற்று முன் நதி வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்த வாலிபன்தான் கரையேறி ஓடிவந்து கொண்டிருந்தான் என்பதை அவள் அறிந்தாள்.

அதே சமயத்தில் எங்கிருந்தோ இரண்டு பெரிய பறவைகள் வந்து விட்டன. கூட்டைச் சுற்றி அவை கராபுரா வென்று கத்திக் கொண்டு வட்டமிட்டன. அவை அக்குஞ்சுகளின் தாயும்

தகப்பனுமாகவே இருக்க வேண்டும். குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்காகவே அவை அவ்விதம் அவசரமாக வந்திருக்க வேண்டும் என்பதை வானதி உணர்ந்தாள். இரண்டும் நீள மூக்குகள் உள்ள பறவைகள். மரங்கொத்திப் பறவைகள் என்பவை இவைதான் போலும். ஒரு பறவை கூட்டைச் சுற்றி அதிகமாக வட்டமிட்டது. இன்னொன்று பூனையை நெருங்கி அதை மூக்கினால் கொத்தித் தாக்கும் பாவனையுடன் சத்த மிட்டது! பூனையை அந்தப் பறவையினால் ஒன்றும் செய்துவிட முடியாது. பூனையின் வாயில் அகப்பட்டால் மறு கணம் அதன் வயிற்றுக் குள்ளேயே போய்விட வேண்டியது தான். ஆயினும் தன் குஞ்சுகளைக் காப்பதற்காக அந்தப் பறவை அப்படித் தீரத்துடன் போராடியது. தாயையும் தகப்பனையும் இளம் பிராயத்திலேயே இழந்துவிட்ட வானதிக்கு அந்தக் காட்சி மிக்க மனக் கசிவை உண்டாக்கியது.

பூனை சற்றுச் சும்மா இருந்துவிட்டுத் திடீரென்று முன்னங் கால் ஒன்றைக் கூட்டின் பக்கம் நீட்டியது. பறவைக் குஞ்சுகள் இருந்த கூட்டின் ஒரு மூலையையும் தொட்டு விட்டது.

வானதி மறுபடியும் அலறினாள். இதற்குள் அந்த வாலிபன் நெருங்கி வந்து விட்டான். அவனை அருகில் பார்ப்பதற்கு வானதிக்கு மிக்க கூச்சமாயிருந்தது. மறுமொழி சொல்ல வரவில்லை. பேசுவதற்கு நா எழவில்லை. சமிக்ஞையினால் பட்சியின் கூட்டைச் சுட்டிக் காட்டினாள்.

அதுவரையில் அந்தப் பெண்ணுக்குத் தான் ஏதோ அபாயம் என்று எண்ணிக் கொண்டிருந்தான். வானதி சுட்டிக் காட்டிய இடத்தை அண்ணாந்து பார்த்தான். மறுபடியும் வானதியை நோக்கிப் புன்னகை புரிந்தான். அவனுடைய பார்வையும் புன்னகையும் வானதியின் நெஞ்சத்தை நெகிழச் செய்து, பறவைக் குஞ்சுகளின் நிலையைக் கூட மறந்து விடச் செய்தன.

ஆனால் வாலிபன் உடனே அங்கிருந்து விரைந்து ஓடி, மரக் கிளையில் பறவைக் கூடு இருந்த இடத்துக்கு நேர் கீழே சென்று நின்றான்.

காட்டுப் பூனையை அதட்டினான். அது கீழே குனிந்து பார்த்து உருமியது. "பொல்லாத பூனையாயிருக்கிறதே!" என்று சொல்லிக் கொண்டே தரையிலிருந்து ஒரு கல்லைப் பொறுக்கி வேகமாக விட்டெறிந்தான். கல் பூனையின் மீது படாமல் அதன் அருகில் மரக் கிளையைத் தாக்கியது. பூனை உடனே தாவி வேறு கிளையில் பாய்ந்து, அங்கிருந்து இன்னொரு அடர்ந்த மரத்துக்குச் சென்று, பின்னர் மறைந்து விட்டது.

ஆனால் இதற்குள் வேறொரு விபரீதம் நேர்ந்து விட்டது. பூனையின் ஒருகால் பறவைக் கூட்டின் மூலையைப் பற்றி இழுத்ததல்லவா? அதனால் சிறிது ஆடிப் போயிருந்த கூடு, வாலிபனின் கல்லெறி மரக்கிளையில் தாக்கிய வேகத்தினால் அதிகமாக நிலைகுலைந்தது. சிறிது சிறிதாக அந்தக் கூடு கிளையின் கப்பிலிருந்து நழுவியது. முழுதும் நழுவி விழுந்திருந்தால் காட்டுப் பூனை வாயிலிருந்து தப்பிய குஞ்சுகள் தரையில் விழுந்து மாண்டிருக்கும்! நல்லவேளையாகக் கூட்டின் ஒரு மூலை கிளையைக் கவ்விக் கொண்டிருந்தது. கூடு அதில் இருந்த குஞ்சுகளுடன் கீழே தொங்கி ஊசலாடியது. குஞ்சுகளின் உயிரும் ஊசலாடின. மரங்கொத்திப் பறவைகள் முன்னைவிடப் பீதியுடன் அலறிக் கொண்டு குஞ்சுகள் இருந்த கூட்டைச் சுற்றிச் சுற்றிவந்தன. காற்று கொஞ்சம் வேகமாக அடித்தால் கூடு தரையில் விழுந்துவிடும். அவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தால் குஞ்சுகள் பிழைப்பது துர்லபந்தான்.

வாலிபன் ஒரு கண நேரம் யோசித்தான். முதலில் மரத்தின் மேல் தாவி ஏற அவன் எண்ணியதாகத் தோன்றியது. மறு கணத்தில் மனத்தை மாற்றிக் கொண்டதாகக் காணப்பட்டது.

வானதியைப் பார்த்து, "பெண்ணே! சற்று இங்கே வா! கூடு கீழே விழுந்தால் உன் சேலைத் தலைப்பினால் பிடித்துக் கொள்! இதோ நான் ஒரு நொடியில் திரும்பி வருகிறேன்!" என்று சொல்லி விட்டு ஓடினான்.

அவன் சொன்னபடியே மிகச் சொற்ப நேரத்தில் திரும்பி வந்தான். ஆனால் இப்போது அவன் நடந்து வரவில்லை. யானை மீது ஏறிக்கொண்டு வந்தான். வானதிக்கு அவன் என்ன செய்யப் போகிறான் என்பது ஒருவாறு தெரிந்து விட்டது. ஆகையால் அங்கிருந்து அப்பால் சென்றாள். அருகிலிருந்த தாமரைக் குளத்தின் படிக்கட்டை அடைந்தாள். சில படிகள் இறங்கி உட்கார்ந்து கொண்டு யானை மேல் வந்த வாலிபன் என்ன செய்கிறான் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

யானை மரத்தடிக்கு வந்ததும் நின்றது. அதன் முதுகில் இருந்தபடி வாலிபன்

பறவைக் கூட்டைக் கையினால் தாங்கி முன்னால் அது இருந்த கிளைப் பொந்திலே ஜாக்கிரதையாக வைத்தான். தாய்ப் பறவையும் தகப்பன் பறவையும் இப்போது முன்னைவிட அதிகமாகக் கூச்சலிட்டன. ஆனால் அந்தக் கூச்சலில் இப்போது குதூகல த்வனி மேலிட்டிருப்பதாகத் தோன்றியது.

வாலிபன் பின்னர் திரும்பிச் சுற்று முற்றும் பார்த்தான். "பெண்ணே! எங்கே போனாய்?" என்று கூவினான். வானதி பெரிதும் நாணம் அடைந்து மௌனமா யிருந்தாள். வாலிபன் யானையின் மீதிருந்து கீழிறங்கினான். பின்னர், மறுபடியும் சுற்று முற்றும் பார்த்தான்.

வானதி மனதில் எதையோ நினைத்துக் கொண்டாள். அந்த நினைவு அவளுக்குப் பெரும் வேடிக்கையா யிருந்தது. அவளை அறியாமல் சிரிப்பு வந்தது. உரத்த சத்தத்துடன் கலகலவென்று சிரித்தாள்.

அதைக் கேட்டு விட்டு வாலிபன் குளத்தின் படிக்கட்டுக்கு வந்தான். வானதியைப் பார்த்து, "பெண்ணே! ஏன் சிரிக்கிறாய்? நீ இவ்வளவு பலமாகச் சிரிக்கும்படியாக இப்போது என்ன நேர்ந்து விட்டது?" என்றான்.

வாலிபனின் குரல் வானதியின் செவிகளில் விழுந்ததும் மறுபடியும் முன்போல் அவளுடைய நெஞ்சம் நெகிழ்ந்து போயிற்று. கூச்சம் முன்னிலும் அதிக மாயிற்று. அவனை ஏறிட்டுப் பார்க்க முடியாதபடியால், அப்புறமும் இப்புறமும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"பெண்ணே! ஏன் சிரித்தாய்? சொல்ல மாட்டாயா?" என்று மீண்டும் வாலிபன் கேட்டான்.

வானதி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, "ஒன்றுமில்லை. நீ பெரிய வீரனாயிருக்கிறாயே என்று எண்ணிச்சிரித்தேன். பூனையோடு சண்டை போடுவதற்கு யானையின் பேரில் வந்தாய் அல்லவா?" என்று கேட்டாள்.

அதைக்கேட்டு வாலிபனும் சிரித்தான்.

"பெண்ணே! அது பூனைதானா? நீ போட்ட கூக்குரலைக் கேட்டுப் புலியோ என்று பயந்துவிட்டேன்!" என்று சொன்னான்.

வானதிக்கு இதற்குள் துணிவு வந்து விட்டது; அவளிடமிருந்த கூச்சமும் குறைந்து விட்டது.

"ஆகா! அப்படியா? புலிக்கொடி பறக்கும் சோழ நாட்டில் புலியைக் கண்டுதான் எதற்காகப் பயப்படவேணும்? நீ பாண்டிய நாட்டானா?" என்றாள்.





அதைக் கேட்ட வாலிபனின் முகம் முன்னைக் காட்டிலும் சற்று அதிகமாக மலர்ச்சி அடைந்தது.

"பெண்ணே! நான் வேற்று நாட்டவன் அல்ல; இந்தச் சோழ நாட்டைச் சேர்ந்தவன் தான்! யானை மீது ஏறி வேறு போர்க்களங்களுக்கும் சென்றிருக்கிறேன். நீ யார்? எந்த ஊர்ப் பெண்? பெரிய வாயாடிப் பெண்ணாக இருக்கிறாயே?" என்றான்.

"யானைப் பாகா! மரியாதையாகப் பேசு! நான் யாராயிருந்தால் உனக்கு என்ன? எதற்காக அதைப் பற்றிக் கேட்கிறாய்?" என்றாள் வானதி.

"சரி, அப்படியானால் நான் கேட்கவில்லை. பெரிய இடத்துப் பெண்போலிருக்கிறது! போகிறேன்!" என்று சொல்லிவிட்டு அந்த வாலிபன் படியேறி மேலே போகலானான்.

வானதி மறுபடியும் விளையாட்டும் பரிகாசமும் தொனித்த குரலில், "யானைப் பாகா! யானைப் பாகா! என்னையும் உன் யானையின் மேல் ஏற்றிக் கொண்டு போகிறாயா?" என்றாள்.



"சரி; ஏற்றிக் கொண்டு போகிறேன். எனக்கு என்ன கூலி தருவாய்?" என்று கேட்டான் வாலிபன்.

"கூலியா? என் பெரியப்பாவிடம் சொல்லி உனக்குக் கொடும்பாளூர் அரண்மனையில் உத்தியோகம் வாங்கித் தருகிறேன். இல்லாவிட்டால், யானைப் படைக்குச் சேனாபதியாக்கச் செய்கிறேன்!" என்றாள் வானதி.

"ஓகோ! கொடும்பாளூர் இளவரசியா தாங்கள்?" என்றான் அந்த வாலிபன். இதுவரையில் மலர்ந்திருந்த அவனது முகம் இப்போது சுருங்கியது. புன்னகை மறைந்தது. புருவங்கள் நெறிந்தன.

"ஏன்? கொடும்பாளூர் இளவரசி என்றால் அவ்வளவுமட்டமா? உன் யானை மேல் ஏறக்கூடாதா?" என்றாள் வானதி.

"இல்லை, இல்லை! கொடும்பாளூர் அரண்மனைக் கொட்டாரத்தில் எவ்வளவோ யானைகள் இருக்கின்றன; எத்தனையோ யானைப்பாகர்களும் இருக்கிறார்கள். நான் என்னத்திற்கு?" என்று சொல்லிவிட்டு அந்தவாலிபன் விடுவிடு என்று நடந்து போனான். அவன் ஒருவேளை திரும்பிப் பார்ப்பானோ என்று சற்றுநேரம் வரையில் வானதி எதிர்

பார்த்தாள். ஆனால் அவன் திரும்பியே பாராமல் நடந்து சென்று யானைமேல் ஏறிப் போய் விட்டான்.

இந்தச் சம்பவம் வானதியின் உள்ளத்தில் வெகுவாகப் பதிந்து விட்டது. அடிக்கடி அது அவளுடைய ஞாபகத்துக்கு வந்தது. அந்த யானைப்பாகனுடைய உருவத் தோற்றமும் மலர்ந்த முகமும் இனிய குரலும் நினைவுக்கு வந்தபோதெல்லாம் உள்ளத்தில் இனந் தெரியாத இன்ப உணர்ச்சி உண்டாயிற்று. அவன் பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்ற யானைமேல் ஏறி வந்ததை நினைத்தபோதெல்லாம் அவளையறியாமல் நகைப்பு வந்தது. தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்; பிறகு அதற்காக வெட்கமும் அடைந்தாள். அந்த யானைப்பாகனின் அகம்பாவத்தையும், கொடும்பாளூர் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே அவன் முகத்தைச் சுருக்கிக் கொண்டு போய் விட்டதையும் எண்ணியபோதெல்லாம் அவன்பேரில் கோபம் உண்டாகி வளர்ந்தது. மொத்தத்தில், அந்த யானைப்பாகனைப் பற்றி அடிக்கடி நினைவு வந்து கொண்டிருந்தது. இது தவறோ என்ற சந்தேகமும் கூடத் தோன்றி அவளை மிகவும் வருத்திக் கொண்டிருந்தது.

திரு நல்லத்துக்குத் தமது தமக்கையைப் பார்க்கப் பொன்னியின் செல்வர் வரப்போகிறார் என்று அரண்மனையில் பேச்சாக இருந்தது. சோழ நாட்டின் கண்மணியாக விளங்கிய இளவரசரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அரண்மனைப் பெண்கள் எல்லாருக்கும் இருந்ததுபோல் வானதிக்கும் இருந்தது. அதற்குச் சந்தர்ப்பம் எளிதில் கிடைக்கவில்லை. இளவரசர் வந்து விட்டார் என்று பேச்சாக இருந்ததே தவிர, அவர் அந்தப்புரக்

காரம் செய்யவும் துணிந்த வாலிபனே இந்த மாநிலம் போற்றும் இளவரசர் அருள்மொழி வர்மர் என்று கண்டால், வானதி அவளுடைய கண்களை எப்படி நம்ப முடியும்? பின்னர், பக்கத்திலிருந்த பெண்களைப் பலமுறை கேட்டுத்தான் அதை நிச்சயம் செய்து கொண்டாள். இதனால் அவள் அடைந்த அவமானத்தையும் மன வேதனையையும் சொல்லிச் சாத்தியமில்லை.

உலகம் ஆளப்பிறந்தவருக்குக் கொடும்பாளூர் அரண்மனையின் யானைக் கொட்டாரத் தலைவன் உத்தியோகம் செய்து வைப்பதாகத் தான் சொன்னதை அவள் நினைத்தபோது ஒரு பக்கம் சிரிப்பு வந்தது; அதே சமயத்தில் கண்களில் கண்ணீர் வந்தது. தன்னுடைய மூடத்தனத்தை நினைத்து நினைத்து வருந்தினாள். அப்போது அவருடைய முகம் சுருங்கியதன் காரணம் அவரை "யானைப் பாகா!" என்று அழைத்தது தான் என்று நம்பினாள். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் குணங்களில் ஒன்றும் இல்லாத பெண் என்று தான் தன்னைப் பற்றி அவர் எண்ணியிருப்பார்! இதை நினைத்த போது வானதியின் உள்ளம் அடைந்த வேதனைக்கு அளவே இல்லை. ஆற்றிலே, குளத்திலே விழுந்து உயிரையே விட்டு விடலாமா என்று கூடப் பலமுறை எண்ணினாள். இளைய பிராட்டி குந்தவையிடம் தான் செய்த குற்றத்தைச் சொல்லிவிடப் பலமுறை முயன்றாள். ஆனால் அதற்குத் துணிவு வரவில்லை; நா எழவில்லை. இளவரசரே குந்தவை தேவியிடம் சொல்லியிருந்தால் அவரே தன்னிடம் கேட்டிருப்பார். குந்தவை தேவி கேளாததினால் இளவரசர் சொல்லவில்லை என்று முடிவு செய்தாள். எத்தனையோ மன வேத

ளுடைய தோழி மார்களும், "இந்தப் பெண் இவ்வளவு கூச்சப்படுகிறாளே!" என்று மட்டும் ஆச்சரியப்பட்டார்கள்! அவளுடைய பயந்த சுபாவத்தோடு இதுவும் சேர்ந்தது என்று நினைத்தார்கள்.

பொன்னியின் செல்வர் தன்னிடம் அருவருப்புக் கொள்வதற்கு வேறு ஒரு முக்கிய காரணமும் உண்டு என்பதை வானதி விரைவில் அறிந்து கொண்டாள். இளவரசர் அருள்மொழி வர்மர் ஒரு காலத்தில் உலகமாளும் சக்கரவர்த்தி யாவார் என்று பலரும் நம்பியது போல் அவளுடைய பிறந்த வீட்டிலும் நம்பினார்கள். அதனால் அவளை அருள்மொழி வர்மருக்கு மணம் செய்து வைத்துவிட வேண்டும் என்று அவளுடைய பெரிய தகப்பனார் திட்டமிட்டிருந்தார் என்பது வானதிக்கு ஒருவாறு தெரிந்திருந்தது. அந்த நோக்கத்துடனேயே அவளைப் பழையாறைக்குப் பூதி விக்கிரம கேசரி அனுப்பி வைத்திருப்பதாகக் குந்தவை தேவியின் மற்றத் தோழிப் பெண்கள் அடிக்கடி ஜாடை மாடையாகப் பேசிக் கொள்வார்கள். சில சமயம் வானதியிடமே சொல்லிப் பரிகசிப்பார்கள். "ஆகையினாலேதான் நீ இளவரசர் முன்னாலேயே போகமாட்டேன் என்கிறாய்! எங்களுக்குத் தெரியாதா உன் கள்ளத்தனம்?" என்பார்கள். இந்த வார்த்தைகள் வானதியின் காதில் நாராசமாக விழுந்தன. தான் கொடும்பாளூர்ப் பெண் என்று அறிந்ததும் யானைப் பாகனுடைய முகம் சுருங்கியதன் காரணம் இதுவாகவே இருக்கலாம் அல்லவா?

இவ்வாறெல்லாம் வானதியின் இளம் உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்த நிலைமையிலே தான் ஒரு நாள் பொன்னியின் செல்வர் ஈழத்துப் போருக்குப் புறப்பட்டார். அன்றைக்கு அரண்மனையிலிருந்து எல்லாத் தோழிப் பெண்களும் கையில் மங்கள தீபங்களுடன் நின்று அவரை வாழ்த்தி அனுப்ப ஏற்பாடாகியிருந்தது. இந்தச் சமயத்திலும் வர முடியாது என்று மறுக்க வானதியினால் இயலவில்லை. போருக்குப் புறப்படும் இளவரசரை ஒருமுறை பார்த்து விடவேண்டும் என்ற ஆர்வமும் அவள் உள்ளத்தில் பொங்கியது. வாய் திறந்து பேசா விட்டாலும் தன் முகபாவத்தைக் கொண்டும் நயன பாஷையினாலும் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம் என்ற சபலமும் இருந்தது. ஆனால், அவள் எண்ணியதற்கெல்லாம் மாறான சம்பவம் நடந்து விட்டது. இளவரசர் அருகில் வந்து அவளை ஏறிட்டுப் பார்த்ததும் வானதி உணர்விழந்து தீபத்தையும் போட்டு விட்டுத் தரையில் விழுந்து மூர்ச்சையானாள். இதன் பிறகு நிகழ்ந்தவையெல்லாம் வாசகர்கள் அறிந்தவைதான் அல்லவா?

* * *

ஓட்டுக் கூரை ஓடத்தில் மிதந்து சென்று கொண்டிருந்த வானதி திருநல்லத்தை அணுகியபோது அவளுடைய உள்ளத்தில் மேற்கூறிய சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து சென்றன. பொன்னியின் செல்வருக்குத் தன்மீது அன்பும் அநுதாபமும் உண்டு என்பதை அவள் உணர்ந்திருந்தாள். அதை அவர் இளையபிராட்டி மூலமாகவும் நேரிலேயும் தெரிவித்ததும் உண்டு. ஆனால் அவருடைய அன்பு பூரணமடையாத வண்ணம் அவ்வப்போது தடை செய்த முட்டுக் கட்டை ஒன்றும் இருந்தது. அது இன்னதென்பதையும் அவள் அறிந்திருந்தாள். இளவரசர் ஒரு காலத்தில் சக்கரவர்த்தி யாகலாம் என்னும் எண்ணத்தின் பேரில் அவளை அவர் கழுத்தில் கட்டிவிடப் பார்க்கிறார்கள் என்று இளவரசர் நம்பியதுதான் அந்த முட்டுக் கட்டை. இவ்விதம் அவர் நம்புவதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. வானதியின் பெரிய தந்தை இதைப் பற்றிப் பலமுறை பேசியதுண்டு. ஏன்? இளையபிராட்டி குந்தவை தேவியே அந்தச் சதியாலோசனையில் சம்பந்தப் பட்டவர்தான். அது இன்னும் பலருக்கும் தெரிந்திருந்தது. அந்த ஓடக்காரப் பெண் பூங்குழலிகூட அதைக் குறிப்பிட்டுப் பரிகாசம் செய்யவில்லையா? ஆகையால் இளவரசர் மனத்தில் அந்த எண்ணம் தங்கி நின்று அவருடைய அன்புக்கே ஒரு முட்டுக்கட்டையாக இருந்ததில் வியப்பில்லைதான்!

ஆனால் சற்று முன்பு வானதி செய்த சபதத்தை இளவரசர் அறிய நேரும்போது அந்த முட்டுக்கட்டை நீங்கி விடும் அல்லவா? அதை அவர் அறியுமாறு நேரிடுமா? தானே அவரிடம் சொல்லிவிட்டால் என்ன? அடி அசட்டு வானதி! உனக்குத் தான் அவர் முன்னால் நின்றால் வாய் அடைத்து விடுகிறதே! அவரை யானைப்பாகன் என்று நீ எண்ணியபோது, இந்தத் திருநல்லத்தில் சக்கரவட்டமாகப் பேசி அவரிடம் 'வாயாடிப் பெண்' என்ற பெயரும் பெற்றாய்! அதற்குப் பிறகு அவரை

முகம் எடுத்துப் பார்க்கவும் வாய் திறந்து பேசவும் உன்னால் முடியவில்லையே? அநாதை வானதி! மறுமுறை நீ இள வரசரைப் பார்க்க நேரும்போது அப்படி மோசம் போய்விடாதே! துணிச்சலுடன் உன் மனதில் உள்ளதைச் சொல்லிவிடு! "நீங்கள் சிங்காதனம் ஏறினாலும் நான் ஏறமாட்டேன்! அவ்வாறு சபதம் செய் திருக்கிறேன்! தாங்கள் வெறும் யானைப் பாகனாகவே இருந்து, என்னையும் தங்க ளுடன் யானை மீது ஏற்றிக் கொண்டு ஒரு தடவை சென்றால், அதையே சொர்க்க வாழ்விலும் மேலாகக் கருதுவேன்!" என்று தைரியமாகச் சொல்லிவிடு! • • •

எல்லாம் சரிதான்! ஆனால் அவ்விதம் சொல்லுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக் குமா? இந்த வெள்ளம் என்னை எங்கே கொண்டு போய்ச் சேர்க்கப் போகிறது? கரை சேராமலே முழுகிச் செத்துப் போய் விடுவேனோ! ஒரு நாளும் அவ் விதம் நேராது ... வானிது,

லவா? நான் யார் என்று சொன்னால் என்னை யானை மேல் ஏற்றிப் பொன்னி யின் செல்வரிடம் அழைத்துக் கொண்டு போகவும் கூடும் அல்லவா? • • •

இத்தகைய எண்ணம் தோன்றியதும், வானதி, "யானைப் பாகா! யானைப் பாகா!" என்று கூவி அழைத்தாள்.

அது அவன் காதில் விழவில்லையோ, அல்லது விழுந்தும் அவன் இலட்சியம் செய்யவில்லையோ, தெரியாது. யானை நிற்கவும் இல்லை; யானைப்பாகன் திரும் பிப் பார்க்கவும் இல்லை! யானையின் நடை வேகமாகிக் கொண்டிருந்தது. வெகு சீக்கிரத்தில் நதிக்கரையின் வளைவு ஒன்றில் திரும்பி யானையும் யானைப் பாகனும் மறைந்து விட்டனர்.

வானதி இந்த ஏமாற்றத்தைப் பற்றி எண்ண மிடுவதற்குள் பெரும் பீதிகர மான மற்றொரு எண்ணம் அவள் மனதில் உதித்தது. ஓட்டுக்கூரை இடி

பூதான இயக்கம்

சிதம்பரம் வி. சேதுராமன்

நம் பாரதத்தில் சமுதாயத்தின் அடிதளத்திலே நசுக்கப்பட்டு வறுமையால் வாடித் தவிக்கும் மக்களில் பெரும்பான்மையோர் நிலமற்ற விவசாயிகள். ஊழி ஊழி காலமாக வறுமையினாலும், பஞ்சத்தினாலும் பிணிகளாலும் பீடிக்கப்பட்ட விவசாயிகள் சிறிது சிறிதாகத் தங்கள் வறுமைக்கும் சமுதாயத்திலே தாங்கள் தாண்டப்படுவதற்கும் காரணம் என்ன என்று சிந்திக்க ஆரம்பித்தார்கள். தங்கள் சிந்தனையின் முடிவாக "இன்றைய நிலையிலுள்ள முதலாளித்வ — நிலப் பிரபுத்வ சமுதாய அமைப்பே உழைக்கும் வர்க்கத்தினரின் ஏழைமைக்குக் காரணம். பயிரிடப்படும் நிலங்கள் வரம்பின்றி ஒருவரிடமே குவிந்து கிடப்பதுதான் விவசாயிகளின் துயரத்திற்கும் சமூகத்தில் நிலவும் தீமைகளுக்கும் காரணம்" என்று முடிவுக்கு வந்தார்கள். அதன் பயனாகத்தான் "உழுபவனுக்கே நிலம்" என்ற விவசாய மக்களின் மகத்தான தாரக மந்திரம் எழுந்தது.

உலகத்தின் பல்வேறு தேசங்களில் உழுபவனுக்கே நிலம் என்ற சீரிய கொள்கைக்காக மாபெரும் ரத்தப் புரட்சிகளும் மகா பயங்கரமான படுகொலைகளும் நடந்திருக்கின்றன. சியாங்கே ஷேக்கின் சீனாவிலே விவசாயிகளிடையே நிலவிய மாபெரும் அதிருப்தியும் எல்லையற்ற வறுமையும் தான் பிற்காலத்தில் சீனாவில் பலாத்காரப் புரட்சி ஏற்பட்டு சியாங்கே ஷேக் விரட்டியடிக்கப்படவும் செஞ்சீனக் கம்யூனிஸ்டுகள் ஆட்சியை அமைக்கவும் அடிகோலின என்பதை எவரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது. ஜப்பான், பர்மா, இஸ்ரேல், எகிப்து, போன்ற நாடுகளில் சட்டரீதியாக நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிலச் சீர்திருத்தத்தின் அவசியத்தை எவருமே மறுக்க முடியாது. மறுக்கிறவர்களுக்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

நம் பாரத தேசத்திலுள்ள நாலரை கோடி நிலமற்ற ஏழை விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பொருளாதார விடுதலை கிட்ட விவசாய சீர்திருத்தம் மிகமிக அத்தியாவசியமானது. அதற்கு வேண்டிய மிகச் சாதகமான சூழ்நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது ஆசாரிய விநோபா பாவேயின் பூதான இயக்கத்தினால்.

பாரதத்தில் உழுது பயிரிட்டு ஜீவனை நடத்தும் விவசாயிகளில் அளவற்ற கொடுமைகளுக்கு உள்ளானவர்களும், மிக மிகப் பிற்போக்கான நிலையில் உள்ளவர்களும் ஹைதராபாத் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்களே. அதற்குக் காரணம் உண்டு. இவர்கள் நிஜாமின் ஆட்சியில் ரஜ்வியின் காலிக் கூட்டத்தினரால் அளவற்ற கொடுமைகளுக்கும் வர்ணிக்க முடியாத சித்ரவதைகளுக்கும் உள்ளானவர்கள். பின்னர் ஏற்பட்ட இராணுவ ஆட்சியில் எல்லையற்ற தொல்லைகளுக்கும் அடக்கு முறைகளுக்கும் ஆளானவர்கள்.

இத்தகைய மக்களின் அதிருப்தியையும் வெறுப்பையும் பயன்படுத்திக் கொண்டு கம்யூனிஸ்டுகள் தெலிங்கானா ஜில்லாவில் இம்மக்களை ஆயுதங்களை ஏந்தச் செய்து பலாத்காரத் தீச்செயல்களில் ஈடுபடுத்த முயற்சிகள் செய்தனர். கொள்ளைகளும் கொலைகளும் மலிந்தன. அடக்கு முறை அமுல் செய்யப்பட்டது. மக்கள் அளவற்ற துன்பத்திற்கு ஆளாயினர். இதைக் கேள்வியுற்று மகான் விநோபாஜி இரத்தக் கண்ணீர் வடித்துவிட்டு நிலைமையை நேரில் கண்டு பரிகாரம் தேட ஹைதராபாத் சமஸ்தானத்தில் சுற்றுப் பிரயாணம் செய்ய நினைத்து தமது கால்நடைப் பிரயாணத்தைத் தொடங்கினார். 1951-ம் வருடம் ஏப்ரல் மாதம் 18-ந் தேதி விநோபாஜி ஹைதராபாத்தில் நல்லகொண்டா என்னும் ஜில்லாவில் கால்நடையாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

ஒரு கிராமத்திலுள்ள நிலமற்ற ஏழை விவசாயிகள் அனைவரும் "பாபுஜி! எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று சரணடைந்தனர்.

"என்ன வேண்டும் உங்களுக்கு!" என்று கேட்டார் ஏழைகளின் இடர் நீக்கவந்த உத்தமர்.

"பாபுஜி! எங்களுக்கு நிலம் வேண்டும்! எங்களுக்கு நிலம் வேண்டும், பாபுஜி!" என்று கதறினர் தீனமாக. நெஞ்சில் வடியும் கண்ணீரை அடக்கியபடியே அந்த மகான் சிந்தனையிலாழ்ந்தார். நிலம் கேட்ட மக்களுக்குக் குறைந்த பட்சம் 80 ஏக்கர் நிலமாவது இருந்தால்தான் கணிசமான அளவில் பிரித்துக் கொடுக்க முடியும். நிலத்துக்கு எங்கே போவது என்ற பெரும் பிரச்னை குறுக்கிட்டது.

அந்தச் சமயம் அருகிலிருந்த ஸ்ரீ ராமச்சந்திர ரெட்டி என்பவர் தாம் 100 ஏகர் நிலத்தை நன்கொடையாக அவருக்கு அளிப்பதாக அறிவித்தார்

அந்த நிமிஷமே விநோபாஜியின் உள்ளத்திலே பூதான இயக்கத்தின் வித்து முளைத்தது.

"காற்றையும், நீரையும் போன்று நிலமும் இயற்கை மனித சமுதாயத்திற்கு அளித்த பொதுச் சொத்தே. அது தனிப்பட்ட எந்த மனிதனுக்கும் சொந்தமாக இருக்கக் கூடாது. உழுகின்ற விவசாயிக்கு நிலத்திலிருந்து விளையும் பொருள்களில் முழு உரிமையும் இருக்கவேண்டும். ஆனால் அவனுக்குங்கூட நிலத்தின்மீது சொத்துரிமை கிடையாது. சமுதாயம் ஒன்றுக்குத்தான் நிலத்தின்மீது உரிமை இருக்க வேண்டும்" என்கிறார் விநோபாஜி. இதுதான் சோஷலிஸத்தின் அடிப்படைத் தத்துவம். காந்தியடிகளின் அடிப்படை எண்ணங்களே இவை. சர்வோதயத் திட்டம் இதை அங்கீகரித்துத் தனது மிக முக்கியமான கொள்கைகளில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தி யிருக்கிறது.

அமைதியான முறையில் சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க உதவி செய்யக் கூடிய இயக்கம் இது. "கருத்தின் காரணமாகத்தான் இயக்கங்கள் நடைபெறுகின்றன. ஆவேசம் உண்டாகிறது, புதிய வாழ்க்கை மலர்கிறது. சமூக அமைப்பும் மாறுகிறது" என்கிறார் விநோபாஜி. அப்படி அற்புதமான முறையில் சிறந்த சமுதாயம் ஏற்படக்கூடிய இயக்கம் இது.

இந்த மாபெரும் இயக்கத்தின் அடிப்படையான தத்துவத்தை முதன் முதலாகத் தெளிவாகப் புரிந்து கொண்டு ஆதரவளித்த அரசியல் கட்சி சோஷலிஸ்ட் கட்சி ஒன்றுதான். 1952 ஜூனில் பாச்மாரியில் நடந்த மகாநாட்டில் பூதான இயக்கத்தை ஆதரித்து சோஷலிஸ்டுகளை அதில் தீவிரமாகப் பங்கு கொள்ளும்படி ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் கேட்டுக் கொண்டார். கேட்டுக் கொண்டதோடு மட்டுமின்றித் தாமே விநோபாஜியின் வழியைப்


பின்பற்றிப் பஞ்சைகளின் சார்பாகப் பணக்காரர்களிடம், நிலமற்ற ஏழைகளின் சார்பாக நிலப் பிரபுக்களிடம் நிலக்கொடை சேகரித்து வருகிறார்.

பாரதம் முழுவதும் இதுவரை பன்னிரண்டு லக்ஷம் ஏக்கருக்கு மேல் பூதான இயக்கத்தின் மூலம் பூதான நிலம் சேர்க்கப் பட்டிருக்கிறது. உத்தரப் பிரதேசம், பீகார், ஹைதராபாத் இம் மூன்றும் முன்னணியி லிருக்கின்றன. ஹைதராபாத்தில் மட்டும் 52,000 ஏக்கர் வரை சேர்த்திருக்கின்றன. ஆனால் நம் தமிழ் நாட்டிலோ 8500 ஏக்கர்களே சேர்த்திருக்கின்றன. எல்லாத் துறையிலும் முன்னணியில் நிற்கும் தமிழகம் இதில் மட்டும் பிற்போக்காக இருக்க வேண்டுமா!

நம் தமிழகத்தில் விவசாயிகளிடையே குழப்பமும் கலவரமும் வறுமையும் நிலவி வருகிறது. தஞ்சை ஜில்லாவின் "நெற் களஞ்சியத்திலே தீ' பிடித்துச் சமீபத்தில்தான் சற்று அடங்கியது என்பதை ஒருவரும் மறந்திருக்க மாட்டார்கள். தஞ்சையின் நெற் களஞ்சியத்திலே பிடித்து, நாற்காலிகமாக அணைந்துள்ள தீ தமிழ்நாடு முழுவதும் பரவாமலிருக்க வேண்டுமானால் பூதான இயக்கம் தமிழ் நாட்டில் வேர் விட்டுத் தழைத்து விரைவாகப் பரவ வேண்டும். எல்லா அரசியல் கட்சிகளும் பொது ஸ்தாபனங்களும் சமூக ஊழியர்களும் இந்த இயக்கத்தை ஆதரித்து அதற்காக உழைக்க வேண்டும்.


நான் எங்கள் ஊரில் பூதான இயக்கத்தின் பொருட்டு எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற முயன்று வருகிறேன். இம்மாதிரியே சமூக முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள இளைஞர்கள் முன் வந்து இந்த முக்கியமான பணியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சூர் திருமணங்கள்



சென்ற மே மாதம் 24-ந்தேதி திருச்சூர், புஷ்பகிரியில் சங்கீத கலாநிதி செம்மங்குடி சீனிவாசய்யர் அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி சுவாமிநாதனுக்கும், சீதாராம் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸின் மானேஜிங் டைரக்டரான ஸ்ரீ டி. பி. சீதாராமய்யர் அவர்களின் சகோதரர் ஸ்ரீ டி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்களின் புதல்வி சௌ. விசாலாக்ஷிக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.


● அதே முகூர்த்தத்தில் ஸ்ரீ டி. பி. சீதாராமய்யர் அவர்களின் மற்றொரு சகோதரர் ஸ்ரீ டி. பி. அனந்தராமய்யர் அவர்களின் புதல்வி சௌ. ஜயலக்ஷ்மிக்கும் தஞ்சாவூர் கே. நாராயணய்யர் அவர்களின் புதல்வன் சி. கணேசனுக்கும் சிறப்பாக விவாகம் நடைபெற்றது.



மணமக்களுக்கு ஜனாதிபதி ராஜன்பாபு அவர்களிடமிருந்தும் உதவி ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களிடமிருந்தும் மத்திய அரசாங்க மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி, திருவாங்கூர் கொச்சின் முதல் மந்திரி, சென்னை பிரதம நீதிபதி ஸ்ரீ ராஜமன்னார், விந்திய பிரதேச கவர்னர் ஸ்ரீ கே. சந்தானம், சென்னை மந்திரிகள் டாக்டர் யூ. கிருஷ்ணா ராவ், ஸ்ரீ கே. வெங்கடசாமி நாயுடு முதலிய பல பிரமுகர்களிடமிருந்தும் நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும் வந்தன. அன்று மாலை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

அகில உலகச் சிறுகதைப் போட்டி

- ஏற்கெனவே முதல் தடவையாக அகில உலகச் சிறுகதைப் போட்டி நடந்தது அல்லவா? அதில் இந்தியா உள்பட உலகத்தில் உள்ள இருபத்து மூன்று நாடுகள் கலந்து கொண்டன.
- அந்தப் போட்டியில் உலகத்திலேயே முதல், இரண்டாவது பரிசு பெற்ற கதைகள் "கல்கி"யில் தொடர்ச்சியாக வெளியாகி வந்தது வாசக நேயர்கள் அறிந்த விஷயம். அவற்றைத் தவிர அந்தந்த நாடுகளில், அந்தந்த பாஷைகளில் பரிசு பெற்ற சுமார் நூறு சிறந்த கதைகளும் மொழி பெயர்க்கப்பட்டு, "கல்கி"யில் பிரசுரமாயின.
- மேற்படி போட்டி மிகவும் வெற்றிகரமாக நடந்ததால், இப்போது இரண்டாவது தடவையாக, அகில உலகச் சிறுகதைப் போட்டி நடத்த உத்தேசித்திருக்கிறார்கள்.
- இம்முறையும் அமெரிக்காவில் உள்ள பிரபல நியூ யார்க் ஹெரால்டு டிரிப்யூன் பத்திரிகையின் மேற்பார்வையிலேயே அந்தப் போட்டி நடைபெறுகிறது.
- இந்திய தேசத்தில் மேற்படி சிறுகதைப் போட்டியை நடத்தும் பொறுப்பைப் புது டில்லி "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை ஏற்றுக் கொண்டிருக்கிறது.
- இந்தியாவில் உள்ள முக்கியமான பன்னிரண்டு பாஷைகளிலாவது, ஆங்கிலத்திலாவது மேற்படி போட்டிக்குச் சிறுகதை எழுதலாம்.
- இந்தியாவின் முக்கிய பாஷைகளில் தமிழ் மொழி ஒன்று என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. எனவே, தமிழ் எழுத்தாளர்கள் அகில உலகச் சிறுகதைப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- இந்தியாவில் எழுதப்படும் சிறந்த எட்டுக் கதைகளுக்கு "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை மொத்தம் ரூ. 5,250 பரிசு அளிக்கும். அதில் முதல் பரிசு ரூ. 1500.
- அந்த எட்டுக் கதைகளிலிருந்து அகில உலகப் போட்டிக்கு முதல் நாலு கதைகள் அனுப்பப்படும்.
- இதில் கலந்து கொள்ளும் பத்திரிகைகள் தங்கள் தங்கள் பாஷைக் கதைகளுக்குப் பரிசு அளிக்கும். பரிசு பெறும் சகல கதைகளும் போட்டியை நடத்தும் பத்திரிகைகளில் வெளிவரும்.
- கதைகள் பிரசுரமாகி முடிந்த பின், அந்தக் கதைகளில் எது சிறந்தது என்பதை, போட்டியை நடத்தும் பத்திரிகைகளிடையே வோட்டு எடுத்து முடிவு செய்வார்கள்.
- அந்தக் கதைக்கே அகில உலகப் போட்டியின் முதல் பரிசான ஐயாயிரம் டாலர் (ரூ. 23,750) கொடுக்கப்படும்.
- பஞ்சாயத்தார்களிடம் சமர்ப்பிக்கும் கதைகளுக்கு இலக்கங்களே கொடுக்கப்படுமாதலால், எழுத்தாளர்கள் தங்கள் பெயரையோ, விலாசத்தையோ அதில் குறிப்பிடக் கூடாது.
- எனவே ஒவ்வொருவரும் தாங்கள் எழுதும் கதையில் இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அவற்றில் பெயரோ, விலாசமோ குறிப்பிடாமல் ஒரு பிரதி இருக்க வேண்டும்.
- அடுத்த ஜூன் மாதம் முப்பதாம் தேதிக்குள் கதைகள் அனுப்பப்பட வேண்டும்.
- பரிசு பெறாத, பிரசுரிக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் கையெழுத்துப் பிரதியுடன் போதிய தபால் தலைகள் அனுப்ப வேண்டும். திருப்பி அனுப்புவதாக உத்தரவாதம் செய்ய முடியாது.
- தமிழ்க் கதைகளை ஆசிரியர், "கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை-10 என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- அனுப்பப்படும் சிறுகதைகள் அதிகபட்சம் நாலாயிரம் வார்த்தைகளுக்குமேல் இருக்கக் கூடாது. குறைந்தபட்சம் ஆயிரத்து இருநூற்றைம்பது வார்த்தைகள் உள்ளதாக இருக்க வேண்டும்.
- சிறுகதை அனுப்புவோர் தங்களுடைய சொந்தக் கற்பனையைக் கொண்டு எழுதப்பட்டது என்று உறுதி கூறவேண்டும். ஏற்கெனவே எந்த இடத்திலும் பிரசுரிக்கப்பட்டதல்ல என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும்.
- ஒரே ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் அனுப்பலாம்.
- கதைகள் எவ்விஷயத்தை வேண்டுமாயினும் அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். காதல், குரோதம், நன்றி, வாஞ்சை, தேசபக்தி, தியாகம், லோபம், யுத்தம், துணிகரச் செய்கை, வீரப் போர், துரோகம், கலியாணம், மரணம் ஆகிய எந்த விஷயமாயினும் சரி; உணர்ச்சிப் பெருக்கு, அமைப்புத் திறன், வாழ்க்கைப் பண்பு, நடையின் சிறப்பு, கதையின் ஓட்டம்—ஆகிய சிறு கதையின் அம்சங்களே முக்கியமாகக் கருதப்படும்.
- அகில உலகச் சிறுகதைப் போட்டிக்குப் பொறுக்கி எடுக்கப்படும் நாலு தமிழ்க் கதைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 125 வீதம் சன்மானம் அளிக்கப்படும்.
- முதலாவது அகில உலகச் சிறு கதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றவர் இந்தியர்தான்.
- இம்முறை மற்ற நாட்டினரைப்போல் இந்தியரும் முதற் பரிசு பெறுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. அவ்விதம் பரிசு பெற்று, உலகப் புகழை அடைவது இந்திய எழுத்தாளர்களின் பெரு முயற்சியையே பொறுத்திருக்கிறது.
- தயவு செய்து உறையின்மேல் "அகில உலகச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டுகிறோம்.
- அகில இந்தியப் போட்டிக்காகப் பஞ்சாயத்தார் தேர்ந்தெடுக்கும் நாலு கதைகளையும் அவற்றின் ஆசிரியர்கள் தாங்களாகவோ, அல்லது பிறரைக் கொண்டோ ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தர வேண்டும்.
- பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளைத் தவிர மற்றக் கதைகளில் பிரசுரிப்பதற்குத் தகுதியானவை "கல்கி"யில் பிரசுரிக்கப்படும். அவற்றிற்குரிய சன்மானமும் அளிக்கப்படும்.
- இந்தப் போட்டி சம்பந்தமாக ஏற்படும் சந்தேகங்களில் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி கூறும் தீர்ப்பே முடிவானது.



1. பெரம்பூரில் ஸ்ரீ தியாகப் பிரம்ம உத்ஸவம் ஸ்ரீ தியாக ராஜரின் திரு உருவப்பட ஊர்வலத்துடன் முடிவுற்றது. காரைக்குடி ஸ்ரீ சாம்ப சிவய்யர் அவர்களின் அருகில் பயபக்தியுடன் நிற்பவர் காரியதரிசி ஸ்ரீ சேதுராமன்.

2. பெரம்பூர் சங்கீத சபையில் ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்கார் அவர்களின் கச்சேரி அமோகமான கச்சேரியாக அமைந்தது.

3. சங்கீத ஆனந்தத்தில் லயித்துப் பரவசமா யிருந்த சபையில் ஒரு பகுதி.

போட்டோ: எம்.டி. கணேஷ்

கள்ளிக்கோட்டை பண்ட்ஸ் லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

தலைமை ஆபீஸ்: கள்ளிக்கோட்டை | கிளை ஆபீஸ்: 9, செம்புதாஸ் தெரு, மதராஸ்-1

நூற்றுக்கணக்கான மக்கள் சிறுகச்சிறுகச் சேமித்து ஒருமிக்கப்பெற்று இன்புற உதவி செய்துவரும்

எங்கள் மாதச் சீட்டு வகைகள்

ஜூன் மாத சீட்டு வரிசை

20 மாதங்கள் | 4வது ஆயிர ஏலங்கள் | 20 சந்தாதாரர்கள்

சந்தா செலுத்தும் கடைசி தேதி 17-6-53

முதல் ஏலத் தேதி ... 28-6-53

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
C	ரூ. 100/-	ரூ. 2000/-
D	ரூ. 50/-	ரூ. 1000/-
E	ரூ. 25/-	ரூ. 500/-
F	ரூ. 20/-	ரூ. 400/-
G	ரூ. 15/-	ரூ. 300/-
H	ரூ. 10/-	ரூ. 200/-

முக்கிய கவனிப்பு:

1. நீங்கள் எவ்வூரிலும், எந்நாட்டிலும், ஆங்காங்கே இருந்து கொண்டே சந்தாதாரர்களாக சேர்ந்து கொள்ளலாம்.
2. ஆங்காங்கு இருந்துகொண்டே, தபால் மூலமோ அல்லது வேறு யார் மூலமாகவோ, ஏலத் தேதிகளில் ஏலம் கேட்கலாம்.
3. உங்களூரிலிருந்தபடியே எங்கள் பண்ட் ரூல்கள் 21, 34 படி உங்கள் ஏலத் தொகையை பெற்றுக் கொள்ளலாம்.

விலாசத்தைத் தெளிவாக எழுதி மனுச் செய்து கொள்பவர்களுக்கு விதிகளும், நிபந்தனைகளும் இலவசமாக அனுப்பப்படும். மற்ற விதிகள் வழக்கம்போல். சீட்டில் சேர்த்துக் கொள்ளும் உரிமை கம்பெனியைச் சேர்ந்தது. (போர்டார் உத்திரவுப்படி)

எம். வி. விஸ்வநாதன், மானேஜிங் டைரக்டர்

தபால் பெட்டி: 1395 போன்: 85596

தந்தி: 'KALLIFUNDS'

பெரியதோர் கூட்டம்

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறித் துணிகள்

80-100 நம்பரில் புதுமாதிரிகளும், நூதன நிறவகைகளும் நாகரீக நெசவு நயமும் கொண்ட — இதுவரை கைத்தறியில் வியாபார முறையில் வெளிவராத

சேலைகள் ★ தோவத்திகள்
துவாலைகள் ★ குட்டைகள்
மற்றும் இதர இனுசுகள்

வழக்கமாயுள்ள இறக்க விலைகளைக் காட்டிலும் குறைந்த விலைகளில் எங்கள் 124 டிப்போக்களிலும் கிடைக்கும்

கூட்டுறவு ஸ்டோர்கள், கடைகள், மொத்த வியாபாரிகள் - இவர்கட்கு விசேஷ கழிவு தரப்படும். ஆர்டர்களை உடனே அனுப்புக: ஸ்பெஷல் ஆபீஸர், கோ-ஆப். கூட்டு நெசவு மத்திய ஸ்தாபனம், செரி ரோடு, சேலம்.

உங்கள் பூரண திருப்திக்கு கோ-ஆப்டெக்ஸ் வாங்குங்கள். அது கொடுக்கும் பணத்திற்கு மேலான பெறுமானம் உடையது.

சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.

34, பாந்தியன் ரோடு - எழும்பூர் - சென்னை-8



விளைச்சலில்லாத நிலம்

கமலம்

முன்னொரு காலத்தில் சந்திரகிரி என்ற நாட்டை இந்திர குமாரி என்ற ஓர் அரசி ஆண்டு வந்தாள். அவளுக்கு ராஜவர்மன் என்ற பிரதான மந்திரி இருந்தார்.

இளம் வயதான இந்திரகுமாரி, முதல் மந்திரியினுடைய உதவியால் நல்ல பெயர் எடுத்தாள். எல்லாக் குடி ஜனங்களும் குதூகலத்துடன் மிகவும் சௌக்கியமாக வாழ்ந்து வந்தார்கள்.

பஞ்சம் என்பதே இன்னதென்று அறியாத வழியில் மந்திரி ராஜவர்மரின் மதிநுட்பத்தால் பல வளங்கள் பெருகி மக்கள் சுபிட்சமாக வாழ்ந்து வந்தார்கள்.

சந்தோஷமாக வாழும் மக்களுக்கு சோம்பல் கூடப் பிறந்த சகோதரன் மாதிரியல்லவா? கஷ்டம் என்பதே அறியாத மக்கள் மனம் எளிதில் கலைக்கப் பட்டு விடலாம் அல்லவா? இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டார்கள் மந்திரி ராஜவர்மர் மேல் பொறாமை கொண்ட ஒரு சிலர்.

ராஜவர்மர் கொண்டு வந்த ஒரு சில சீர்திருத்தங்களை மக்கள் ஆதரித்தனர், அவர் மேலுள்ள அன்பு காரணமாக.

ஆனால் அதே சீர்திருத்தங்களை அவரது சுய நலத்துக்காகச் செய்கிறார் என்று அவருக்கு வேண்டாத மந்திரிகள் மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் மனத்தைக் கலைத்து, ராணிக்குத் தினந்தோறும் பல புகார் கடிதங்கள் வருமாறு செய்தனர்.

முதலில் அரசி அவைகளைப் பொருட்படுத்தவில்லை. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் அல்லவா? தினமும் ஏராளமான புகார்களைப் பார்த்த மகா ராணியின் மனமும் சஞ்சலத்தில் ஆழ்ந்தது. மந்திரி மேல் இருந்த நம்பிக்கை தளர்ந்தது.

வெறுப்படைந்த அரசி, சபையைக் கூட்டினாள். மக்களை அழைத்துப் புகார்களை எடுத்துக் கூறச் சொன்னாள்.


உடனே மீன் வியாபாரிகளின் பிரதிநிதி ஒருவன் முன் வந்தான்.

"மகாராணி செம்படவர்களிடமிருந்து நாங்கள் ஒரு கூடை மீன்கள் வாங்கிக் கழுதைகளின் ஒரு புறம் கட்டுவோம். மறு புறம் சம எடைக்குக் கல்லைக் கட்டி கழுதைகளைச் சந்தைக்கு ஓட்டிச் செல்லுவோம். ஆனால் மந்திரியாரோ, செம்படவர்களிடம் லஞ்சம் வாங்கி எங்களைக் கல்லுக்குப் பதிலாக மற்றொரு கூடை மீன்களை மறு புறம் கட்டிச் செல்லச் சொல்கிறார். என்ன அநியாயம்? நீங்களே கூறுங்கள்."

மந்திரி மௌனம் சாதித்தார்.

மக்களில் ஒரு சிலர் முன் வந்தனர்.

"மகாராணி! இவ்வளவு காலமாக இல்லாத புது விதமாக எங்கள் வீட்டின் முன் புறம் பெரிய சன்னல்கள் வைக்கச் சொல்லி உத்தரவிட்டார் மந்திரியார். எவ்வளவு துணிச்சல்? இரவில் ஊர் சுற்றுகையிலும், மற்றச் சமயங்களிலும் எங்கள் குடும்ப



ரகஸ்யங்களை அறிந்துகொள்ளவே இந்தச் சூது செய்திருக்கிறார் மந்திரியார்.

மேலும் எங்களுடைய அந்தரங்க விஷயங்களை யெல்லாம் அனாவசியமாகத் தலை யிடுகிறார்" என்று குற்றம் சாட்டினார்கள்.

அதற்கும் மந்திரி மறுமொழி சொல்லவில்லை. திடீரென்று சபையில் சலசலப்பு கேட்டது. ஊர் ஜனங்கள் எல்லோருடைய சார்பிலுமாக, ஒருவர் எழுந்து வந்தார்.

"எங்களையும் நான்கு கால்கள் படைத்த மிருகங்கள் என்று எண்ணிவிட்டார் மந்திரியார். பழக்கமில்லாத வழக்கமாக எங்களைச் சோற்றில் கஞ்சி வடிக்காமல் சாப்பிடச் சொல்கிறார். நன்றாகக் கஞ்சியை வடித்து நாங்கள் மாடுகளுக்கு ஊற்றுவோம். மாடுகள் குடிக்கும் கஞ்சியை நாங்கள் குடிக்க வேண்டுமாம். கேவலம், கேவலம்" என்று ரொம்பவும் வருத்தப்பட்டார்.

மந்திரி எழுந்து "அரசியாரே, நான் என் மனத் திருப்தியுடன் தொண்டு செய்தேன். ஆனால் மக்களுக்கு விருப்பமில்லாதபோது நான் மந்திரியாக இருக்க விரும்பவில்லை. எனக்கு ஓய்வு அளியுங்கள். நான் செல்கிறேன்" என்றார்.

அரசிக்கு மந்திரியின்மேல் சந்தேகமே ஏற்பட்டது. 'புகார்களுக்கு மறுப்பு ஏதும் சொல்லாமல் விலகுகிறேன் என்கிறாரே' என்று வருத்தம் அடைந்தாள்.

"சரி! அப்படியே ஆகட்டும். நீங்கள் இவ்வளவு காலம் உழைத்ததற்குப் பலனாக உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள். கொடுக்கிறேன்" என்றாள் அரசி.

உடனே மந்திரியும் "மகாராணி! உங்கள் அன்புக்கு வந்தனம். நான் கேட்பதை மறுக்காமல் கொடுப்பீரா?" என்று கேட்டார்.

"ஆகா! கண்டிப்பாக! என்ன வேண்டும் சொல்லுங்கள்; பொன்னா? கிராமமா? நகரமா?" என்றாள்.

"எனக்கு அதிலெல்லாம் ஆசையே இல்லை. விளைச்சலில்லாத நிலமாகப் பத்து ஏக்கர் கொடுத்தால் அதுவே போதும்!"

"பூ! இதுதானா பிரமாதம்! எங்கு உங்களுக்குப் பிரியமோ அங்கேயே கொடுக்கிறேன், கேளும்" என்றாள் அரசி.

"உங்களுக்கு எங்கு தரமுடியுமோ அந்த இடமே போதும்" என்றார் மந்திரி மிகவும் சாவதானமாக.

உடனே அரசியும், எல்லாக் கிராம மணியக் காரர்களையும் அவரவர்கள் கிராமத்திலுள்ள விளைச்சலில்லாத நிலத்தின் அளவை எழுதச் சொல்லி, அதன் பட்டாக்களையும் அனுப்பச் சொன்னாள்.

என்ன ஆச்சரியம்! நாட்கள் கடந்தன. மாதங்கள் கழிந்தன.

விளைச்சலில்லாத நிலமே கடுகளவுகூட இல்லை, அந்த நாடெங்கும்.

அப்பொழுதுதான் உணர்ந்தாள் அரசி, மந்திரியாரின் மேன்மையை. நல்ல விளைச்சலை ஏற்படுத்தி மக்களை மனம் மகிழ வாழச் செய்த மந்திரியைச் சந்தேகித்தோமே என்று வருந்தினாள்.

* * *

மறுபடியும் சபை கூடியது.

மந்திரி தாம் கொண்டுவந்த சீர்திருத்தங்களின் சிறப்பை விளக்கினார்:

"ஒருபுறம் கழுதைக்குக் கல்லைக் கட்டுவதற்குப் பதிலாக மறுபுறம் அதே அளவு கூடையையே வைப்பதால் இரு நடை கழுதை அலையாம லிருக்கலாம்.

"வாயிலின் முன்புறம் சன்னல் இருப்பதால் நல்ல காற்றோட்ட வசதி ஏற்பட்டு தேகாரோக்கியம் கெடாமல் இருக்கும்.

"கஞ்சியுடன் ஆகாரம் சாப்பிடுவதால் ஆகாரத்திலுள்ள சத்து நாசமடையாமல் நம் உடலில், சேர்ந்து தேகவலிமை ஏற்படும். இதை யெல்லாம் உணர்ந்து பொது மக்களின் நன்மை கருதி இவ்வளவும் செய்தேன். ஆனால் மக்கள் என்னைத் தவறாக நினைத்தனர். ஆயினும் கடைசியில் உண்மை வென்றது."

இதைக் கேட்ட மக்கள் யாவரும் மந்திரியைப் புகழ்ந்தனர். மற்ற மந்திரிகளும் ராஜவர்மரின் மேன்மையை அறிந்து பொறாமையை ஒழித்து அவருடன் ஒத்துழைக்க முன்வந்தார்கள்.



பயர்ஸ்டோன் டயர் & ரப்பர் கம்பெனி (இந்தியா) வின் தென்,வட டிவிஷன்களின் மானேஜர்களான ஸ்ரீ கே.வி.பி. ராவ்(படத்தில் இடது கோடி) மற்றும் சர்தார் கச்சா சிங் ஆனந்த் (மூன்றாவது நிற்பவர்) யு.எஸ். ஸில் பயர்ஸ்டோனில் மேல் பயிற்சிக்காக சமீபத்தில் டி. டபிள்யூ. ஏ. விமானத்தில் புறப்பட்டனர்.

ஆறுவது மகாராணி

ரோமிய சாம்ராஜ்யம் மகோன்னத நிலையில் இருந்தபோது, கிறிஸ்துவ மதகுருவான முதலாவது கிரெகரி ரோம் நகரில் உள்ள ஒரு வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது போப் ஆண்டவராக இருந்தவர் அவர்தான்.

அவ்வமயம் அங்கு வெள்ளையர்களான சில இளைஞர்களை விலை பேசி விற்றுக் கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் அடிமைகளைப் பொது இடங்களில் விற்பதும் வாங்குவதும் பகிரங்கமாக நடந்து வந்த வியாபாரம் ஆகும்.



எலிஸபெத் மகாராணியின் குழந்தைகளான பட்டத்து இளவரசரும், இளவரசியும்

கிரெகரி அந்த இடத்தில் வண்டியை நிறுத்தி மேற்படி இளைஞர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று விசாரித்தார். அவர்கள் இங்கிலாந்து என்ற ஒரு சிறிய தேசத்திலிருந்து பிடித்து வரப்பட்ட அடிமைகள் என்று அங்கு இருந்தவர்கள் போப் ஆண்டவர் கிரெகரிக்குப் பதில் அளித்தனர்.

அந்த இளைஞர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று கிரெகரி விசாரித்த போது, மதம் என்றால் என்ன என்பதே அவர்களுக்குத் தெரியாது என்பது வெளியாயிற்று.

அவ்வளவுதான்! கிரெகரியின் மூளை வேலை செய்யத் தொடங்கியது. அவர் செயின்ட் அகஸ்டினை உடனே இங்கிலாந்துக்கு அனுப்பினார். அங்குள்ள சகலரையும் கிறிஸ்துவ மதத்துக்கு மாற்றும்படி கட்டளை யிட்டார்.


அப்போது இங்கிலாந்து ரோம் சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட நாடாக இருந்ததால், செயின்ட் அகஸ்டினின் மத மாற்ற முயற்சி மகத்தான வெற்றியைக் கொடுத்தது.

அவரும் அவரது கோஷ்டியினரும் 597 ஆண்டிலே இங்கிலாந்து போய்ச் சேர்ந்தனர். முதன் முதலில் செயின்ட் அகஸ்டின் இங்கிலாந்தில் இருந்த எதெல்பர்ட் மன்னரைக் கிறிஸ்துவ மதத்துக்கு மாற்றினார். மன்னரின் வழியைப் பின்பற்றி ஆயிரம் பதினாயிரக்கணக்கான இங்கிலாந்து மக்களும் கிறிஸ்துவர்களாக மாறினர்.

செயின்ட் அகஸ்டினின் மத மாற்றத் தொண்டைக் குறித்து மகிழ்ச்சி அடைந்த கிரெகரி அவரையே 601-ம் ஆண்டில் இங்கிலாந்தின் முதலாவது காண்டர்பரி பிரதான பாதிரியாக (Arch—bishop of Canterbury) நியமித்தார்.

இதிலிருந்து, பிரிட்டனில் கிறிஸ்துவ

முடிசூட்டு விழா ஊர்வலம் செல்லும் பாதையில் 85 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வளைவு



மதத்தைக் காட்டிலும் முடியரசு பழமையானது என்பது தெரிகிறது அல்லவா!

* * *

பல ராஜ்யங்களாகப் பிரிந்து கிடந்த இங்கிலாந்தை 829-ம் ஆண்டில் முதன் முதலாக ஐக்கியப் படுத்திய பெருமை எக்பர்ட் மன்னருக்கே உரியது.

ஆயிரம் வருஷ காலத்துக்கு மேற்பட்ட பிரிட்டிஷ் முடியரசு, மத்தியில் பதினொரு வருஷங்கள் மாத்திரமே மறைந்து, குடியரசாக மாறி யிருந்தது.

இங்கிலாந்திலே 1642-ம் ஆண்டில் உள் நாட்டுப் போர் மூண்டது. அதற்குத் தலைமை வகித்த ஆலிவர் க்ராம் வெல் இறுதியில் வெற்றி பெற்றார். மேற்படி உள் நாட்டு யுத்தத்துக்கு காரண புருஷராக இருந்த கொடுங்கோலரான முதலாவது சார்லஸ் மன்னரை சிரச்சேதம் செய்ய வேண்டும் என்ற பத்திரத்தில் கையெழுத்திட்ட பிரமுகர்களில் க்ராம்வெலும் ஒருவர்.

முதலாவது சார்லஸ் மன்னர் தூக்கிலிடப்பட்ட பின் க்ராம்வெல்லே, 1649-லிருந்து 1658 வரையில் இங்கிலாந்தின் முடிசூடா மன்னராக விளங்கினார்.



எலிஸபெத் மகாராணியும் அவரது கணவரும்

எனவே, க்ராம்வெல் மாண்ட இரண்டு வருஷங்களுக்குப் பிறகு குடியரசு முறையில் சலிப்படைந்த இங்கிலாந்து மக்கள் மறுபடியும் முடியரசை வரவேற்கத் தயாராயினர்.

அதன் பலனாக, முதலாவது சார்லஸ் மன்னரின் புதல்வரான இரண்டாம் சார்லஸ் மன்னராகப் பிரகடனம் செய்யப்பட்டார். அதன் பின் பிரிட்டிஷ் முடியரசு இன்றுவரையில் யாதொரு ஆபத்துமின்றி வா ழை ய டி வாழையாகத் தொடர்ந்து வருகிறது.

* *

பல ராஜ்யங்களாகச் சிதறிக் கிடந்த இங்கிலாந்தை ஒன்று படுத்திய எக்பர்ட் மன்னரின் சந்ததியைச் சேர்ந்த இரண்டாம் எலிஸபெத் மகாராணிக்குத்தான் சென்ற இரண்டாந்தேதி முடிசூட்டு விழா நடந்தது.

ஆதிமுதல் இன்று வரையில் இங்கிலாந்து தேசத்தை காற்பது மன்னர்களுக்கு மேல் ஆட்சி புரிந்திருக்கிறார்கள்.

ஆனால் இரண்டாம் எலிஸபெத்துக்கு முன் இங்கிலாந்தை ஆட்சி புரிந்தவர்களில் ஐந்து பேர் மாத்திரமே மகாராணிகள் ஆவர்.

1. முதலாவது மேரி, 2. முதலாவது எலிஸபெத், 3. இரண்டாம் மேரி, 4. ஆன், 5. விக்டோரியா மகாராணி இவர்கள்தான்.

இவர்களில் முதலாவது எலிஸபெத் மகாராணியும் விக்டோரியா மகாராணியும் உலக சரித்திரத்தில் அழியாத இடம் பெற்றுள்ளனர்.

முதலாவது எலிஸபெத் மகாராணி பட்டத்துக்கு வந்தபோது பிரிட்டன் மிகவும் பிற்போக்கான நிலையில் இருந்தது. சண்டைகளாலும் கலகங்களாலும் அதுவரையில் அல்லல் பட்டுக் கொண்டிருந்த இங்கிலாந்திலே எலிஸபெத் மகாராணியின் ஆட்சியில் முப்பது வருஷ காலம் தொடர்ந்து அமைதி நிலவியது.

அவரது காலத்தில்தான் இங்கிலாந்து பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்தது. அங்கு பொருளாதார சுபிட்சமும் ஏற்பட்டது.


பல சமுதாய சீர்திருத்தங்களும் மத சம்பந்தமான சீர்திருத்தங்களும் ஏற்பட்டன. வாணிபம் வளர்ந்ததும் அவருடைய காலத்தில்தான்.

எலிஸபெத் ஆட்சிபுரிந்த நாளில் பிரிட்டிஷ் மாலுமிகள் மகா சமுத்திரங்களில் மரக்கலங்களைச் செலுத்திக் கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு வழி கோலினார்கள்.

எலிஸபெத் மகாராணியின் அமைதியான ஆட்சிக்கும் ஆபத்தை உண்டாக்கக் கூடிய சம்பவம் 1588-ல் நிகழ்ந்தது. அப்போது ஐரோப்பாவிலேயே மிகவும் பலமும் செல்வாக்கும் வாய்க்கப் பெற்றிருந்த ஸ்பெயின் மன்னரான பிலிப் இங்கிலாந்தின் மீது படை யெடுப்பதற்காகத் தமது கடற் படையை அனுப்பினார்.

எலிஸபெத் மகாராணியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை பிலிப் மன்னருக்கு இருந்தது. ஆனால் அந்த ஆசை பூர்த்தி பெறாததே அவர் இங்கிலாந்து மீது கொண்ட கோபத்துக்குக் காரணம்.

அக்காலத்தில் ஐரோப்பாவிலே ஸ்பெயின் கடற் படைதான் கடல்களுக்கு எ ஜ மா ன க விளங்கியது. ஆனால் அப்போது நடந்த போரில் அதிர்ஷ்டவசமாக இங்கிலாந்தே வெற்றி பெற்றது. ஸ்பெயின் கடற் படை சிதறுண்டு போயிற்று. மேற்படி வெற்றி, இங்கிலாந்துக்குப்



பிரிட்டிஷ் மன்னர்களின் ஜாகையான ஆயிரம் வருஷத்திய வின்ட்சர் மாளிகை

பெருமையும் எலிஸபெத் ராணிக்குப் பெரும் புகழும் உண்டாகும்படி செய்தது.

எலிஸபெத் காலத்தில் தான் ஷேக்ஸ்பியர், பென் ஜான்சன் முதலிய மகா கவிகள் இருந்தனர் என்பது அவரது ஆட்சிக்கு இன்னும் அதிகமான பெருமையைத் தருவதாக இருக்கிறது.

* * *

எலிஸபெத் மகாராணி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு அஸ்திவாரத்தை அமைத்தார். விக்டோரியா மகாராணியோவெனில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மாளிகையைப் பூர்த்தி செய்தார்! பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பெருமை உச்சநிலையை அடையும்படி செய்தார்.

பிரிட்டிஷ் சரித்திரத்திலேயே விக்டோரியா மகாராணியைப்போல் அதிக காலம் ஆட்சி புரிந்தவர் வேறு யாரும் இல்லை. அவர் அறுபத்து மூன்று வருஷங்கள் வரையில் பிரிட்டிஷ் சிம்மாசனத்தில் வீற்றிருந்து பெரும் புகழ் பெற்ருர்.

விக்டோரியா பட்டத்துக்கு வந்தபோது பிரிட்டிஷாருக்கு முடியரசில் உள்ள மதிப்பு குறைந்து கொண்டிருந்தது. ஆனால் விக்டோரியாவின் காலத்தில் மீண்டும் பிரிட்டிஷ் மக்களின் மேற்படி மனோ நிலை மாறி, முடியரசில் மதிப்பும் மரியாதையும் பக்தியும் ஏற்பட்டன.

அவரது காலத்தில்தான், இந்தியாவில் "சிப்பாய்க் கலகம்" என்று பிரிட்டிஷ் சரித்திராசிரியர்கள் வர்ணிக்கும் இந்தியாவின் முதலாவது சுதந்திர யுத்தம் நிகழ்ந்தது.

அதைத் தவிர சீனு, கிரிமியா, தென்னுப்பிரிக்கா, அபிஸீனியா, ஆப்கானிஸ்தான் முதலிய நாடுகளுடன் பிரிட்டன், விக்டோரியா மகாராணி காலத்தில் போர் புரிய நேர்ந்தது.

* * *

எலிஸபெத் மகாராணியின் முடிசூட்டு விழா வைபவத்துக்காக, சென்ற பல மாதங்களாக ஒத்திகை நடந்து வந்தது என்று பத்திரிகைச் செய்திகள் கூறின. மேற்படி ஒத்திகையில் இரண்டாம் எலிஸபெத் மகாராணி உள்பட அவ்விழாவில் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டிய சகலரும் கலந்து கொண்டார்களாம்.

முடி சூட்டு விழாவின்போது அசம்பாவிதமோ, தாமதமோ எதுவும் ஏற்படாமல் இருப்பதற்காகவே ஒத்திகை செய்து பார்ப்பது வழக்கமாக இருந்து வருகிறது. பல நாள் ஒத்திகைக்குப் பிறகு கூட விழா தினத்தன்று எதிர்பாராத அசம்பாவிதம் ஏற்படுவது உண்டு.

உதாரணமாக, விக்டோரியா மகாராணிக்கு முடி சூட்டு விழா நடந்தபோது நிகழ்ந்த ஓர் அற்பத் தவறினல் விழா ஒரு மணி நேரம் தாமதிக்கும்படி நேர்ந்து விட்டதாம்.

விக்டோரியா மகாராணியின் முடிசூட்டு விழாவின்போது காண்டர்பரி ஆர்ச் பிஷப் மகாராணியின் தலையில் கிரீடத்தைச் சூட்டுவதுடன், அவரது கையில் ராஜ்யாதிகார மோதிரத்தையும் போடுவது வழக்கம். பாதிரியார், பரபரப்பினலும் அவசரத்தினலும் எந்த விரலில் மோதிரத்தைப் போட வேண்டுமோ அதில் போடாமல் வேறு விரலில் போட்டு விட்டார். பிறகு அந்த விரலிலிருந்து மோதிரத்தை எடுக்க ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. அப்போது வலி தாங்க முடியாமல் விக்டோரியா மகாராணி மிகவும் வேதனைக்கு உள்ளாகும்படி நேர்ந்ததாம்! மேற்படி விவரத்தை விக்டோரியா மகாராணியே தமது சுயசரிதக் குறிப்புகளில் எழுதியுள்ளார்.

முதலில் இந்த அசந்தர்ப்பங்கள் வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் அளித்தாலும், பின்னர் இவையே இன்பமளிக்கும் சுவாரஸ்யமான விஷயங்களாகி விடுகின்றன.

1702-ம் வருஷம் ஆன் மகாராணிக்கு முடி சூட்டு விழா நடந்தபோது, அவருக்கு முப்பத்தேழு வயதாகியிருந்தது. அந்த வயதுக்குள் பதினறு குழந்தைகளைப் பெற்றெடுத்த அவர் நோய் வாய்ப்பட்டிருந்ததால், நாற்காலியில் படுக்கவைத்து அவரை வெஸ்ட்மின்ஸ்டர் கிறிஸ்துவ தேவாலயத்துக்குக் கொண்டு வரும்படி நேர்ந்தது.

நாலாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழா 1821-ம் ஆண்டில் நிகழ்ந்த போது அவர் முடி சூட்டு விழாவுக்கு மகாராணி கரோலைன் (அவரது மனைவி) வரக்கூடாது என்று கட்டளையிட்டு விட்டார்! அதனல் நாடெங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கடைசியில் விழா நடந்து கொண்டிருக்கையில், மகாராணி பலாத்காரமாக ஆலயத்துக்குள் பிரவேசிக்கும்படி நேர்ந்தது.

மன்னரின் மேற்படி செய்கையால் ஆத்திரம் அடைந்த ஜனங்கள் குறிப்பிட்ட வழிநெடுக நின்று கொண்டு அவருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனல் மன்னரின் ஆலோசகர்கள் மன்னரைக் கொல்லைப்புற வழியாக வேறு பாதையில் அரண்மனைக்கு இரகசியமாக அழைத்துச் சென்று விட்டார்கள்!

இரண்டாம் எலிஸபெத் முடிசூட்டு விழாவின்போது உடுத்திக் கொண்ட உடைகளை கென்ஸிங்டன் மியூசியத்தில் வைத்துப் பாதுகாத்து வருவார்கள். எதிர்கால சந்ததிகள் கண்டு களிப்பதற்காக, பிரிட்டிஷ் மன்னர்களும் மகாராணிகளும் முடி சூட்டு விழாவின்போது உடுத்திக் கொள்ளும் உடைகளை மேற்படி மியூசியத்தில் வைத்துப் பாதுகாப்பது பிரிட்டிஷ் சம்பிரதாயமாக இருந்து வருகிறது.

பிரிட்டிஷ் சாதி ஓர் அதிசயமான சாதிதான்! உலகமெல்லாம் அரசர்களும் அரச குலத்தவர்களும் மறைந்துவிட்ட இந்தக் காலத்தில், இவ்வளவு ஆர்பாட்டங்களுடனே தங்கள் மகாராணியின் முடிசூட்டு விழாவை நடத்துகிறவர்கள் அதிசயமான மனிதர்கள் அல்லவா! வருங் காலத்தில் அவர்களையே கூட மியூஸியத்தில் வைத்து உலகத்தினர் வேடிக்கை பார்க்கும்படி இருக்குமோ, என்னமோ, யார் கண்டது!

இப்பொழுது! மக்ளீன்ஸ் க்ளோரோபில் சேர்ந்த

மற்றொரு உயர்தரப் பற்பசையைத் தருகின்றனர்!



உலகிலேயே மிகச் சிறப்பா
கப் பற்களை வெளுக்கும் பற்
பசையுடன் இயற்கையளிக்
கும் துர்க்கந்த நாசினி சேர்
ந்ததுதான் இப்புதிய உன்
னத பற்பசை—மக்ளீன்ஸ்
பெராக்ஸைட், க்ளோரோ
பில் சேர்ந்த பற்பசையாகும்

இதில் உண்மையில் புதிய அம்சங்களிருக்கின்றன. மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையுடன் க்ளோரோபில் சேர்ந்திருக்கிறது. அசல் பற்பசை விடவில்லை, கால சோதனையில் நிரூபணமான எந்தப் பொருளும் இதில் நீக்கப்படவில்லை—அதே விசேஷத் திட்டத்தின்படி உருவானது தான்—ஆனால் க்ளோரோபில் சேர்க்கப்பட்டது. ஆகவே க்ளோரோபில் பற்களை சுத்தம் செய்யாது. ஸ்வாசத்தை சுத்தமாக்குகிறது. ஆகவே க்ளோரோபிலின் பயனை அனுபவிக்கும்போதே பற்களும் தூவெண்மையுடன் பிரகாசிக்கவேண்டியது எவ்வளவு அவசியம்! மக்ளீன்ஸ் பெராக்ஸைட்—க்ளோரோபில் சேர்ந்த—பற்பசை உபயோகிப்பதுதான் அதற்கு நிச்சயமான வழி.



க்ளோரோபில் சேர்ந்த
மக்ளீன்ஸ்
பெராக்ஸைட் பற்பசை

— பற்களை அதிக வெண்மையாக்குகிறது
— ஸ்வாசத்தை மணமுறச்செய்கிறது

மக்ளீன்ஸ் உபயோகிப்போர் கவனிக்கவும்:— அசல் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையும் வழக்கம்போல எங்கும் கிடைக்கும்.

வியாபார விவரங்களுக்கு

ஜே. எல். மாரிஸன் ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்,
தபால் பெட்டி 6527, பம்பாய் 26. தபால் பெட்டி 387, கல்கத்தா.
தபால் பெட்டி 1370, சென்னை

CPH - 1 - TAM

வட்ட மேஜை

தேசாய் தந்த அதிர்ச்சி

இலங்கை இந்தியர்களின் வாழ்விலே சோதனை நிறைந்த சம்பவங்கள் எவ்வளவோ கண்டிருக்கிறோம். "கடைசி இந்தியன் இலங்கையை விட்டு வெளியேறும் வரை எனக்குத் தூக்கமே வராது" என்று கனம் பண்டார நாயகா சபதம் செய்த பொழுதும், "பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைக்குச் செய்த பெருந் தீங்கு, தோட்டங்களில் இந்தியர்களைக் கொண்டு நிரப்பியதுதான்" என்று கனம் கன்னங்கரா கூறிய பொழுதும், இன்னும் சிறு குழந்தைகள் கன்னுபின்னு வென்று பிதற்றுவது போல் அபாண்டமான பழிகளை இந்தியர்கள் மேல் போட்டு இந்தியத் துவேஷத்தை வளர்க்க இலங்கை மந்திரிகளில் சிலர் முயன்றபோதும் எங்களுக்கு என்னளவு கலக்கமும் ஏற்படவில்லை. ஏன்! இப்பொழுது வீதிகளில் செல்லும்பொழுது வேஷ்டி கட்டிக் கொண்டு போகும் இந்தியர்களை, "ஏய்! கள்ளத் தோணி!" என்று சர்வ சகஜமாக ஒரு சில இலங்கையர்கள் கூப்பிடுவது கூட எங்களுக்கு எவ்வித அதிர்ச்சியையும் தரவில்லை. இவையெல்லாம் தராத அதிர்ச்சியை, மனக் கலக்கத்தை, ஒரு நிலையற்ற எண்ணத்தை, பொறுப்பு அதிகம் கொடுக்கப்பட்டுள்ள இந்தியரொருவரின் பொறுப்பற்ற பேச்சு தந்துவிட்டது.

இலங்கையிலுள்ள இந்தியர்கள், இலங்கைப் பிரஜைகள் ஆகாவிட்டாலும் கூடத் தொடர்ந்திருக்க அனுமதிக்கப் படுவார்களென்று காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் டி. எஸ். சேனநாயகா நேருஜியிடம் சொன்ன வாக்குறுதியை உலகம் அறிந்ததே. தற்போதைய பிரதமர் கனம் டட்லி சேனநாயகாவும், தம் தகப்பனார் கொடுத்த வாக்குறுதிக்கு எதிராகப் பாரதூரமான நடவடிக்கைகளில் இறங்கவில்லை.

இலங்கை அரசாங்கத்தையும் அதன் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்களையும் நல்லவர்களாக்கி விட்டார் இலங்கைக்கு இந்திய ஹை கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ தேசாய்.

இந்திய வர்த்தகர்கள் கூட்டத்தில் அவர் பேசியதினின்றும், "வீரகேசரி" நிருபருக்கு அவர் அளித்த பேட்டியினின்றும் பொறுக்கி எடுக்கப்பட்ட சாராம்சத்தின் ஒரு பகுதி :—

"இங்கிருக்கும் இந்தியர்கள் இலங்கையின் விருந்தாளிகளைப் போன்றவர்கள். இங்கு அவர்கள் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்படுவது இரண்டு விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. ஒன்று இலங்கையின் தயவு; மற்றொன்று அவர்களால் இலங்கைக்கு நன்மை ஏற்படுவது. இந்தியர்கள் இங்கு தொடர்ந்திருக்க வேண்டுமாயின், இலங்கை அரசாங்கத்தின் நண்பர்களாயும், இலங்கைக்கு உபயோகமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் இந்தியாவுக்குப் போய்விட வேண்டும். விருந்தாளிகளை நினைத்த மாத்திரத்தில் வெளியே போகச் சொல்ல வீட்டுக்காரனுக்கு உரிமை உண்டு. அது போலவே இந்திய விருந்தாளிகளை அவர்கள் தேவையில்லையென்று நினைக்கும் பொழுது வெளியே போ என்று சொல்ல இலங்கை அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

"சுருக்கமாகச் சொல்லப் போனால், இந் நாட்டில் இந்தியப் பிரஜைகளாயிருப்பவர்களுக்கு இலங்கையில் எவ்விதமான உரிமையுமிருப்பதாக ஒப்புக்கொள்ள நான் தயாராயில்லை. அவர்கள் சார்பில் இங்கு உரிமைகள் கேட்கவும் இந்தியா தயாரில்லை. இலங்கையில் இந்தியப் பிரஜைகள் தொடர்ந்திருப்பது இலங்கை அரசாங்கத்தின் தயவைப் பொறுத்தது" என்று கூறியிருக்கிறார்.

அவரது பேச்சைக் கவனித்தபொழுது அவர் இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் ஸ்தானிகரா அல்லது இலங்கை அரசாங்கத்தின் பிரசார இலாகாத் தலைவரா என்று யோசிக்கத் தோன்றியது.

நாங்கள் கோருவதெல்லாம் ஒன்றே ஒன்று தான். எங்கள் சார்பாக (இலங்கையில் இந்தியப் பிரஜைகளாகத் தொடர்ந்திருப்பவர்களுக்காக) ஸ்ரீ தேசாய் எதுவுமே செய்ய வேண்டாம். இலங்கை அரசாங்கத்திடம் எங்களுக்காகப் பரிந்து பேசவும் வேண்டாம். தயவு செய்து அவர் எங்களுடைய உரிமைகளைப் பற்றிய அவரது அபிப்பிராயங்களையும், கொள்கைகளையும் பிரசங்க வாயிலாக வெளியிடாமல் வாயை மூடிக்கொண்டிருந்தால், அதுவே பெரிய உதவியாயிருக்கும். அல்லது இந்திய அரசாங்கம் தேசாயைத் திருப்பி அழைத்துக்கொண்டு விடட்டும்.

கொழும்பு
22—5—53
சுந்தரன்

[ஸ்ரீ சி. சி. தேசாய் இலங்கையிலுள்ள இந்திய வியாபாரிகள் முதலியோரின் உள்ளத்தை ரொம்பவும் புண்படுத்தியிருக்கிறார் என்று தெரிகிறது. இதற்காக மிகவும் வருந்துகிறோம். ஆனால் ஸ்ரீ தேசாய் இப்படியெல்லாம் பேசிவிட்டதனாலேயே இலங்கை மந்திரிகளின் மனப் போக்கு அதிகம் மாறிவிடும் என்று நாம் நம்பவில்லை. ஸ்ரீ தேசாய்க்கு முந்தையவர்கள் இந்தியர்களின் உரிமைகளை வற்புறுத்திப் பேசிய காலத்தில் இலங்கை மந்திரிகள் ஒன்றும் மசிந்து கொடுத்து விட வில்லையல்லவா! — ஆசிர்.]

●

தியாகிகளும் நிலமான்யமும்

பணம், பதவி, புகழ் எதையுமே சிந்தித்து மறியாது, பிரதிப் பிரயோஜனம் எதுமே எதிர்பாராது தேசபக்தியால், தியாகபுத்தியால் செய்யப்பட்ட சேவையை மண்ணாலும் பொன்னாலும் மதிப்பிட நேர்ந்தது பரிதாபமே!

முன்னர் தேசத் தொண்டர்களிடையே தலைமை பூண்டு செய்து வந்த பொதுநல சேவையைத் தான் தற்போது, நம் தேசத் தலைவர்கள் தொடர்ந்து அரசாங்கத்தின் தலைமை தாங்கிச் செய்து வருகிறார்கள்.

அத்தலைவர்களின் வழிவந்த தொண்டர்களும் அவர்களைப் போலவே தம் முக்கிய சேவையைத் தொடர்ந்து இப்போதும் செய்துவரச் சந்தர்ப்ப சௌகர்யங்களை எதிர்பார்த்து நிற்கிறார்களே யல்லாது ஐந்து ஏக்கரா பிச்சையை யல்ல.

நிஷ்காம்யமாய்ச் செய்த சேவைகளை இவ்வாறு ரூபாய் அணா பைசாக்களில் மதிப்பிடுவதையும், இனாம் என்ற பெயரால் பிச்சை கொடுப்பதையும் கண்டு உண்மைத் தொண்டன் உள்ளம் வெதும்பி வருந்துகிறான். அவனுக்கு அளிக்கப்படும் ஐந்து ஏக்கரா பூமி அவனுக்கு இழைக்கப்பட்ட அவமானத்தின்—அவன் சேவைக்கு இழைக்கப்பட்ட அநீதியின் — சின்னமே யாகும்.

நேருஜி முதலிய தலைவர்களை அரசாங்கப் பதவிகளில் அமர்த்தி அவர்கள் சேவையை நாட்டு நலனுக்கு உபயோகித்துக் கொள்வதைப் போலவே தொண்டனின் சேவையையும் பயன்

படுத்திக் கொள்வதே தேசிய சர்க்காரின் முதற் கடமையாகும். மூத்திய சேவையைப் பாராட்டும் முறையில் இன்று சேவை செய்யச் சந்தர்ப்பம் அளித்து இன்று செய்யும் சேவைக் கேற்ப ஊதியம் அளித்து வரலாம். அன்று செய்த சேவை பொது மக்களுக்கு மாத்திரமே. இன்றோ அரசாங்கத்துக்கும் சேர்த்தே சேவை செய்வதால் உழைப்பிற்கு அரசாங்கம் ஊதியம் கொடுப்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது.

, நிஷ்காம்யமாக அன்று செய்த சேவைக்காக ஐந்து ஏக்கரா பிச்சை ஏற்ருன் என்ற அபவாதத்தைத் தொண்டனுக்குத் தேடித் தருவதேன்! இன்று பெற்ற சந்தர்ப்பத்தால் உழைத்து ஊதியம் பெறுகிறன் என்ற பெருமை அவனுக்குக் கிடைக்கட்டுமே!

உயர்ந்த பதவிகளையோ, சிறந்த பட்டங்களையோ, பெருத்த ஊதியத்தையோ தொண்டன் கோரவில்லை. அன்றுபோல் இன்றும் தொண்டு செய்யச் சந்தர்ப்பத்தையே கோருகின்றன். அதை மறுப்பது அவனுக்கு மாத்திரமேயன்றி நாட்டுக்கும் நாட்டின் பரம பிதாவுக்கும் இழைக்கப்பட்ட அநீதியாகும். இவ்வாறு அநீதிக்காளான தொண்டனுக்கு ஐந்து ஏக்கரா பிச்சை கொடுப்பது அந்த அநீதியின் சிகரமல்லாது வேறென்ன!

கோயமுத்தூர்
23—5—53 பவானி நடேசன்

[தியாகிகளுக்கு நிலமான்யம் கொடுப்பதைப் 'பிச்சை' என்றோ, 'அநீதியின் சிகரம்' என்றோ, நாம் கருதவில்லை. தியாகிகளுக்குக் கொடுக்கச் சர்க்காரிடம் போதிய நிலம் இருக்கிறதா என்பது முக்கியமான கேள்வி. அப்படிக் கொடுத்த சில இடங்களில் கிராமவாசிகள் எவ்வளவு விரோத மனப்பான்மை கொண்டு விட்டார்கள் என்பது சிந்திக்க வேண்டிய விஷயம். மொத்தத்தில் தியாகிகளுக்கு இந்த நில மளிப்புத் திட்டத்தினால் நன்மை ஏற்பட்டிருக்கிறதா, அல்லது வீண் பழியைச் சுமந்ததுதான் லாபமா என்பதையும் கவனிக்க வேண்டும். நிலமளிக்கும் திட்டத்தினால் தியாகிகளுக்குக் கஷ்ட நஷ்டங்களும், காங்கிரஸுக்கு அவப் பெயரும், பொது மக்களிடையே அவமதிப்பும் ஏற்பட்டிருக்கின்றன என்று நாம் உறுதியாக நம்புகிறோம். ஆகையினாலேயே, தியாகிகள் நிலக் கிளர்ச்சியில் ஈடுபட்டு மேலும் தங்களுக்கு அபகீர்த்தி விளைவித்துக் கொள்ளக் கூடாது என்று விரும்புகிறோம். தியாகிகளின் சேவையை உசிதமான முறையில் நாட்டுக்குப் பயன் படுத்திக் கொள்ளத் திட்டம் வகுப்பது அவசியம் என்று ஒப்புக் கொள்கிறோம்.—ஆசிரியர்]

●

புதிய கல்வித் திட்டம்

நாங்கள் "ராஜாஜியின் பிடிவாதம்" என்ற தலையங்கத்தில் "கிராமாந்திரங்களின் பக்கமே போய்ப் பார்த்தறியாதவர்கள் கிராமக் குழந்தைகளின் நன்மைகளைப் பற்றிப் பேசுகிறார்கள்" என்றும்; அடுத்த பக்கத்தில் "மெக்காலே துரையின் பரம்பரையில் வந்த ஆசிரியர்கள் — அதிலும் கல்வி மகாநாட்டிற்கு விஜயம் செய்யும் ஆசிரிய சிகாமணிகள்" என்றும் கேலியாக எழுதியிருப்பது ஆசிரியர்களுக்கு மனவருத்தத்தை உண்டாக்குகிறது. தவிர, சுமார் இரண்டு லக்ஷத்திற்கு மேற்பட்ட ஒரு சமூகத்தைப் பற்றி அதுவும் லக்ஷக்கணக்கான இளஞ் சிறார்களுடைய மதிப்பை ஆதாரமாகக் கொண்டு தொழில் நடத்த வேண்டிய நிலையிலிருக்கும் ஒரு சமூகத்தைப் பற்றி "கல்கி" போன்ற பத்திரிகை இம்மாதிரி எழுதுவது இன்னும் வருந்தத்தக்க விஷயம். ஏனெனில் லக்ஷக்கணக்கான மாணவ மாணவிகள் படிக்கும் தங்கள் பத்திரிகை, ராஜாஜியின் ஆரம்பக் கல்வித் திட்டத்திற்கு ஆசிரியர்களின் ஆட்சேபத்தை அரைகுறையாக அறிந்து இவ்வாறு எழுதுவது எங்கள் மனத்தை, ஏற்கெனவே ஊதியக் குறைவால் சோர்வடைந்த மனத்தைப் புண்படுத்துகிறது. புதிய திட்டம் சரியாக நிறைவேறுவதற்குத் தகுந்த நிலை இதுவா!

நிற்க. இந்தத் திட்டத்தை வரவேற்கும் சில ஆசிரியர்களுள் நான் ஒருவன். ஆயினும் லக்ஷக் கணக்கான சிறுவர்களைப் பாதிக்கும் இத்திட்டம் வெற்றியுடன் அமுலுக்கு வர வேண்டுமானல் புள்ளி விவரங்கள், முன்னேற்பாடுகள், சிக்கல்களை நீக்க வழிகள் இவைகளை எல்லாம் முன்கூட்டித் தெளிவுபடுத்தப் போதிய காலம் இடையில்லை. மூன்று மணிப் பள்ளிப் படிப்பிற்குப் பிறகு சிறுவர்களை ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் அவிழ்த்து விடுவது ஒன்றுதான் இதன் நோக்கமாக யிருக்குமாயின் ஒரு முன்னேற்பாடும் அவசியமில்லை. உடனே அமுலுக்கு வந்து விடலாம். ஆனல் இது அப்படியல்ல.

உதாரணமாக ஒவ்வொரு பள்ளியிலும் படிக்கும் சிறுவர்களுக்கு மற்ற நேரத்தில், தொழில் பயிலும் நேரத்தில் தொழிலைக் கற்றுக் கொடுக்க முடியாத நிலையில் எவ்வளவோ பெற்றோர்கள் கிராமங்களில் உளர். இவர்களுடைய குழந்தைகளுக்கு ஏதோ ஒரு தொழிலைக் கற்றுக் கொடுக்கப் பெற்றோரல்லாத எவ்வளவு தொழிலாளிகள் அல்லது விவசாயிகள் முன் வருவர்! நான் விசாரித்த அளவில், தொழிலைக் கற்றுக் கொடுக்க அல்லது வேலையில் வைத்துக் கொள்ளப் பெற்றோரல்லாத மற்றவர் இசைவது மிகக் கஷ்டம் என்று தெரிகிறது. இதற்குள், கல்வி இலாகா அதிகாரிகளும் இதை அறிந்திருப்பர்.

"ஆசிரியர்க்கு வேலையில்லாமல் போய்விடுமோ" என்று உபாத்தியாயர் சங்கத் தலைவர் பயப்படுவதாகச் சொல்லி யிருக்கிறீர்கள். ஆனல் நாங்கள் உண்மையில் பயப்படுவது, மாதம் ரூபாய் முப்பதுக்குக்கூட வழியில்லாது வேலை செய்யும் ஆரம்ப ஆசிரியர்கள் முன்னைவிட இனி இருமடங்குப் பிள்ளைகளுக்கு அதிக நேரம் போதித்தும் (முன்னர் 4 மணி இப்பொழுது 6 மணி) ஊதியம் உயர்வடையும் வழி ஒன்றையும் காணுததே.

அது எப்படி யிருந்த போதிலும், நமது ராஜ்யம் சர்வாதிகாரியின் ஆட்சி அல்ல. ஆகையால் ஒரு திட்டம் அமுலுக்கு வருமுன் சம்பந்தப்பட்டவரையோ, நிபுணர்கள் என்று ஒப்புக் கொள்ளப் பட்டவர்களையோ, அல்லது சட்ட சபையையோ, கலந்து கொண்டுதான் அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கோருவது ஜனநாயகம்தான். அப்படிக் கேட்காமல் கொண்டுவரும் திட்டத்தில் உள்ள குறைகளை எடுத்துரைப்பது தவறு என்று அரசியல் வாதிகள் கூடச் சொல்ல மாட்டார்கள்.

உறையூர் ர. பூவராகன்
25—5—53 காரியதரிசி, திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கம்.

[ஆசிரியர்களிடம் நமக்குப் பெரு மதிப்பு உண்டு என்பது பிரசித்தமான விஷயம். ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காகப் பற்பல பெரர்கள் நடத்தி யிருக்கிறோம்.

கல்வி இலாகா நிபுணர்களைக் கலந்து நீர்க்காலோசனை செய்துதான் சென்னை சர்க்கார் புதிய திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அதில் குற்றம் சொல்ல ஆசிரியர்களுக்கு ஜனநாயக

உரிமை உண்டு என்றால், ஆசிரியர்களின் கருத்தை மறுக்க நமக்கும் ஜனநாயக உரிமை உண்டு.

நாம் ஆசிரியர்களின் கருத்தைச் சரிவர உணர்ந்து கொள்ளாமல் அவசரப்பட்டு எழுதினோம் என்று சொல்கிறீர்கள். சர்க்காரின் புதிய திட்டம் இன்னதென்பதைக் கூட நன்கு அறிந்து கொள்ளாமல் மங்களூரில் ஆசிரியர்கள் "புதிய திட்டம் பிள்ளைகளுக்குத் தீங்கு விளைவிக்கும்" என்று தீர்மானித்தது எவ்வளவு அவசரக் குடுக்கைத் தீர்மானம்!

தாங்கள் புதிய திட்டத்தை வரவேற்பது பற்றி மகிழ்கிறோம். தங்களுடைய ஆட்சேபங்களில் பல, இந்த வாரம் கல்வி இலாகா சேகரித்து வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்களினால் அடிபட்டுப் போகின்றன.

மூன்று மணி நேரம் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போகும் பிள்ளைகள் ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் அவிழ்த்து விடப்படுவதைப் பற்றிச் சொல்லுகிறீர்கள்.

இன்னும் இரண்டு மணி நேரம் அவர்களைக் கட்டுக்குள் வைத்து விட்டால், மிச்சமுள்ள 19 மணி நேரமும் என்ன ஆகிறதாம்!

அன்றியும், நாற்பது லட்சம் குழந்தைகள் இன்று பள்ளிக் கூடத்துக்கே போக முடியாமல் நாள் முழுதும் கட்டவிழ்த்து விடப்பட்டவர்களாகத் திரிகிறார்களே! அவர்களைப் பற்றித் தாங்கள் சிறிது எண்ணிப் பார்க்க வேண்டாமா!

ஆசிரியர்கள் இரு மடங்கு பிள்ளைகளுக்குப் போதிக்க ஆறு மணி நேரம் வேலை செய்ய நேரும் என்ற கவலையைத் தெரிவிக்கிறீர்கள். ஆலைகளிலும் வயல்களிலும் உழைப்பாளிகள் எட்டு மணி நேர வேலை செய்கிறார்கள். நேருஜி போன்ற தலைவர்கள் தினம் பதினெட்டு மணி நேரம் வேலை செய்கிறார்கள். சுதந்திர இந்தியாவில், ஆறு மணி நேரம் குழந்தைகளுக்குப் போதிக்க மறுக்கும் ஆசிரியர்களிடம் பொது மக்கள் ஒரு நாளும் அநுதாபம் கொள்ள முடியாது.

புதிய திட்டத்தின்படி ஆசிரியர்களின் சம்பள நிலைமை நாளடைவில் உயர்வதற்குக் கட்டாயம் இடம் உண்டு என்று கருதுகிறோம். — ஆசிரியர்]

●

பதவிக்கு விபத்து ?

காங்கிரஸின் கொள்கைக்கும், சோஷலிஸ்ட் கட்சியின் கொள்கைக்கும் மிகுந்த வித்தியாசமிருக்கிறது. நஷ்ட ஈடின்றி நிலப் பிரபுத்துவத்தை ஒழிப்பது, அடிப்படைத் தொழிற்சாலைகள், பாங்க், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் ஆகியவற்றைத் தேசிய மயமாக்குவது, மத்திய அரசாங்கத்திடம் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பரவலான முறையில் அதாவது கிராமம், ஜில்லா, மாகாணம், மத்திய அரசாங்கம் என்ற அடிப்படையில் பிரிப்பது போன்ற கொள்கைகளைக் காங்கிரஸ் ஒப்புக் கொள்வதில்லை. நஷ்ட ஈடின்றி எந்த விதமான நடவடிக்கையிலும் இறங்கக் காங்கிரஸுக்குத் துணிவு இல்லை. இரண்டு முரண்பட்ட கொள்கையுள்ள கட்சிகள் ஒத்துழைப்பது என்பது நடவாத காரியம். அத்துடன் காங்கிரஸ் மூலம் இந்த நாட்டில் சோஷலிஸம் வரும் என்று நினைப்பதும் பகற்கனவாகும். காங்கிரஸில் 90% பிற்போக்காளர்களும், பதவி வேட்டைக்காரர்களும், தியாகத்தை விலை கூறித் திரியும் தகிடுதத்தக்காரர்களும் நிறைந்துள்ளார்கள். அப்படிப்பட்ட ஒரு பிற்போக்காளர்களைக் கொண்ட கட்சியின் மூலம் சோஷலிஸத்தை அடைய முடியும் என்று எப்படி நம்ப முடியும்!

தோழர் எஸ். சங்கரன் அவர்கள் 24—5—53 தேதி "கல்கி"யில் "வட்ட மேஜை" என்ற பகுதியில் வெளியிட்டிருக்கும் கடிதத்தில் "கொள்கையைச் சரிவரப் புரிந்து கொள்ளாதவர்கள், குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள், படித்தவர்கள் கட்சிக்குள் வந்துவிட்டால், தங்கள் பதவிக்கு விபத்து வந்து விடுமோ எனப் பயந்தவர்கள், ஜாதிய வெறியினால் எண்ணத்தில் பின்னமடைந்தவர்கள் இவர்கள் சட்டைப் பைக்குள் அடங்கிவிட்ட செல்லாக் காசாக மாறிவிட்டது சோஷலிஸ்ட் கட்சி" என்று குறிப்பிட்டுள்ளது அபத்தமானது. சோஷலிஸ்ட் கட்சியின் கொள்கைத் திட்டங்களிலே நம்பிக்கையுள்ள ஒவ்வொருவருக்கும் கட்சியில் இடமுண்டு. ஆனால் கட்சியின் கட்டுப்பாடுகளுக்கு அடங்காமல் மீறுபவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கக் கட்சி தயங்குவதில்லை. இது ஒரு சில தோழர்களுக்குப் பிடிப்பதில்லை. இந்தியாவிலேயே ஜாதிமதப் பித்தில்லாதவர்களைக் கொண்ட கட்சி சோஷலிஸ்ட் கட்சிதான். சோஷலிஸ்ட் கட்சியில் மற்ற கட்சிகளில் உள்ளதைப் போலப் பதவிப் பித்து கிடையாது. தலைமைப் பதவிக்கு விபத்து ஏற்படும் என்று பயந்து படித்தவர்களைக் கட்சிக்குள் விடாமல் தில்லுமுல்லுகள் செய்கிறார்கள் என்று கூறுவது அர்த்தமற்ற குற்றச்சாட்டு.

ஆம்பூர்
26—5—53 எம். பொன்னுரங்கம்



ரமாவின் அன்பு

வேங்கடலட்சுமி

எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்பு இன்றுதான் மீண்டும் அச்சிறிய கைப்பெட்டி என்னுடைய கண்ணில் மீண்டும் தென்பட்டது. உபயோகமற்ற பழைய சாமான்களின் ஜாபிதாவில் அதையும் சேர்த்துப் பரண்மீது போட்டிருந்தாள் என் மனைவி.

இன்று என் பேரனுடைய விளையாட்டுப் பந்து அவன் வீசிய வேகத்தில் பரண்மீது போய் விழுந்துவிட்டது. குழந்தை அதை உடனே எடுத்துக் கொடுக்கும்படி என்னை நச்சரித்தான். இன்னும் சற்றுத் தாமதித்தால் பெரிய அழுகையைக் கிளப்பி விடுவான். பிறகு அவனைச் சமாதானப் படுத்த ஒருவராலும் முடியாது. ஆகவே அவசரமாக வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு பரண் மீது ஏறினேன்.

குழந்தையின் பந்தைக் கண்டுபிடித்துத் தூசி போகத் துடைத்து அவனிடம் வீசினேன். குதூகலத்துடன் அதை யெடுத்துக் கொண்டு வாசலுக்கு ஓடிவிட்டான் அவன். நானும் கீழேயிறங்க எத்தனித்தேன். அச் சமயத்தில் தான் அக் கைப்பெட்டி என் கண்ணில் பட்டது. நெடுநாளாக அங்கேயே கிடந்தமையால் அதன் மீது மண்ணும் தூசியும் ஏகமாய் மூடிக் கிடந்தன. ஒரு விநாடி யோசித்த பின்பு அதைக் கையிலெடுத்துக் கொண்டு கீழே யிறங்கியவன் என்னுடைய அறைக்குள் நுழைந்து அதை மேஜையின் மீது வைத்தேன். பெட்டியை நன்றாக ஒரு துணியால் துடைத்து விட்டு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அதைப் பார்த்தபடியே உட்கார்ந்தேன். அதைத் திறப்பதா வேண்டாமா என்ற யோசனை பலமாக என் மனசில் தோன்றிப் போராடியது. திறக்க வேண்டும் என்ற ஆதங்கம் எனக்கு ஏற்படவில்லை. ஏனெனில், அதற்குள் என்ன இருக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

சற்று நேரம் வரையில் ஏதோ கற்பனையுள் அழுந்திக் கிடந்தேன். பிறகு மெதுவாகக் கையை நீட்டி அப்பெட்டியின் மூடியைத் திறந்தேன்.

என் கைகள் லேசாக நடுங்கின. பெட்டிக்குள் ஒரு சிறிய மங்கிப் போன கடிதத்தில் "என் பிரிய மனைவி ரமாவுக்கு" என்று என்னுடைய கையெழுத்தில் காணப்பட்டது. எத்தனையோ வருஷங்களாகி விட்டமையால் கடிதம் மங்கிப் போய்க் கையெழுத்துக்கள் அரை குறையாகத் தெரிந்தன. அடியில் தேதி 19-12-'29 என்று போட்டிருந்தது. சட்டென்று அக் கடிதத்தைப் பெட்டியிலே போட்டு விட்டு மூடி வைத்தேன். பிறகு எழுந்து போய் என்னுடைய பீரோவின் செருகு பெட்டியிலிருந்து ஒரு பெரிய கவருக்குள் வைக்கப்பட்டிருந்த பழைய புகைப்படமொன்றை எடுத்து வந்து வைத்துக் கொண்டு மீண்டும் உட்கார்ந்தேன். அந்தப் படத்திலும் அதே தேதிதான் காணப்பட்டது 19-12-'29.

என் நெஞ்சிற் குமிழியிட்டுப் பொங்கின எண்ண அலைகள். கண்ணின் முன்பாக ஏதோ ஒரு திரை விழுந்தது போன்ற பிரமை உண்டாயிற்று. படபடவென்று விம்மிப் புடைத்த இருதயம் பெரும் கற்பாறை போலக் கனத்தது. கண்களை மூடிய படியே நாற்காலியில் சாய்ந்து கொண்டேன்.

ஆம். இன்று சரியாக முப்பது வருஷங்களாகின்றன, நானும் அவளுமாகச் சேர்ந்து அந்தப் புகைப் படமெடுத்துக் கொண்டு. அதே தினம்தான், சென்னையில் சைனா பஜாரில் ஒரு கடையிலிருந்து அந்த மரப் பெட்டியை அவளுக்குப் பிறந்த நாள் பரிசாக வாங்கிக் கொடுத்தேன். அப் பெட்டியின் விலை பத்து ரூபாய். என்னிடம் அப் பெட்டியை வாங்கக் கூடிய பணம் அப்பொழுது கிடையாது. இருந்தாலும் புதிதாக மணம் புரிந்த என் இளம் மனைவியிடம் என் பொருளாதார நிலைமையை நான் அப்பொழுது ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. ஆகவே, இரவு வீட்டுக்கு வருகையில் அதை வாங்கி வந்து என்னுடைய அறையில் இதே மேஜையின் மீது வைத்தேன். விடியற்காலம் என் மனைவி கண் விழித்தெழுந்தவுடன் அதை அவள் பார்த்து ஆச்சர்யத்தில் மூழ்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அதை அவள் கண்ணில் படும்படியாக வைத்திருந்தேன். ஆனால் இவ்வுலகில் நாம் எதிர்பார்ப்பது போல் எதுதான் நடக்கிறது?

விடியற்காலம் ரமா எழுந்து வந்தாள். பெட்டியையும் பார்த்தாள். ஒரு வினாடி அவள் முகம் மலர்ந்தது. ஆனால் அடுத்த கணமே அதில் சோகத்திரை படர்ந்தது.

என்னைப் புன்சிரிப்புடன் நோக்கி, "இதை எதற்காக வாங்கி வந்தீர்கள்? இப்பொழுது நமக்கிருக்கும் செலவுகளையெல்லாம் சரிக்கட்டவே பணம் போதவில்லையே! இந்த அநாவசியச் செலவெல்லாம் எதற்கு?"— என்று மனசில் தோன்றியதைப் பளிச் சென்று கேட்டு விட்டாள். அவள் கேட்டது அவ்வளவும் வாஸ்தவம். எனக்கோ வரும்

படி குறைவு. செலவு அதிகம். ஒரு நடுத்தர வகுப்புக் குடும்ப அந்தஸ்துக்கு ஏற்றபடி இருந்தேன். அப்படியிருக்க நான் முழுசாகப் பத்து ரூபாயைத் தூக்கிக் கொடுத்து ஒன்றுக்கும் உதவாத ஒரு சிறு கைப் பெட்டியை வாங்கிக் கொண்டு வந்தது முட்டாள்தனமல்லவா?

இருந்தாலும் என்னுடைய புத்தியீனத்தையும் ஏமாற்றத்தையும் சட்டென்று ஒப்புக் கொள்ள நான் விரும்பவில்லை. ஆகவே, "என்ன ரமா! இன்றைக்கு உனக்குப் பிறந்த நாளல்லவா? அதற்கு என்னுடைய பரிசாக இருக்கட்டுமே யென்று வாங்கி வந்தேன்! அதில் ஏதாவது போட்டு வைத்துக் கொள்ளலாமே!" என்று சிரித்து மழுப்பினேன்.

"நீங்கள் சொல்லுவது வாஸ்தவம்தான். ஆனால் இதில் போட்டு வைத்துக் கொள்ளும்படியான இந்தப் பெட்டியில் நான் எதை வைத்துக் கொள்ள? என்னிடம் இந்த ஒரு வளையையும் சங்கிலியையும் தவிரப் பெட்டிக்குள் கழற்றி வைக்கும்படியாக நகையே கிடையாதே!" சிரித்துக் கொண்டேதான் ரமா இதைச் சொன்னாள். ஆயினும் சுருக்கென்று பட்டது எனக்கு.

சட்டென்று அந்தப் பேச்சை மாற்ற விரும்பியவனாய், "ஏதோ உன் பேரிலுள்ள ஆசையால் வாங்கி வந்து விட்டேன்; வேண்டுமானால் வைத்துக் கொள். இல்லாவிட்டால் யாருக்காவது கொடுத்து விடு" என்று பாதிக் கோபத்துடனும் பாதி விளையாட்டாகவும் சொல்லி விட்டு அங்கிருந்து எழுந்து பல் தேய்க்கப் போய்விட்டேன்.

ரமா ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஏதோ ஆழ்ந்து யோசிக்கிறாளென்பதை அவள் முகத்தோற்றம் காண்பித்தது.

சற்றுப் பொறுத்து எனக்குக் காப்பி யெடுத்து வந்தவள் அதை என் கையில் கொடுத்து விட்டு என்னுடைய நாற்காலியின் சட்டத்தில் உட்கார்ந்து கொண்டாள்.


காப்பியை ருசித்தபடியே, அவள் பேசுவாளென்று பத்து நிமிஷம் எதிர்பார்த்தேன். அவள் மௌனமாகவே உட்கார்ந்திருந்தாள்.

ஆகவே நானே பேச்சைத் துவக்க எண்ணி "என்ன ரமா! தூங்கிப் போய் விட்டாயா? அல்லது என் பேரில் கோபமா?" என்று அவள் கன்னத்தை லேசாகக் கிள்ளினேன்.

களுக்கென்று சிரித்தாள் அவள். தலையை வேகமாக ஆட்டியபடியே, "உங்களிடம் எனக்கென்ன கோபம்? நீங்கள் செய்யும் காரியத்தை யெல்லாம் பார்த்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது" என்று கூறி நிறுத்தி விட்டு மீண்டும் பேசினாள்.

"இந்த உலகத்தில் ஆசை, அன்பு, என்றெல்லாம் கூறுகிறார்களே! அதில் எவ்வளவு உண்மை யிருக்கிறது? இவ்வுலகில் உண்டாகும் ஆசை, அன்பு, எல்லாம் அழியாமல் என்றும் இருக்கக் கூடியதென்று நீங்கள் நம்புகிறீர்களா?"

இவ்விதமான கேள்வியொன்றை நான் அவளிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. ஆகவே



ஒரு நிமிஷம் என்ன பதில் சொல்வதென்று அறியாமல் திகைத்தேன்.

பிறகு, "அது விஷயம் எனக்குத் தெரியாது. ஆனால் என் மட்டில் அன்பும் ஆசையும் ஒருபொழுதும் அழியக் கூடியதல்லவென்றே நிச்சயமாய் நம்புகிறேன்" என்று சட்டென்று வாய்க்கு வந்த பதிலைச் சொல்லி வைத்தேன்.

ஆயினும் அப்பதில் அவளைத் திருப்தி செய்யவில்லையென்று தெரிந்தது. ஏனெனில் சற்று நேரம் ஏதோ யோசித்த ரமா மீண்டும், "இல்லை. அழியக்கூடிய பொருள் மீதுண்டாகும் ஆசையும் அழியக் கூடியதே! நீங்கள் வேண்டுமானால் பாருங்கள். நான் கூறுவது உண்மையென்று என்றைக்காவது ஒருநாள் உங்களுக்குத் தெரியும்" என்றாள்.

எதையோ மனதில் வைத்துக் கொண்டு ஒரு தீர்க்கதரிசிபோல் இதைக் கூறினாள் அவள். அடுத்த நிமிஷமே சட்டென்று எழுந்து நான் காலி பண்ணி வைத்திருந்த காப்பி டம்ளரைக் கையிலெடுத்துக் கொண்டு "ஐயையோ! அடுப்பில் பாலை வைத்து விட்டு இங்கே உங்களிடம் என்னவோ வம்பு பேசிக் கொண்டேயிருக்கிறேனே! இந்நேரம் எல்லாம் பொங்கி வழிந்திருக்கும்!" என்று கலகலவென்று சிரித்தபடியே பரபரப்புடன் எழுந்து சமையலறையை நோக்கி ஓடினாள்.

அவள் போவதைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தேன் நான். என் மனதில் புரிந்தோ, புரியாமலோ ரமா கூறிய வார்த்தைகள் ஒரு விதமான இனந் தெரியாத வேதனையை யுண்டாக்கின.

இரண்டொரு தினங்களில் இந்த நிகழ்ச்சியை நான் அடியோடு மறந்து விட்டேன். ரமாவும் அதைக் குறித்துப் பிறகு ஒன்றும் பேசவில்லை. இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணமான கைப்பெட்டியை அவளே எங்கோ எடுத்து வைத்து விட்டாள்.

ரமாவை அழைத்துச் செல்ல அவளுடைய பெற்றோர் வந்திருந்தனர். போவதற்கு நாள் கூடப் பார்த்தாய் விட்டது.

புறப்படுவதற்கு முதல் நாள் மாலை. ரமாவின் பெற்றோரிருவரும் ஏதோ சாமான்கள் வாங்குவதற்காகக் கடைக்குப் போயிருந்தனர். வீட்டில் நானும் அவளும் மட்டும் தனித்திருந்தோம். பௌர்ணமி கழித்த மறுதினமாதலால் அந்தி மயங்கிச் சற்று நேரத்துக்கெல்லாம் வானத்தில் வெண்ணிலவு பூச்சொரிய வாரம்பித்தது.

சுவாமி விளக்கை யேற்றி வைத்துவிட்டு வாசற் கதவைத் தாளிட்ட ரமா மெட்டிகள் கலகல வெனச் சப்திக்க, மாடிப் படிகளி லேறி வரும் அரவம் கேட்டது.

மொட்டை மாடியில் நான் ஒரு பாயை விரித்துக் காற்றுக்காகப் படுத்திருந்தேன். என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள் அவள். "நாளை இந்நேரம் நீ பாலக்காட்டில் இருப்பாய்! கலகலவென்று உன் அண்ணன் தம்பிகளுடன் குஷியாயிருக்கலாம். நான் மட்டும்



இங்கே தனியாக மொட்டு மொட்டென்று ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பேன். பிறந்த வீட்டின் சலுகையில் ராணியம்மாளுக்கு என்னுடைய ஞாபகமாவது இருக்குமோ என்னவோ!" என்று அவளுடைய கன்னத்தைக் கிள்ளிய படியே அவளைப் பரிகாசம் பண்ணினேன்.

ரமாவிடம் ஒரு குணமுண்டு. எதற்கும் சட்டென்று பதில் சொல்லிவிட மாட்டாள். யோசித்துத்தான் சொல்லுவாள். சொல்லும் பதிலும் மிகவும் ஆணித்தரமா யிருக்கும்.

ஒரு நிமிஷம் மௌனம் சாதித்து விட்டுப் பிறகு, "எனக்கு ஞாபக சக்தி அதிகமா, அல்லது உங்களுக்கு அதிகமா வென்பது ஒரே வாரத்தில் தெரிந்து விடும், பாருங்கள்" என்றாள்.

நான் அந்தப் பேச்சை அதோடு விட்டு விட்டேன். வேறு என்னவெல்லாமோ பேசிப் பொழுது போனதே தெரியாமல் நானும் ரமாவும் உட்கார்ந்திருந்தோம்.

மறு தினம் ரமா புறப்பட்டுப் போய் விட்டாள். வாரம் ஒரு கடிதமாவது போடும்படி என்னிடம் வற்புறுத்திச் சொல்லிவிட்டுப் போனாள். நானும் அப்படியே செய்வதாக வாக்களித்தேன்.

ரமா ஊருக்குப் போனதிலிருந்து என் வீட்டில் நண்பர்களின் கும்மாளம் ஆரம்பித்தது. சதா ரேடியோ அலறும். இடையில் கிராம



கணவர் :—பையில் நிறைய 'அசோகா' பாக்கு வாங்கிப் போட்டுக் கொண்டு திரும்பினேன். என்ன அதிர்ஷ்டம்! பார் கீழே வேறு நிறைய பொட்டலங்கள் கிடந்தன. அதையும் பொறுக்கிப் போட்டுக் கொண்டு வந்தேன்.

மனைவி :—போட்டுண்டு வந்த அழகு ரொம்ப நன்னா இருக்கு. பையில் ஒன்னு கூட இல்லே, பை ஓட்டையான்னா இருக்கு.

போனும் இசைத் தட்டுக்களும் எங்கிருந்தாவது வந்து சேரும். இரவு பத்து மணி வரையில் சீட்டுக் கச்சேரி. அதற்குப் பிறகு அரட்டைக் கச்சேரி. இப்படியாக என்னுடைய தனி வாழ்க்கை அசுவகதியில் ஆரம்பித்தது. இதில் ரமாவுக்குக் கடிதம் போடுவதற்கு எனக்குப் பொழுதேங்கே? எப்பொழுதாவது ஒரு கார்டில் இரண்டு வரி கிறுக்கி யனுப்புவேன்.

ஒவ்வொரு சமயம் என் மனச்சாட்சி என்னைக் குத்திக் காட்டும். மறுதினம் என்ன வேலை யிருந்தபோதிலும் ரமாவுக்கு அன்பும் ஆசையும் பொங்கும் ஒரு நீண்ட கடிதம் எழுத வேண்டுமென்று தீர்மானித்துக் கொள்வேன். ஆனால் பொழுது விடிந்ததும் என் தீர்மானங்களெல்லாம் அடியோடு மறைந்து விடும். குளிப்பதற்கும் சாப்பிடுவதற்கும்கூட எனக்கு அவகாசமில்லாமல் நண்பர்கள் எனக்குப் புரோகிராம் வகுத்திருப்பார்கள். இப்படியாக ஒன்றரை மாதம் சென்றது. இதற்கிடையில் ரமாவுக்கு மூன்று கடிதங்கள் எழுதி யிருப்பேன் அவ்வளவுதான். அவளிடமிருந்து வாரம் தவறாமல் கடிதம் வரும். சில சமயம் அவளுடைய நீண்ட கடிதங்களைப் படிக்காமல் சட்டைப் பையிலேயே வைத்திருந்து விட்டு இரண்டு மூன்று நாள் கழித்துப் படிப்பேன்.

ஒரே யொரு கடிதத்தில் ரமா, நான் வாங்கிக் கொடுத்த அந்தச் சிறிய கைப் பெட்டியைக் குறித்து ஞாபகப் படுத்தி யிருந்தாள். அதைத் தான் கொண்டுவர மறந்து விட்டமையால் நான் பாலக்காட்டுக்கு வரும்பொழுது அதை ஞாபகமாக எடுத்து வரும்படி எழுதி யிருந்தாள்.

அதற்கு நான் பதில் போடுவதற்குள்ளாகவே, அவளுடைய மரணச் செய்தியைத் தாங்கிய தந்தி என்னை வந்தடைந்து விட்டது.

திடீரென்று ரமா விஷ ஜுரத்தில் படுத்து இரண்டு நாட்களில் கண்ணை மூடிவிட்டாள். என் மைத்துனன் தந்தி யடித்திருந்தான். திடீரென்று வந்த பெரும் அதிர்ச்சி என்னை ஒரு வாரம் படுக்கையில் போட்டு விட்டது. ரமா என்னை விட்டுப் போய்விடுவாளென்று நான் கனவில்கூட எண்ணவில்லை. ஆகவே அவளை இனிமேல் நான் காணவே முடியாது என்ற எண்ணம் என் அறிவுக்கு எட்டவில்லை.

காலம் சென்றது. நண்பர்களுடைய கூட்டுறவிலும் உறவினர்களின் அநுதாபத்திலும் என்னுடைய துக்கத்தை மறந்து கொண்டே வந்தேன். ரமாவின் நினைவு என் உள்ளத்தில் மங்கத் தொடங்கியது.

ஆறு மாதங்களுக்குப் பிறகு உலகத்துக்கு ஒப்ப நான் மறுமணம் செய்து கொண்டேன். என்னுடைய உள்ளத்தில் ரமாவுக்கு இருந்த பதவியை இப்பொழுது மரகதம் ஏற்றுக் கொண்டாள்.

முப்பது வருஷங்களுக்கு முன்பு என் வாழ்க்கையில் புகுந்து உடனே மண்ணுடன் மறைந்தும் போன ரமாவின் மங்கலான நிழல் உருவம் என் நினைப்பில் தோன்றிமறைந்தது.

அத்துடன் அவள் கூறிய தீர்க்க தரிசனமும் நினைவி லெழுந்தது. 'அழியும் பொருள் மீதுண்டாகும் அன்பும் அழியக் கூடியதே.'

* * *

படாரென்ற சப்தம்.

கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டேன். மேஜையின் மீதிருந்த கைப்பெட்டி கீழே விழுந்து இரண்டாக உடைந்து கிடந்தது.

எதிரே என் மனைவி மரகதம் வியப்புடன் நின்று கொண்டிருந்தாள்.

"படுத்துக் கொண்டு விச்ராந்தியாய்த் தூங்கக் கூடாதோ? மேஜைமீது தலையைக் கவிழ்த்துக் கொண்டு இப்படி எதற்கு அவஸ்தைப் படணும்?" என்று கடிந்துகொண்டே குனிந்து கீழே கிடந்த பெட்டியின் துண்டுகளைக் கையிலெடுத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

"பரண் மீதிருந்து இதை என்னத்துக்காக எடுத்துக் கீழே போட்டீர்கள்? நன்றாயிருக்கு. சின்னக் குழந்தையைப்போல் நீங்கள் வீட்டில் செய்கிற ரகளை!" என்று சொல்லிய படியே உடைந்துபோன அத்துண்டுகளுடன் உள்ளே போனாள்.

'அழியும் பொருளின் மீது வைக்கும் அன்பும் அழியக் கூடியதே!' என்று எண்ணியபடியே பழைய போட்டோவை மீண்டும் டிராயரில் வைப்பதற்காக எழுந்தேன்.



கண்ணும் கண்ணாடியும்

கோணல்

கலைக்கண் இருந்தால்தான் அதைக் கண்டு ரசிக்க முடியும், இதைக் கண்டு ரசிக்க முடியும் என்று சொல்லுகிறார்கள் உலகில் தங்களைக் கலா ரசிகர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள். நானும் கலையைக் கண்டு ஓரளவு ரசிக்கக் கூடியவன்தான் என்று நினைத்து வந்தேன். ஆனால் திடீரென்று ஒருநாள் நான் கலைக் கண்கள் படைத்தவனா இல்லையா என்ற பெருங் கவலையை எனக்கு ஏற்படுத்தி விட்டவன் என் நண்பன் வேதாந்தம்தான். "கோபு! நீ கலையை ரசிக்கிறாய். அதுமட்டும் போதாது. உனக்கு உள்ளபடியே கலைக் கண்ணும் இருந்து அதை ரசித்தால் இன்னும் எவ்வளவோ உயர்வாக இருக்கும்!" என்றான். இதைக் கேட்ட பிறகுதான் எனக்கு என் கண்களைப் பற்றிய கவலையே ஏற்பட்டது. அதாவது கலைக் கண்ணைப் பற்றிய கவலை.

என்னுடைய கண்கள் ஒழுங்காகத்தான் இருந்தன. பார்க்கும் பொருளனைத்தும் தெளிவாகத்தான் தெரிந்தன. கண்ணிருந்தும் குருடர்களாய் எத்தனையோ மனிதர்கள் வாழ்கிறார்கள் என்று மேதைகள் சொல்கிறார்களே அத்தகைய அஞ்ஞானிகளாகிய குருடர்கள் இனத்தில் சேர்ந்தவனோ நான் என்ற சந்தேகம் எழுந்தது. 'நான் கலைக் கண்கள் பெறுவதற்கு எத்தகைய மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்' என்று வேதாந்தத்தையே யோசனை கேட்டேன். ஏதாவது உள்ளுக்கு மருந்து சாப்பிட வேண்டுமா? நேத்திராஞ்சனங்களோ, மையோ ஏதாவது போட்டுக் கொள்ள வேண்டுமா என்று பலவிதமான சந்தேகங்கள் எழுந்து என்னை வாட்டத் தொடங்கின. இதற்கெல்லாம் ஒரு முடிவு காணத்தான் வேதாந்தத்தை அண்டினேன்.

"ஒருவனுக்குக் கலைக்கண் ஏற்பட வேண்டுமானால் அது இயற்கையாக ஏற்பட வேண்டும். அல்லது அதற்கு மனத்தைப் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்" என்றான் உபதேசக் கிரமத்தில் தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் அமர்ந்திருப்பது போல் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு.

நானும் அவனிடம் பணிவாக "மனதை எப்படிப் பக்குவம் பண்ணுவது என்பதை உபதேசித்து அருள வேண்டும்" என்று பிரார்த்தித்தேன்.

"அதோ பார்! அது என்ன?" என்று சற்றுத் தூரத்தில் கிடந்த அம்மிக் குழவி ஒன்றைக் காட்டிக் கேட்டான்.

"அது ஒரு அம்மிக் குழவி" என்றேன், சிறு குழந்தை பாடம் சொல்லுவதுபோல்.

"அம்மிக் குழவியா......? அது சாதாரணக் கண்களுக்கு அம்மிக் குழவியாகத் தான் தோற்றமளிக்கும். அதன் சிற்ப சௌந்தர்யம் விளங்காது. ஒரு தேவமங்கை நெளிவு சுளிவோடு ஒய்யாரமாக நிற்கும் பேரழகுதான் என் கண்களுக்குத் தோன்றுகிறது. அம்மிக் குழவியாக இருந்தாலும் அலட்சியமாய் விட்டு விடக் கூடாது. அதிலும் அழகைக் கண்டு ரசிக்கும் கண்கள்தான் கலைக்கண்கள்" என்றான் வேதாந்தம்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்த அம்மிக் குழவிக்குச் சமீபமாகச் சென்று அதை அப்படியும் இப்படியுமாகப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். அதில் எந்தப் பக்கத்திலும் தேவ மங்கையின் பேரெழில் வழியும் சிற்ப சௌந்தர்யத்தை என்னால் காண முடியவில்லை. என் கண்களால் அதைக் கண்டு அனுபவிக்க முடியாததற்காக நான் வேதாந்தத்தின் கூற்றை மறுக்க முடியவில்லை. அதில் ஒரு அற்புத சிற்பத்தைக் கண்ட வேதாந்தம் ஏதோ தபோ வலிமையினால் தான் கலைக் கண் படைத்திருக்க வேண்டுமென்று தோன்றியது. ஆனால் 'சட்'டென்று



என் அபிப்பிராயத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. எப்பொழுதுமே வேதாந்தத்தின் கண்களை அரை அங்குல கனமுள்ள மூக்குக் கண்ணாடி மறைத்திருப்பது அப்பொழுது தான் என் நினைவிற்கு வந்தது. அவன் கண்களுக்குள்ள மகிமை அக் கண்ணாடியினால் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று

தோன்றியது. அக் கண்ணாடியின் மூலமாகப் பார்ப்பதினால் அம்மியிலும் குழவியிலும் அழகு வழிவதாகத் தோன்றலாமல்லவா? மெதுவாக அவனுடைய மூக்குக் கண்ணாடியைச் சிறிது நேரம் வாங்கிப் போட்டுக் கொண்டு அதன் மூலமாக அந்தக் கருங்கல் குழவியைப் பார்க்கலாம் என்ற துடிப்பு எனக்கு ஏற்பட்டது.



"வேதாந்தம் கொஞ்சம் உன் மூக்குக் கண்ணாடியைத் தருகிறாயா......?" என்றேன்.

வேதாந்தம் என் அபிப்பிராயத்தைப் புரிந்து கொண்டவன்போல் சிரித்துக் கொண்டே, "இந்தக் கண்ணாடியை வாங்கிப் போட்டுக் கொண்டு விட்டால் உனக்கு அந்த அழகு விளங்கிவிடும் என்று நினைக்கிறாயா? அது தவறு. கண்ணாடியில் ஒன்றுமில்லை. கண்ணில் தான் இருக்கிறது எல்லாம்" என்று சொல்லி விட்டுத் தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி என்னிடம் கொடுத்தான்.

நான் அதை வாங்கிப் போட்டுக் கொண்டு அந்த அம்மிக் குழவியைப் பார்த்தேன். அந்தக் கண்ணாடியின் மூலமாகப் பார்க்கும் பொழுது அந்த அம்மிக் குழவி மாத்திரமில்லை, வேறு எந்தப் பொருளுமே விளக்கமாகத் தெரியவில்லை. பக்கத்திலிருந்த பொருளெல்லாம் மிகச் சிறிதாகி, தூரத்தில் இருப்பவைகள் போலத் தோன்றின. அந்தக் கண்ணாடியை அதிக நேரம் போட்டுக் கொண்டு என் நல்ல கண்களுக்கு எரிச்சலையும் வேதனையையும் உண்டாக்கிக் கொள்ள விரும்பவில்லை. நான் கண்ணாடியைக் கழற்றி அவனிடம் கொடுத்தேன். வேதாந்தம் பெருமிதத்தோடு அதை வாங்கிப் போட்டுக் கொண்டு "கல்லிலும் மண்ணிலும் சிதறிக் கிடக்கும் கலை அழகைக் கண்ணாடி காட்டாதப்பா! கண்கள் தான் காண வேண்டும். ஆனால் அதற்கு விளக்கம் தருவதுதான் கண்ணாடி" என்றான் வேதாந்தம்.

வேதாந்தத்தின் கண்களுக்கு விளக்கம் தருவது அவனுடைய கண்ணாடிதான். அந்தக் கண்ணாடி இல்லாவிட்டால் அவனுடைய கண்களுக்கு விளக்கம் ஏற்படாது என்று எல்லோருக்குமே தெரியும். இதனால்தான் அவன் தன்னுடைய கண்களைக் கலைக் கண்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறான் என்று என்னுடைய அபிப்பிராயம்.

நண்பர்கள் குழாத்தினிடையே வேதாந்தம் ஒரு ரகம். அவன் ஒரு குருட்டுக் கலாரசிகன் என்பதை அவனுடைய கண்கள் ஒழுங்கான நிலைமையிலிருந்த காலத்திலேயே எல்லோரும் உணரும்படியாகச் செய்திருக்கிறான். அதுவும் அவனுடைய கண் பார்வையில் ஏதோ கோளாறு ஏற்பட்ட பிறகு அவனுடைய கலா ரசிகத்தனம் அதி உச்ச நிலையை அடைந்து விட்டது. பிறர் கண்களுக்கு எட்டாத இடங்களிலிருந்தெல்லாம் கலை அழகு அவன் கண்களுக்கு எட்டித் தொட்டு இழுத்தது. அவன் காணும் அழகை நாங்கள் காண முடியாததற்காக மிகவும் வருந்தத்தான் வேண்டியிருந்தது. எப்படியோ அவனாவது அந்த அழகையெல்லாம் கண்டு அனுபவித்து ஆறுதல் அடையட்டும் என்று விட்டு விட்டோம். வேதாந்தத்திற்குச் 'சிலை' என்றால் அலாதி மோகம். 'சிலை' என்ற வார்த்தையிலிருந்துதான் 'கலை' என்ற வார்த்தையே தோன்றியிருக்க வேண்டுமென்று அவன் ஆராய்ச்சி செய்து கண்ட உண்மை. சிலைகள் விஷயத்தில் அவனுக்குள்ள ஈடுபாட்டை அறிந்த நண்பர் குழாத்தினர் அவனுக்குச் 'சிலா ரசிக சிம்மம்' என்ற பட்டத்தை வழங்கி இருந்தனர்.

வேதாந்தம் நெடுநாள் வரையில் விவாகமே செய்து கொள்ளவில்லை. இதற்குக் காரணம் அவனுக்கு மனைவியாக வரக்கூடிய பெண் சிலை மாதிரி இருக்க வேண்டுமென்ற அவனுடைய விருப்பம்தான். வேதாந்தம் அந்த லட்சியத்தில் தோல்வி அடையவில்லை. ஓரளவு சித்தி பெற்று விட்டான். உண்மையாகவே அவனுக்கு வாய்த்திருக்கும் மனைவி தைலக் காப்பிடப்பட்டுப் பளபளவென்று பிரகாசிக்கும் கற்சிலைபோல் விளங்கினாள்.

எங்காவது ஒரு ஊரில், ஏதோ ஒரு கோயிலில் ஒரு அற்புதமான சிலையைக் கண்டதாக யாரேனும் சொல்லிவிட்டால் போதும். எத்தகைய சிரமம் இருப்பினும் அந்த ஊருக்குச் சென்று அந்தச் சிலையைப்பார்த்துவிட்டு வந்த பிறகுதான் தூங்குவான். தான் கண்டு அனுபவித்த அழகை எல்லோரும் கண்டு அனுபவிக்க வேண்டுமென்ற தாராள நோக்கம் கொண்டவன் வேதாந்தம். தான் பார்த்த அழகைப் பற்றி அவன் வர்ணிக்கும் பொழுது



அந்தச் சிலையை மற்றவர்களும் போய்ப் பார்த்துவிட்டு வர வேண்டுமென்ற துடிப்பு ஏற்படும். அவன் வர்ணனையில் மயங்கிச் சிரமப்பட்டு அந்தச் சிலையைப் பார்த்தவர்களுக்குத் தாங்கள் அடைந்த ஏமாற்றத்தில் வேதாந்தத்தை ஆத்திரம் தீர அடித்து நொறுக்கிவிட வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவதும் சகஜம்தான். ஆனால் அப்படி அவனை அடிக்க வருகிறவர்களெல்லாம் அவனுடைய கண்ணையும் கண்ணாடியையும் பார்த்த பிறகு அவன்மீது பிசகில்லை என்று இரக்கப்பட்டு மன்னித்து விடுவார்கள்.

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு ஆவல் இருக்கும். வேதாந்தத்தின் ஆவலெல்லாம் ஒன்றுதான். இது அவனுடைய ஜீவ லட்சியத்தோடு பிணைக்கப்பட்ட பேராவல். 'எனக்கு மாத்திரம் அதிகாரமிருந்தால் இந்த உலகத்தில் சிலைகள் என்று எதெதெல்லாம் என் கண்களுக்குப் படுகிறதோ அவைகளையெல்லாம் சிரமப்பட்டு எடுத்துக் கொண்டு வந்து ஒன்று சேர்த்து, ஒவ்வொரு சிலைக்கும் ஒரு இரும்புக் கூண்டு கட்டி அதற்குள் வைத்து ஒரு திறந்தவெளி மைதானத்தில் வைத்து விடுவேன்' என்பான் அடிக்கடி. இதில் உடைந்த சிலை, வேதாந்தத்தின் கண்களுக்கு அழகிய உருவாகத் தெரியும்; அம்மிக் குழவியும் அதில் சேர்ந்ததுதான். இது சிலைகளைப் பிடித்த அதிர்ஷ்டமோ துரதிருஷ்டமோ, அல்லது அவன் செய்த பாவமோ புண்ணியமோ, அவனுக்கு அத்தகைய அதிகாரம் கிடைக்காமல் போய்விட்டது.

ஒரு தடவை வேதாந்தம் தன்னுடைய வீட்டுக் கொல்லைப்புறத்திலே பத்தாவது நூற்றாண்டிலே சிருஷ்டிக்கப்பட்ட ஐந்தாறு சிலைகள் பூமிக்கடியில் புதைந்து கிடப்பது போல் சொப்பனம் கண்டானாம். இப்படி ஒரு கனவு கண்ட பிறகு அவன் மனது பொறுக்குமா? மறுநாளே இருபது கூலி ஆட்களை அமர்த்தித் தன் வீட்டுக் கொல்லைப் புறத்தில் ஒரு பாகத்தைத் தோண்டச் செய்தான். நீர் மட்டம் வரையில் தோண்டிப் பார்த்தும் ஒரு கருங்கல் துண்டுகூட அகப்படவில்லை. இதிலிருந்து அவன் நம்பிக்கை இழந்து விடுவானா? உடனே அந்த ஆட்களைக் கொண்டே தோட்டத்தின் இன்னொரு பாகத்தை இருபதடி ஆழம் வரையில் தோண்டச் செய்தான். அங்கும் சிலைகள் அகப்படவில்லை. அப்பொழுதும் அவன் நம்பி[illegible]கை இழக்கவில்லை. அவன் வீட்டுக் கொல[illegible]த்தில் குழி தோண்டுவதற்கு இன்னும் எ[illegible]வ இடங்கள் இருந்தன. ஆனால் அப்பொழுது அவனுக்கு அது சாத்தியமாகப் படாததால் இன்னொரு சந்தர்ப்பத்தில் பாக்கி இருக்கும் இடங்களையும் தோண்டிப் பார்க்கலாம் என்று விட்டு விட்டான்.

* * *

வேதாந்தத்தின் கதை எப்படியாவது இருக்கட்டும். என்னுடைய கண்கள் கலைக்



"ஏன் சார், உங்கள் நாய்க்குப் பக்கத்தில் விடி விளக்கு வைத்திருக்கிறது?"

"இருட்டாய் இருந்தால் அது ரொம்பவும் பயப்படுகிறது. அதனால்தான்!"

"நாயின் கழுத்தில் ஏன் ஒரு தோல் வார் கூட போடவில்லை?"

"போட்டிருந்தேன், யாரோ அதன் கழுத்திலிருந்த வார் பட்டையைக் கழற்றிக் கொண்டு போய்விட்டான்!

கண்களா இல்லையா என்ற கவலைதான் என்னை நாளுக்கு நாள் வாட்டி வந்தது. என் கண்களைப் பற்றி நானே எப்படி முடிவு செய்வது? ஆகவே, சந்தேக நிவர்த்திக்கு என் மனைவியைக் கேட்கலாம் என்று உத்தேசித்திருந்தேன்.

"எச்சு! என் கண்ணைப் பாரு!" என்றேன்.

"ஏன், உங்க கண்ணில் ஏதாவது தூசி துரும்பு விழுந்துடுத்தா?" என்றாள்.

"இல்லை. அதைப் பார்த்தால் உனக்கு எப்படிப் படுகிறது?" என்றேன்.

"எப்படிப் படறதுன்னா? ஏன் நன்றாய்த்தானே இருக்கு. உங்களுக்கு ஏதாவது மங்கினாப்பிலே படறதா......?" என்றாள் திகைப்போடு.

"பயப்படாதே! அதெல்லாம் இல்லே. அழகைக் கண்டு ரசிக்கக் கூடிய சக்தி அதற்கு இருக்கிறதா இல்லையான்னு சந்தேகம்......" என்றேன்.

"உங்களுக்கு உள்ளபடியே அழகைக் கண்டு ரசிக்கிற சக்தி இருந்தா நான் ஏன் இருக்கிறேன்? எனக்கிருந்த அழகுக்கு என்னை நீங்க தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுவீர்கள் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள்" என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

"உன்னைப் பேஷாகத் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடலாம். ஆனால் என் உடம்பிலே பலமில்லையே......!" என்று சொல்லி அவளிடமிருந்து ஒரு விதமாகத் தப்பித்துக் கொண்டேன்.

எனக்குக் கலைக் கண்கள் இல்லை என்பதை என் மனைவி மூலமாகவும் தெரிந்து கொண்டு விட்டேன். இனிமேல் நம்முடைய கண்களைக்

கலைக் கண்களாக்கிக் கொள்ள வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட விழைந்தேன். நாளுக்கு நாள் என் கவலை அதிகமாயிற்றே தவிரக் கண்களில் எவ்வித மாறுதலும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

ஒரு மாதம் சென்றது. திடீரென்று ஒரு நாள் என் மனைவி என்னைப் பார்த்து "ஏன் உங்கள் கண்கள் இவ்வளவு மஞ்சளாக இருக்கிறது?" என்றாள். உடனே கண்ணாடியை எடுத்து முகத்தைப் பார்த்தேன். கண்கள் மஞ்சளாகத்தா னிருந்தன. சிறிது நேரம் கழித்துப் பார்க்கிற பொருளெல்லாம் மஞ்சளாகத் தெரிவது போலத் தோன்றியது. அன்று சாயந்திரம் எதுவுமே என் கண்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. எல்லாம் நிழல் போலத்தான் தோன்றியது. மறுநாள் காலையில் கண் வைத்தியரைப் போய்ப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டு விட்டது. வைத்தியர் என் கண்களைப் பரீட்சை செய்து பார்த்து விட்டு "இது மஞ்சள் காமாலை. இதற்கு மருந்து தருகிறேன். இருந்தாலும் நீங்கள் நிரந்தரமாக ஒரு கண்ணாடி போட்டுக் கொள்வது நல்லது. இல்லாவிட்டால் இன்னும் சில நாளில் நீங்கள் அடியோடு பார்வை இழக்கும்படி நேரிடும்" என்றார். அதற்குமேல் நான் என்ன சொல்ல முடியும்? அவர் யோசனைப்படி அவரிடமிருந்தே ஒரு மூக்குக் கண்ணாடியை வாங்கி அப்பொழுதே அணிந்து கொண்டேன்.

கண்ணாடி போட்டுக் கொண்ட பிறகு என் மனம் பக்குவமடைந்து கண்களும் கலைக் கண்களாகி விட்டதை உணர்ந்தேன்.

ஒருநாள் வேதாந்தம் என் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டதும் நான் உள்ளே போய் ஒரு உடைந்த கற்குழவியை எடுத்துக் கொண்டு வந்து அவன் எதிரில் வைத்து விட்டு "ஆஹா! அடாடா! என்ன அற்புதம், வேதாந்தம், இதன் அழகைப் பார்த்தாயா? என்ன அழகு! எத்தகைய ரூபலாவண்யம்!! கல்லில் கடைந்தெடுத்திருந்தாலும் நேரில் நின்று பேசுவது போலிருக்கிறதே! இந்த ரதியின் சௌந்தர்யம் நம்முடைய புராதன காலத்துச் சிற்பிகளுக்குக் குழவியிலும் அழகுக்கு உயிர் கொடுக்கத் தெரிந்திருக்கிறது பார்த்தாயா...?" என்றேன்.

இதைக் கேட்டதும் அவன் துள்ளிக் குதித்து "அடடே! சபாஷ்! இந்த அழகு உன் கண்களுக்கும் பட்டு விட்டதே! உனக்கும் கலைக்கண்கள் இருக்கிறதப்பா; இதில் சந்தேகமே இல்லை!" என்றான்.

வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி என்று பட்டம் பெற்றபோதுகூட விசுவாமித்திரர் அவ்வளவு சந்தோஷமும் மன ஆறுதலும் அடைந்திருக்க மாட்டார். அவ்வளவு சந்தோஷமும் ஆறுதலும் அடைந்தேன் நான்.

புதிய சன்னிதானம்



சிவத்திரு சுந்தரனார்

சைவ சமயத்தின் வளர்ச்சியில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எவ்வளவு பற்றும் ஆர்வமும் உள்ளதென்பதை இவ்வாரம் அவர்கள் சிறப்பாகக் காட்டினார்கள். துறவு பூண்டு மதுரை ஸ்ரீ ஞானசம்பந்தர் மடாலயத்தின் மகா சன்னிதானமாகப் பதவியேற்கச் சென்ற சிவத்திரு சுந்தரனாருக்குத் தபால் மந்திரி ஸ்ரீ நடேசப் பிள்ளையின் தலைமையில் நடந்த பிரிவுபசாரத்துக்கு ஸர் கந்தையா வைத்திய நாதன், ஸ்ரீ ஆழ்வாப் பிள்ளை, ஸ்ரீ வைரமுத்து முதலான பல பெரியார்கள் உள்பட ஆயிரக் கணக்கில் தமிழர்கள் திரண்டு வந்தார்கள். இலங்கையின் கூட்டுப் பிரார்த்தனை இயக்கம் இந்தியாவில் சமயப் பணியாற்ற ஒரு மகா சன்னிதானத்தை உற்பத்தி செய்து கொடுத்ததற்குத் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொண்டார்கள். சிவத்திரு சுந்தரனார் பூட்ஸ் அணிந்து பழகிய கால்களில் பாதரட்சையும், தொப்பியணிந்து பழகிய தலையில் உத்திராட்சமும் அணிந்து பக்தர் குழாம் வழியனுப்ப விமானத்தில் புறப்பட்டுச் சென்ற காட்சி மிகவும் உருக்கமாயிருந்தது. வள்ளுவர் பெருமான் ஜயந்தி விழா அன்று மேமீ 25உ மதுரையம்பதியில் சுந்தரனாரின் மகா சன்னிதான பட்டாபிஷேகம் நடந்தது. அதற்கு இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பல அன்பர்கள் விஜயம் செய்திருந்தனர்.



கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ வி. ஏ. கந்தையா

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் வருடாந்திரத் தேர்தல் கூட்டம் இவ்வாரம் நடைபெற்றது. அப்பொழுது ஸர் கந்தையா வைத்தியநாதன் சங்கத்தின் போஷகராகவும் அட்வகேட் வி. ஏ. கந்தையா தலைவராகவும் ஸ்ரீ ஆழ்வாப் பிள்ளை உள்படப் பத்து உப தலைவர்களும் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் எட்டாவது தடவையாக ஏகமனதாய்ப் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். — ரஜனி


கடைசியாக...
இந்த டால்கம் பௌடர் உங்களை
புதுமலர்ப்
புதுமையோங்க
நாள்முழுதும்
வைத்திருக்கும்!
பாண்ட்ஸ் ஒன்றே இவ்விசேஷ அம்சங்களுடையது!
● ஸாடின் போன்று மழமழப்பான இழை. வியர்வையை உறிஞ்சி உங்களை குளுமையாகவும் சௌகரியமாகவும் வைத்திருக்கிறது!
● இனிய நறுமலர் வாசனை, உங்களுக்கு அதிக கவர்ச்சியூட்டுகிறது!
● உபயோகத்திற்கு மிக எளிதாக அமைந்த பாண்ட்ஸ் டப்பி, கைக்கு அடக்கமானது!
இன்றே ஒரு டின் வாங்கிக்கொள்ளுங்கள்
பாண்ட்ஸ் டால்கம் பௌடர்
ஏக உரிமையாளர்கள்:
ஜியாப்ரே மானர்ஸ் & கோ. லிட்.
பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்



எல்லாவித பல்வலிகளுக்கும்
உபயோகியுங்கள்
குரங்கு மார்க்
கருப்பு பல்பொடி
(REGO)
எங்கும் கிடைக்கும்
NOGI & CO.,
87, CHINA BAZAAR Rd., MADRAS-1
ஸ்டாக்கிஸ்டுகள் : எம். வெங்கடேசம் & கம்பெனி, ஷாப், சேலம்



வண்டின்
கூட்டம் இருந்தாலும்
இல்லாவிட்டாலும்
கமலம் அழகியதே:
ஆயினும்
நீண்ட பின்னலும்
செறிந்த
கூந்தலும்
இல்லாது
போனால் முக
கமலத்துக்கு
அழகில்லை.
கேசவர்த்தினி
கொண்டு கூந்தலையும்
கூந்தலழகையும்
விருத்தி செய்யுங்கள்
கேசவர்த்தினி அணு 14. ஷாம்பூ அணு 14. எங்கும் கிடைக்கும்.
தென் இந்திய ரஸாயனசாலை - கோயமுத்தூர்



3 வாசனைக் கலாரத்னங்கள்
கம் கம் ஜவாஜ் * கம்பால் * கமகர் அகர்பத்திகள்.
டி.எல்.சுகந்தாலயா,
வாசனைதிரவிய வியாபாரிகள், பெங்களூர்-2



ஜப்பான் பொம்மை

ரா. வெ. சீனுவாசன்

அன்று ஞாயிற்றுக் கிழமை. வீட்டுக்கு எடுத்து வந்திருந்த ஆபீஸ் 'பைல்'களில் மூழ்கி யிருந்த என்னை 'வீல்' என்ற சப்தம் தூக்கி வாரிப் போடச் செய்தது. அதைத் தொடர்ந்து, "ஐயோ! அப்பா! என் பொம்மையைப் பிடுங்குகிறாளே!" என்று பங்கஜா அலறும் குரலும் கேட்டது.

பேனாவை அப்படியே மேஜை மீது வைத்து விட்டுக் கூடத்துக்கு விரைந்தேன். அங்கு நான் கண்ட காட்சி எனக்கு ஆத்திரத்தை மூட்டியது.

ஜப்பானிலிருந்து சமீபத்தில் திரும்பி வந்திருந்த என் நண்பரொருவர் பங்கஜாவிற்குப் பரிசாக அளித்த நூதன பொம்மையை, அவள் தன் மார் போடு அழுத்திக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாள். அதை அவளிடமிருந்து பிடுங் கிக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தாள் என் மருமாள் சியாமளா.

இதைக் கண்ட என் கோபம் கட்டுக் கடங்காமல் போய்விட்டது. ஒரே பாய்ச்சலில் சென்று சியா மளாவின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை வைத்தேன். "ஐயோ அம்மா!" என்று அலறிக் கொண்டே கீழே சுருண்டு விழுந்தாள் அவள்.

"மூதேவி! உனக்கு ஜப்பான் பொம்மை ஒன்று தான் கேடா!" என்று சீறினேன்.

இதற்குள் உள்ளேயிருந்து என் மனைவி கங்கா வும் தங்கை விசாலமும் ஓடி வந்தார்கள்.

விசாலத்தைக் கண்ட சியாமளா, "அம்மா! மாமா அடித்து விட்டார்!" என்று அழுது கொண்டே போய்க் கட்டிக் கொண்டாள். அவ ளுடைய வீங்கிப் போயிருந்த இடது கன்னத் தில் என்னுடைய கை விரல்கள் பதிந்திருந்தன.

"என்ன நடந்தது! சியாமளாவை ஏன் அடித்து விட்டீர்கள்!" என்று கேட்டாள் கங்கா.

"என்ன நடந்ததா! இந்த வீட்டில் மனு ஷன் ஒரு நிமிஷமாவது நிம்மதியாக இருக்க முடிகிறதா! பங்கஜாவின் ஜப்பான் பொம் மையைச் சியாமளா பிடுங்கி அவளை அழவைத்து விட்டாள். அதற்காக அவள் கன்னத்திலே ஒன்று கொடுத்தேன்" என்றேன்.

"சரிதான், போங்கள்! இதற்காகக் குழந்தையை இப்படிக் கொல்லுவார்களா! சியாமளாவுக்கும் பங்கஜாவுடைய வயதுதானே! பொம்மை புது தினுசாக ரொம்ப வேடிக்கையாக இருக்கிறதினாலே பார்க்கணும் போல ஆசையாக இருக்கிருக்கும். ஏண்டி பங்கஜம், அந்தப் பொம்மையை அவளுக்கும் தான் கொஞ்சம் விளையாடக் கொடுத்தால் உனக்கு என்னடி!" என்றாள் கங்கா.

பங்கஜா விழித்துக் கொண்டு நின்றாள்.

"இவளுக்குத் தான் மரப் பொம்மை ஒன்று வாங்கி யிருக்கிறதே, அது போதாதோ! ஜப்பான் பொம்மை ஒன்றுதான் குறைச்சலோ!" என்று நான் கோபத்தில் கத்தினேன்.

இதற்குள் விசாலம் சியாமளாவைச் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு அப்பால் சென்று விட்டாள். என் மனைவியும், "வரவர ரொம்ப நன்றாயிருக்கிறது உங்கள் போக்கு!" என்று முணு முணுத்துக் கொண்டே தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

நான் மறுபடியும் மேஜை முன் வந்தமர்ந்தேன்.

என் மனம் அமைதியற்று அலைந்தது. சியாமளாவின் கன்னத்தில் அறைந்த என் விரல்களே இன்னும் சுரீரென்று உறைத்துக் கொண்டிருந்தன. பாவம்! அவளுக்கு எப்படி வலித்திருக்கும்!

ஆனால் உடனே, "சே! தரித்திரங்கள்! தாயும் மகளும் எனக்கு நிரந்தர பாரமாகி விட்டார்களே! தண்டச் சோறு சாப்பிடுவது போதாதென்று என் குழந்தைக்குச் சமதையாகச் சியாமளாவும் இருப்பதா!" என்ற மற்றொரு எண்ணம் எழவே, என் மனம் மறுபடியும் கடினமாகியது.

*　　　*　　　*

ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன் நான். என் தகப்பனார் தஞ்சையில் ஒரு பாங்கியில் குமாஸ்தாவாக இருந்தார். எனக்கு ஐந்து வருடங்களுக்குப் பின் பிறந்தாள் என் தங்கை விசாலம். சொற்ப வருவாயில் மிகவும் சிரமப்பட்டு என்னைப் படிக்க வைத்தார் என் தகப்பனார். எப்படியோ வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி என்னை ஒரு பி. ஏ. பட்டதாரி யாக்கினார். அப்பொழுதுதான் என்னுடைய சிரம தசையும் ஆரம்பமாகியது. திடீரென்று மாரடைப்பினால் இறந்தார் என் தகப்பனார். குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு முழுவதும் இருபது வயது நிறையாத என்மீதே விழுந்தது.

பி. ஏ. பட்டத் தாளைக் கையில் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு காரியாலயமாக நம்பிக்கையுடன் ஏறி நிராசையுடன் இறங்கினேன்.

ஒருநாள் மாலை ஏமாற்றத்துடன் வீடு திரும்பி வந்து பொத்தென்று தரையில் உட்கார்ந்த

என்னைப் பார்த்து, "அண்ணா, குமாஸ்தா வேலையென்று தினமும் அலைந்து அலைந்து இளைத்துப் போகிறாயே! அது ஒன்றுதான் வேலையா, என்ன! என் சிநேகிதி கோமதிக்கு 'டியூஷன்' சொல்லித் தர ஒரு உபாத்தியாயரை அவள் தகப்பனார் ஏற்பாடு செய்யப் போகிறாராம். நான் அவளிடம் சொல்லி உனக்கே அந்த வேலையைத் தரும்படி அவள் அப்பாவிடம் சிபார்சு செய்யச் சொல்லி யிருக்கிறேன். இன்று கோமதி இங்கு வந்திருந்தாள். தன் தகப்பனார் உன்னை உடனே வந்து பார்க்கும்படி சொன்னாரென்று சொல்லிவிட்டுப் போனாள். அவளுக்கும் அவள் தம்பி வேணுவிற்கும் படிப்புச் சொல்லித் தர வேண்டுமாம். மாதம் அறுபது ரூபாய் வரை தருவார்களாம்" என்றாள் விசாலம்.

"நிஜமாகவா, விசாலம்! உனக்குத்தான் எத்தனை சிரத்தை! நான் இப்பொழுதே போய்க் கோமதியின் தகப்பனாரைப் பார்த்து வருகிறேன்" என்று கூறி அவரைக் காண விரைந்தேன்.

அவர் வீட்டில் டியூஷன் கிடைத்த சில மாதங்களுக்கெல்லாம் இன்னும் இரண்டு இடங்களில் 'டியூஷன்'கள் கிடைத்தன. மாதம் நூற்றிருபது ரூபாய் வரை வருமானம் வரத்தொடங்கியது.

* * *

விசாலத்துக்குக் கல்யாண வயது வந்துவிடவே, அவளுக்கு வரன் தேடலானேன். சிவராமன் இருபத்திரண்டு வயது நிரம்பிய இளைஞன். பி. ஏ. படித்தவன். மதராஸில் நல்ல உத்தியோகத்திலிருந்தான். தகப்பனார் கிடையாது. தாயார் தான் அவனுக்குச் சமைத்துப் போட்டுக் கொண்டிருந்தாள். பட்டணத்தில் வீடும் கிராமத்தில் நிலமுமிருந்தன. பையன் திடகாத்திரனாகவும் களை பொருந்திய முகத்துடனும் இருந்தான்.

பெண் பார்க்கும் படலம் முடிந்து சம்பிரதாயப்படி ஊருக்குப் போய் எழுதுவதாகச் சொல்லிப் போய் விட்டார்கள் தாயாரும் பிள்ளையும். ஆனால் அவர்களுக்குப் பெண் பிடித்து விட்டதென்று அவர்கள் பேச்சிலிருந்து முன் கூட்டியே விளங்கியது. விசாலத்திற்கும் சிவராமனை மிகவும் பிடித்து விட்டதென்று அவளுடைய பூரித்துப் போன முகத்திலிருந்து நன்றாகத் தெரிந்தது. எனக்கும் என் தாயாருக்குங்கூட இந்த வரன் ரொம்ப சௌக்கியமாகப் பட்டது.

ஒரு வாரத்தில் சென்னையிலிருந்து கடிதம் வந்தது. ஆவலுடன் பிரித்துப் பார்த்தேன். என் முகம் சுருங்கியது. அதைக் கண்ட என் தாயார் "என்னடாப்பா! என்ன எழுதி யிருக்கிறார்கள், அவர்கள்!" என்று கவலையுடன் கேட்டாள்.

"பெண்ணை மிகவும் பிடித்திருக்கிறதாம். ஆனால் கையில் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுத்து விடவேண்டுமாம். பிறகு வைரத்தோடு போட வேண்டுமாம். கல்யாணச் செலவு வேறு. சரி! எல்லாம் வழக்கம் போலக் கதைதான், விட்டுத் தள்ளு. வேறு வரன் பார்க்கலாம்" என்று பெருமூச்சுடன் கூறினேன். அதைக் கேட்ட விசாலம் விம்மிக் கொண்டே உள்ளே போய்விட்டாள்.

சில தினங்களில் மற்றொரு வரனைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அவர் டில்லியில், முதல் தாரத்தை இழந்த ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர். அப்பொழுது மூன்று மாதம் ஓய்வெடுத்துக் கொண்டு வந்திருந்தார். அவர் மறுமணம் செய்து கொள்ள விரும்பினாராம். விசாலத்தைப் பார்க்க அவர் வந்தார். அவருக்கு விசாலத்தை மிகவும் பிடித்து விட்டது. வரதட்சிணை வேண்டாமென்றும் கல்யாணத்தைக் கூட மிகச் சாதாரண முறையிலேயே நடத்தினால் போதுமென்றும் கூறிவிட்டார். மேலும் கல்யாணத்திற்குப் பிறகு டில்லியில் மத்திய அரசாங்கத்தில் எனக்கும் ஒரு நல்ல உத்தியோகம் பார்த்துக் கொடுக்க முடியுமென்றும் அவர் கூறினார். அதைக் கேட்ட எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை அளவிட்டுச் சொல்லி முடியாது.

அவரை வழியனுப்பிவிட்டு சந்தோஷத்தோடு உள்ளே வந்தேன். "என்ன அம்மா! என்ன விசாலம்! என்ன சொல்கிறீர்கள்! இந்த வரனையே முடித்து விடலாம் அல்லவா!" என்று கேட்டேன்.

விசாலம் உடனே அழ ஆரம்பித்து விட்டாள். நான் திகைத்துப் போய் விட்டேன். "விசாலம், ஏன் அழுகிறாய்! உனக்கு இந்த நல்ல வரன் பிடிக்கவில்லையா!" என்று சிறிது கோபத்துடனேயே கேட்டேன்.

என் தாயார் குறுக்கிட்டாள்.

"அம்பி, விசாலத்திற்கு அந்தச் சென்னை வரன் தான் பிடித்திருக்கிறது. என்னமோ சிவராமனைப் பார்த்ததிலிருந்து அவனையே நினைத்து வாடுகிறாள். மேலும் அவளை இளையாளாகக் கொடுக்க என் பெற்ற மனமும் இசையவில்லை. உன் கஷ்டம் எனக்குத் தெரியும். ஆனாலும் இது நெடுங்காலப் பயிரல்லவா!" என்றாள்.

"அம்மா, என்னிடம் இவள் கல்யாணத்திற்காக இரண்டாயிரம் ரூபாய்தானே இருக்கிறது! சென்னை வரனை முடிப்பதென்றால் இன்னும் நாலாயிரம் வேண்டுமே! பணத்துக்கு எங்கே போவது!" என்று எரிச்சலுடன் கேட்டேன்.



"என்னமோ அப்பா, கடன் தான் வாங்க வேண்டும். விசாலத்தின் கலியாணத்தை நாம் கோர வேண்டும்!" என்றாள் என் தாயார்.

தாயாரின் விருப்பப்படியே சிவராமனுக்கும் விசாலத்திற்கும் மணம் முடித்து வைத்தேன். எங்களுக்குச் சொந்தமாயிருந்த வீட்டை அடமானம் வைத்துப் பணம் வாங்கியும் மேலும் கடன் வாங்கியும் கல்யாணத்தைக் கூடிய வரை சிறப்பாகவே செய்தேன். சம்பந்தி அம்மாளிடம் கெஞ்சிக் கூத்தாடி, விசாலத்திற்கு இரண்டு வருடங்களுக்குள் வைரத்தோடு வாங்கிப் போடுவதாக வாக்களித்து உடன்படச் செய்தேன்.

விசாலத்திற்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. ஆனால் என்னுள்ளத்திலோ ஒரே அந்தகாரக் கவலையிருள்!

ஆறும் மாதமும், தலை தீபாவளியும் ஒருவாறு கடந்தேறின. விசாலமும் புக்ககம் போய் விட்டாள். நானும் "அப்பாடா!" என்று நிம்மதியாக ஒரு நீண்ட பெருமூச்சு விட்டேன்.

* * *

இன்னுமொரு வருடத்தில் எனக்கும் கங்காவிற்கும் விவாகமாயிற்று. அவள் என் வீட்டில் நுழைந்த முகூர்த்தம் எனக்குக் கைலாசமய்யரின் சிபாரிசு மூலம் திருச்சியில் ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனியில் நல்ல வேலையும் கிடைத்தது. நான் குடும்பத்தோடு அவ்வூருக்குக் குடியேறினேன்.

என் வாழ்க்கைப் படகு அதிகக் கொந்தளிப்பில்லாத கடலில்தான் சென்று கொண்டிருந்தது. கங்கா சிக்கனமாகவே குடித்தனம் நடத்தினாள். அதனால்தான் விசாலத்தின் கல்யாணத்திற்காக



எனக்கு ஏற்பட்ட கடனைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து வர முடிந்தது.

மேலும் ஒரு வருடம் ஓடி மறைந்தது. மூன்று மாதம் கருத்தரித்திருந்த விசாலத்தை அழைத்துக் கொண்டு சென்னையிலிருந்து திருச்சிக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். ஆனால் என் மனத்தில் சந்தோஷம் சிறிதும் இல்லை. என் முகத்தைப் பார்த்த விசாலத்தின் கண்களிலும் நீர் முட்டியது. காரணம், நான் புறப்படுமுன் சம்பந்தியம்மாள் கூறிய வார்த்தைகள் என் செவியில் எதிரொலித்துக் கொண்டிருந்ததுதான்.

"நீங்கள் விசாலத்திற்கு இரண்டு வருடங்களுக்குள் வைரத்தோடு வாங்கிப் போட்டு விடுவதாக வாக்களித்தது ஞாபகமிருக்கட்டும். குழந்தையுடன் திரும்பும்போது வைரத் தோட்டுடன் அவளை அனுப்பிவைக்க வேண்டும். மறந்து விடாதீர்கள்" என்று அந்த அம்மாள் என்னை எச்சரித்திருந்தாள்.

எனக்குப் 'பகீர்' என்றிருந்தது. இருக்கிற கடனை அடைப்பதற்கே மிகவும் சிரமமாகவிருக்கும்பொழுது குறைந்த பட்சம் இன்னும் இரண்டாயிரம் ரூபாய்க்கு எங்கு போவது! மேலும் என் மனைவியும் அப்பொழுது ஒரு மகவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். வேறு வசதியின்மையால் அவளுடைய பிரசவத்தையும் என் வீட்டிலேயே வைத்துக் கொள்ளும்படி நேரிட்டு விட்டது. ஆகவே, வரப்போகிற செலவுகளையெல்லாம் எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற கவலை மலைபோல வளர்ந்து வருகையில், சம்பந்தியம்மாளின் வார்த்தைகள் என் மனத்தில் பீதியை உண்டாக்கினதில் ஆச்சர்யமென்ன!

விசாலத்தின் பிரசவத்தின் போது ஏதோ கோளாறு ஏற்பட்டு விட்டது. ஒத்தாசைக்கு வந்திருந்த நர்ஸ் உடனே பெரிய டாக்டரை அழைத்து வரும்படி உத்தரவிட்டாள். பதைக்கும் நெஞ்சுடன் போய் டாக்டரை அழைத்து வந்தேன்.

"கேஸ் ரொம்ப அவசரமானது. உடனே ஆபரேஷன் செய்ய வேண்டும்" என்று கூறி விட்டார் அவர். ஆபரேஷனும் நடந்தது. மிகச் சிரமப்பட்டு ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் விசாலம். ஏதோ கடவுள் அருளால் தாயும் சேயும் பிழைத்து விட்டார்கள். ஆனால் பணம் தண்ணீராகச் செலவழிந்தது. என்னுடைய கடன் சுமையின் பாரமும் அதிகரித்தது.

அதற்கு இரண்டு மாதங்கள் கழித்துக் கங்காவும் ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தாள்.

ஆறு மாதங்கள் சென்றன. விசாலம் தன் கணவனிடம் போகத் துடியாய் நின்றாள். நானும் சம்பந்தியம்மாளுக்கு விவரமாகக் கடிதமெழுதி, விசாலத்தின் பிரசவத்திற்காக அதிகப் பணம் செலவாகி விட்டதென்றும், அதனால் தற்சமயம் வைரத்தோடு வாங்கிப்போட முடியாத நிலையில் இருக்கிறேன் என்றும், எப்படியும் முயற்சி செய்து சில மாதங்களில் வாங்கிப் போட்டு விடுவதாகவும் கடிதமெழுதினேன்.

அதற்கு உடனே பதிலும் வந்து விட்டது. சம்பந்தியம்மாளா விட்டுக் கொடுப்பவள்! வைரத்தோடு எப்பொழுது போட முடிகிறதோ, அப்பொழுது விசாலத்தைக் கொண்டு விட்டால் போதுமென்று கண்டிப்பாக எழுதிவிட்டாள்.

கடிதத்தை விசாலத்தினிடம் காண்பித்தேன். அவள் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது.

விசாலத்துக்கு ஏற்பட்ட இந்தப் பேரதிர்ச்சி என் தாயாரையும் தாக்கிப் படுத்த படுக்கை

யாகி விட்டது. என்ன வைத்தியம் செய்தும் உடம்பு தேராமல் ஆறு மாத காலத்தில் அவள் இறைவன் பாதத்தைச் சேர்ந்தாள்.

நாட்கள் செல்லச் செல்ல விசாலத்தின் மீதும் என் மருமாள் ஸ்யாமளாவின் மீதும் எனக்குக் காரணமற்ற ஒரு வெறுப்பு வளர்ந்து வந்தது. இவர்களுக்காகக் கடன் வாங்கிப் பணத்தைத் தண்ணீராகச் செலவழித்து என்ன சுகத்தைக் கண்டேன்! எனக்கு நிரந்தர பாரமாக இவர்கள் அமைந்து விட்டார்களே! இதை எண்ண எண்ண எனக்கு மனச் சோர்வும் ஆத்திரமும் மேலிட்டன. விசாலத்தினிடமும் ஸ்யாமளாவிடமும் எடுத்ததற்கெல்லாம் எரிந்து விழ ஆரம்பித்தேன்.

சில சமயம் விசாலம் காதுபடவே, "என் வார்த்தையைக் கேட்டு அந்த டில்லி வரனை முடித்திருந்தால் இப்பொழுது ராணிமாதிரி இருக்கலாமல்லவா! அதை விட்டு விட்டு, இவள் இஷ்டப்படி செய்ததால் தானே இப்பொழுது என் வீட்டிலேயே இருக்க வேண்டியிருக்கிறது! என் தலையெழுத்து வாழ்நாள் முழுவதும் அவதிப்படவேண்டும்!" என்று அலுத்துக் கொள்வேன். விசாலம் மௌனமாகவே கண்ணீர் உகுப்பாள். அப்பொழுதெல்லாம் கங்காதான் அவளுக்குத் தேர்தல் சொல்லுவாள். என்னையும் என்னுடைய மூர்க்கத் தனத்துக்காகக் கடிந்து கொள்ளுவாள்.

ஐந்து வருடங்கள் உருண்டோடின. ஆனால் வெராமன் மனமென்னவோ மாறினதாகத் தெரியவில்லை. என்னிடமோ வைரத்தோடு வாங்கிப் போடப் பணமும் சேரவில்லை.

* * *

எதிரிலிருந்த கடியாரம் 'டாண் டாண்' என்று நான்கு முறை ஒலித்துச் சிந்தனைச் சுழலிலிருந்து என்னை விடுவித்தது.

என் குற்றமுள்ள நெஞ்சு குழந்தை ஸ்யாமளா என்ன செய்கிறளென்று பார்க்க ஆவலுற்றது. மெதுவாக விசாலத்தின் அறைக்குச் சென்று எட்டிப் பார்த்தேன்.

ஸ்யாமளா தரையில் படுத்துக் கொண்டிருந்தாள். அவளருகே பங்கஜா தன் கையில் ஜப்பான் பொம்மையை வைத்துக் கொண்டு நின்றிருந்தாள். இருவரும் என்ன பேசுகிறார்களென்று ஆவலுடன் கவனிக்கலானேன்.

"ஸ்யாமளா! என் மேல் கோபமா?"

"ஊஹூம்!"

"ஸ்யாமளா! பாவம், எங்கே! உன் கன்னத்தைக்காட்டு! ஐயோ, ஒரே வடியாக வீங்கிப் போயிருக்கிறதே! என்னால்தானே உனக்கு அடி விழுந்தது! அதை நினைக்கிறபோது எனக்கு ஒரே அழுகையாக வருகிறது!"

"பங்கஜம்! உன் பொம்மையை நான் பிடுங்கினது தப்புத்தானே! அதனால்தானே மாமா என்னை அடித்தார்!"

"ஸ்யாமளா! இனிமேல் என் பொம்மை எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு நாம் இரண்டு பேரும் விளையாடலாம். நான் சத்தம் போட்டு உனக்கு அடி வாங்கித் தரமாட்டேன். இதோ பார். இந்த ஜப்பான் பொம்மைக்குச் சாவி கொடுத்து நீயே கீழே விடு. என்ன ஜோராக காட்டியமாடுகிறது, பார்!"

பங்கஜா ஸ்யாமளாவிடம் பொம்மையைக் கொடுக்க அவளும் அதற்குச் சாவி கொடுத்துக் கீழே வைத்தாள். உடனே அந்த ஜப்பான் மங்கை வெகு அழகாகத் தன் உடம்பை வளைத்தும் தலையை ஆட்டியும், கையைத் தூக்கி அபிநயம் பிடித்தும் நடனமாடத் தொடங்கினள். குழந்தைகளிருவரும் தம் துயரை அக்கணமே மறந்து கையைக் கொட்டி ஆர்ப்பரித்தார்கள்!

அக் காட்சியைக் கண்ட என் கண்களிலிருந்து என்னையுமறியாமல் நீர் வழிந்தது.

கால வித்தியாசத்தினல் என்னுடன் கூடவேயிருக்கும்படி நேரிட்டு விட்ட என் தங்கையிடமும் மருமாளிடமும் இதுவரை எவ்வளவு மூர்க்கத்தனமாக நடந்து கொண்டிருக்கிறேன்! பாவம்! விசாலம் பொறுமையே உருவாக இருப்பதால் தான் இதுவரை எல்லாவற்றையும் மௌனமாகவே அனுபவித்து வந்திருக்கிறள். ஒரு பெண்ணிற்குத் தன் கணவனால் கைவிடப் படுவதை விட அதிகத் துயரத்தைக் கொடுக்கும் செய்கை வேறெதுவாகிலு மிருக்க முடியுமா! நொந்துபோன விசாலத்தின் இதயத்துக்கு உற்சாகமளிப்பதை விட்டு அவளுடன் கூடப் பிறந்த நானே அவளுக்கு இன்னும் அதிகத் துன்பத்தை அளித்து வந்தேனே! என்னே என் மதியீனம்! என் மனச் சாட்சி என்னை, "நீ குற்றவாளி!" என்று சுட்டிக் காட்டியது.

அக்கணமே உள்ளே பாய்ந்து குழந்தை ஸ்யாமளாவை வாரி அணைத்து முத்தமிட்டேன். அவள் மிரண்டு விட்டாள். எங்கே மாமா மறுபடியும் தன் கன்னத்தைப் பதம் பார்த்து விடுவாரோவென்று பயந்தாள் போலும்!

"கண்ணே, ஸ்யாமளா! நான் உன்னை இனிமேல் ஒருபோதும் அடிக்க மாட்டேன். பயப்படாதே!" என்று உணர்ச்சி பெருகக் கூறினேன்.

அப்பொழுது அங்கு எதேச்சையாக வந்த விசாலத்தின் கண்கள் நான் ஸ்யாமளாவைக் கொஞ்சுவதைப் பார்த்ததும் ஆச்சரியத்தினல் விரிந்தன.

"விசாலம், என்னை மன்னித்து விடு. என்னுடைய அறியாமையினல் உன்னை இவ்வளவு



"போன யுத்தத்தின்போது இவர்கள் இரண்டு சண்டை செய்தார்கள்."

"ஓ! அப்படியா! கடற் படையிலா, அல்லது காலாட் படையிலா?"

"இல்லே, சார்! இவர்கள் இரண்டு பேருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டுப் பெரிய சண்டை போட்டார்கள்!"

நாட்கள் கொடுமையாக நடத்தி விட்டேன். இன்றுதான் என் அறிவு தெளிந்தது" என்று அவளிடம் சொன்னேன்.

"அண்ணா! நீ என்ன அப்படிக் குற்றம் செய்து விட்டாய், என்னிடம் மன்னிப்பு கோருவதற்கு! எனக்காக நீ எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தும் அனுபவித்துக் கொண்டும் இருக்கிறாய்! எல்லாம் என் போதாத காலம்" என்றாள் விசாலம்.

*　　　　*　　　　*

அப்பொழுது அவசரமாக அங்கே வந்த கங்கா, "அக்கா! பகவானின் கடைக்கண் பார்வை உங்கள் மீது விழுந்துவிட்டது. நான் சொன்னபடி உங்களுக்கு விடிவு காலம் ஏற்பட்டு விட்டது. வாசலில் போய்ப் பாருங்கள், யார் வந்திருக்கிறார்கள் என்று!" என்று கூறி என்னைப் பார்த்து, "மாப்பிள்ளை வந்திருக்கிறார். போய் உபசரியுங்கள். இதோ ஒரு நொடியில் நான் காப்பி போட்டுக் கொண்டு வருகிறேன்" என்று சமையலறைக்கு ஓடினாள்.

நான் வாசலை ஓரே எட்டில் அடைந்தேன். அப்பொழுதுதான் சிவராமன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். கண்களைத் தேய்த்து விட்டுக் கொண்டு மறுபடியும் பார்த்தேன். ஆம்! சிவராமனேதான்! சந்தேகம் இல்லை.

"வாருங்கோ, மாப்பிள்ளை! வாருங்கோ!" என்று எதிர் கொண்டழைத்து அவனை நாற்காலியில் உட்காரச் செய்தேன்.

சிவராமன் உட்கார்ந்து கொண்டான். அவன் உடம்பு இளைத்திருந்தது. முகத்தில் வெகு நாட்களாகத் துன்பத்தை அனுபவித்தவன் போல் ஒரு விதச் சோகம் குடிகொண்டிருந்தது.

கங்கா பின் தொடரக் காப்பியை எடுத்துக் கொண்டு வந்த விசாலம் அதைச் சிவராமனருகே வைத்துவிட்டு ஒதுங்கி நின்றாள். சிவராமன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான். இருவர் கண்களும் சந்தித்தன. விசாலத்தினால் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. புடவைத் தலைப்பினால் தன் முகத்தை மறைத்துக் கொண்டு விம்மலானாள். சிவராமன் கண்களிலும் நீர் ததும்பிற்று.

"விசாலம், சென்றதை எண்ணி வருத்தப் படாதே! இனி உன்னைப் பிரிந்து நான் ஒரு கணமும் இருக்க மாட்டேன். அம்மா சாகக் கிடக்கிறாள். உன்னையும் சியாமளாவையும் உடனே அழைத்து வரவேண்டுமென்பது அவள் ஆக்ஞை. உனக்கு இழைத்த கஷ்டத்துக்காக அம்மா இப்பொழுது மிக வருந்துகிறாள். சாவதற்கு முன் உன்னைப் பார்த்து உன் மன்னிப்பைப் பெற்றால்தான் தன் ஆத்மா சாந்தியடையுமென்று கதறுகிறாள். சென்று போனதையெல்லாம் மறந்துவிடு" என்று வெகு உருக்கமாகச் சொன்னான் சிவராமன்.

அப்பொழுது சியாமளாவும் பங்கஜாவும் அங்கு ஓடி வந்தார்கள். சியாமளாவைத் தூக்கிச் சிவராமன் கையில் கொடுத்து, "இதோ, உங்கள் செல்வ புத்திரி சியாமளாதேவி!" என்றேன். சிவராமன் குழந்தையைக் கட்டி அணைத்து வாத்ஸல்யத்துடன் முத்தமிட்டான்.

பிறகு, என்னைப் பார்த்து, "என் தாயாரின் மனம் இப்பொழுது முழுவதும் மாறிவிட்டது. தான் விசாலத்திற்கு இழைத்த அநீதிக்கு ஒரு வாறு ஈடு செய்யும் பொருட்டுத் தனது பணத்திலேயே இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய்க்கு ஒரு ஜதை வைரத்தோடு வாங்கி என்னிடம் கொடுத்தனுப்பியிருக்கிறாள். அதை விசாலத்திற்கு அணிவித்து அழைத்து வரவேண்டுமென்பது அவளுடைய கட்டளை" என்று சொல்லிக்கொண்டே கண்ணைப் பறிக்கும் வைரங்கள் பதித்த ஒரு ஜதைத் தோட்டை எடுத்து விசாலத்தினிடம் கொடுத்தான். நான் பேசும் சக்தியை இழந்து திகைத்துப் போய் நின்றேன்!

மனத்தின் ஆழத்தைக் காண முடியாது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்களே, அது எவ்வளவு உண்மை! வைரத்தோடு வாங்கிப் போட்டால்தான் என் வீட்டுக்கு வரலாம் என்று சொன்ன விசாலத்தின் மாமியாரின் மனம் எப்படிப் பொன்னாக மாறிவிட்டது! விசாலத்தை வெறுத்த என்னுடைய மனமும்தான் எப்படி ஒரு நொடியில் மாறிவிட்டது!

மறுநாள் காலை சென்னைக்குப் புறப்பட சிவராமனும் விசாலமும் தயாராகி விட்டார்கள்.

குழந்தைகள் சியாமளாவும் பங்கஜாவும் கண்களில் நீர் ததும்ப ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

அப்பொழுது பங்கஜா திடீரென்று, "சியாமளா! கொஞ்சம் இரு. நீ என்னை மறக்காமலிருக்க உனக்கு ஒரு பரிசு தருகிறேன். இதோ வந்து விட்டேன்" என்று கூறிக் கொண்டே உள்ளே ஓடி ஜப்பான் பொம்மையுடன் திரும்பி வந்தாள். அதைச் சியாமளாவின் கையில் திணித்து, உணர்ச்சி பொங்க, "சியாமளா, இந்தப் பொம்மையை நீயே வைத்துக் கொள். இதை வைத்துக் கொண்டு விளையாடுகிற போதெல்லாம் என் ஞாபகம் உனக்கு வருமல்லவா!" என்றாள்.

"நிஜமாகவா, பங்கஜம்! இந்தப் பொம்மையை எனக்கே கொடுத்து விட்டாயா! பங்கஜம், நீ ரொம்ப நல்லவள்!" என்று வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் கூறிய சியாமளா பங்கஜாவை அப்படியே தழுவிக் கொண்டாள்.


குழந்தை யுள்ளத்தின் மேன்மையைக் கண்ட என்னுள்ளம் வியப்பில் மூழ்கியது.



மனைவி :—அப்பப்பா, இது என்ன தொந்தரவு! எத்தனை நேரம்தான் தொட்டிலை ஆட்டுவது! தூங்கினால் தானே?

கணவன் :—வீணாக அலுத்துக் கொள்ளாதே! இன்றைக்குத் தொட்டிலை ஆட்டும் கைதான் நாளைக்குத் தேசத்தையே ஆளும், தெரியுமா?

மனைவி :—அப்படியானால் சரிதான். நீங்கள் கொஞ்ச நேரம் இங்கே வந்து தேசத்தை ஆளுங்கள். நான் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்கிறேன்!



அம்மாவும் நானும் விரும்புவது....

உலகத்திலேயே குழந்தைகளுக்கேற்ற ஆகாரங்களைத் தயாரிப்பதில் கைதேர்ந்தவர்களான நெஸில்ஸால் தயாரிக்கப்பட்ட லாக்டோஜனே யாகும். என் தாயார் அதை விரும்புவதற்குக் காரணம் அதில் விடமின்களும், இரும்புச் சத்துக்களும் சேர்ந்திருப்பதேயாகும். விடமின் 'A' சரீரத்தை சீக்குகளிலிருந்து பாதுகாப்பதற்கும், விடமின் 'D' நல்ல பற்கள் வளருவதற்கும், இரும்புச் சத்துக்கள் இரத்த புஷ்டிக்கும், சிறந்தது.

நான் லாக்டோஜனை விரும்புவதற்குக் காரணம், அது ருசியுள்ளதாயிருப்பதுடன், எளிதில் ஜீரணமாகி விடுகிறது. மேலும் இதை சீக்கிரமாக தயாரிக்க முடிவதால், பசித்தவுடன் சாப்பிட முடிகிறது. என் சிநேகிதர்கள் எல்லோரும் லாக்டோஜனை விரும்புகிறார்கள். இந்த ஒரு விஷயத்தில் நான் அவர்களுடைய தாயார்களும், அவர்கள் சொன்னதை சரி என்கிறார்கள்.

NESTLE'S **LACTOGEN**

குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்.



எங்களுடைய இலவச லாக்டோஜன் புஸ்தகத்தை படியுங்கள். இந்த கூபனில் உங்களுடைய பெயரையும், முழு விலாசத்தையும் எழுதி

நெஸில்ஸ் பிராடக்ட்ஸ் (இந்தியா) லிட்.,


தபால் பெட்டி 180, மதராஸ்.

என்ற விலாசத்திற்கு இன்றே போஸ்ட் பண்ணுங்கள்.

பெயர்...

விலாசம்...

....



நல்ல வெய்யில். மணி பதினொன்றிருக்கும். ராமநாதன் சேத்துப்பட்டு ஸ்டேஷனில் இறங்கி ஆபீஸுக்கு நடந்து கொண்டிருந்தான். அவன் ஸ்டேஷனிலிருந்து பத்து கஜ தூரம் கூடப் போயிருக்க மாட்டான். பின்னாலிருந்து "ஸார்!" என்ற குரல் வந்தது. திரும்பிப் பார்த்தான். தலையில் சிவப்புத் துணி மூண்டாசும், இடுப்பில் நான்கு முழ வேஷ்டியை மூலைக் கச்சமுமாகக் கட்டிக் கொண்டு, துடைப்பத்துடன் ஒருவன் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் ஒரு தோட்டி என்பதைப் புரிந்து கொள்ள ராமநாதனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. 'இவன் நம்மை எதற்காகக் கூப்பிடுகிறான்?' என்று எண்ணித் தயங்கி நின்றான். அதற்குள் அருகில் வந்த தோட்டி, "சாமி! இந்த மோதிரம் கீழே கிடந்து கிடைத்தது. இது பொன்தானா, பாருங்கள்!" என்றான்.

ராமநாதன் அதைப் புரட்டிப் பிரட்டிப் பார்த்துவிட்டு, "பொன் போலத் தான் தோன்றுகிறது!" என்று கூறி அவனிடமே திருப்பிக் கொடுக்கப் போனான்.

தோட்டி அதை வாங்கிக் கொள்ளாமல், "எஜமான்! இந்த ஏழைக்கு இந்த மோதிரம் எல்லாம் எதற்குங்க? நீங்களே எடுத்துக் கொண்டு ஏதாவது கொடுத்து விட்டுப் போங்களேன்!" என்றான்.

"இதற்கு என்ன கேட்கிறாய்?" என்று கேட்டான் ராமநாதன்.

"இந்தக் காலத்திலே பொன் விற்கும் விலை தெரியாதுங்களா? அதைப் பார்த்துக் கொடுங்களேன்!" என்றான் தோட்டி.

பொன் என்று சொன்ன ராமநாதனுக்கு ஒரு வேளை அது பித்தளையாயிருந்து விடுமோ என்ற சந்தேகம் எழுந்தது. 'சேச்சே! பித்தளை இப்படிப் பவுன் நிறமாக இருக்குமா?' என்ற எண்ணமும் அதைத் தொடர்ந்தாற் போலவே எழுந்தது. 'பொன்னாகவே இருந்தால்கூட இது கீழே கிடந்து கிடைத்ததாக இருக்கும் என்று எப்படிக் கூறமுடியும்? இவன் எங்கிருந்தாவது திருடிக் கொண்டு வந்திருந்தால்...? நமக்கு எதற்கு வீண்வம்பு?' என்ற எண்ணம் எழவே, அவன் "எனக்கு வேண்டாம், அப்பா!" என்றான்.

அவன் தயக்கத்துடன் பதில் சொல்வதைக் கண்ட தோட்டி, "திருட்டுப் பொருளாக இருக்குமோ என்று பயப்படாதீர்கள். கீழே கிடந்து கிடைத்ததுதான். இந்த ஏழையிடம் இது இருந்தால் போலீஸ்காரங்க சும்மா விட மாட்டாங்க. அதனால்தான் கொடுத்துப் போடலாம் என்று பார்த்தேனுங்க. நீங்கள் வேணுமானால் முப்பது ரூபாய் கொடுத்து விட்டு எடுத்துப் போங்கள்!" என்றான்.

முப்பது ரூபாயைக் கரியாக்க மனம் வரவில்லை, ராமநாதனுக்கு. எனவே, வேண்டாம் என்று கண்டிப்பாக மறுத்து விட்டு முன்னே நடந்தான். அதைக் கண்ட தோட்டி "சாமி, சாமி! இருபத்தைந்து ரூபாய் கொடுங்கள். இல்லா விட்டால் இருபது ரூபாயே கொடுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே அவனைப் பின் தொடர்ந்தான்.

ராமநாதனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. "எலே, திருட்டுப் பயலே! என்னையா ஆழம் பார்க்கிறாய்? போலீஸ்கார

னிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன். ஆமாம், ஜாக்கிரதை! பேசாமல் போ!'' என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தான்.

அந்த அதட்டலைக் கேட்ட தோட்டியும் முணுமுணுத்துக் கொண்டே அவனைப் பின் தொடராமல் நின்று விட்டான்.

ராமநாதன் மௌரோஜித் தெரு முக்கில் திரும்பினான். நவநாகரிகமான உடை அணிந்த ஒரு வாலிபன் கீழே குனிந்து பார்த்தவண்ணம் எதையோ தேடிக் கொண்டே வந்து கொண்டிருந்தான். ராமநாதனைப் பார்த்ததும், அவன் "ஸார்! நீங்கள் எந்தப் பக்கமாக வருகிறீர்கள்?'' என்று கேட்டான்.

"ஏன்? ஸ்டேஷனிலிருந்து வருகிறேன்!''

"நான் ஸ்டேஷனிலிருந்து தான் வந்தேன். என் கல் இழைத்த மோதிரம் நழுவிக் கீழே எங்கேயோ விழுந்து விட்டது. அசல் பவுன் மோதிரம். பெறுமானம் நாற்றைம்பது ரூபாய்க்குக் குறையாது...''

வாலிபன் சொல்லி முடிப்பதற் குள்ளாகவே ராமநாதன், 'ஒரு தோட்டியின் கையில் பார்த்தேன்!' என்று சொல்லி விடுவோமா என்று எண்ணினான். அதற்குள் அந்த வாலிபன், "...ஸார்! அது மட்டும் அல்ல; அதில் இன்னொரு முக்கிய விசேஷம் என்னவென்றால், இந்த வருஷம் தலை தீபாவளியின் பொழுது தான் அதை மாமனார் எனக்குப் பரிசாக அளித்தார். அதனால் அதைக் கொண்டு வந்து கொடுப்பவர்களுக்கு நூறு ரூபாய் வெகுமதி அளிக்கக் கூட நான் தயார். இப்பொழுது தேடிப் பார்க்கப் போகிறேன். கிடைக்க விட்டால் நாளை நாலைந்து பத்திரிகைகளில் நாளைக்கு விளம்பரம் கூடச் செய்வதாக எண்ணி யிருக்கிறேன்!'' என்றான்.

அதைக் கேட்ட உடனே ராமநாதனின் மனம் மாறிவிட்டது. நூறு ரூபாய் வெகுமதி! தோட்டியின் கையில் பார்த்தது கல் இழைத்த மோதிரம்தான்! அது இவருடையதாகத்தான் இருக்க வேண்டும்! இன்று நாம் காலையில் நரி முகத்தில் தான் விழித்திருக்கிறோம் என்று எண்ணியவன், வாலிபனைப் பார்த்து. "உங்கள் மோதிரம் எப்பொழுது ஸார் காணமற் போயிற்று?'' என்று கேட்டான்.

"இன்று காலை எட்டு மணிக்கு நான் இந்தப் பக்கம் வந்தேன், ஸார்! சேத்துப்பட்டு ஸ்டேஷனில் இறங்கியபொழுது என் விரலில் இருந்தது நன்றாக ஞாபகம் இருக்கிறது! அப்புறம் எங்கே விழுந்ததோ, தெரியவில்லை! எவன் கையிலாவது கிடைத்தால் கொடுக்கவா போகிறான்?'' என்று வருத்தந் தாளாமல் தலையைப் பிடித்துக் கொண்டான் அந்த வாலிபன்.

அதைக் கண்ட ராமநாதனுக்கு மிகவும் வேதனையாகப் போய் விட்டது. வெகுமதியைப் பற்றிக் கோட்டை கட்டிக் கொண்டிருந்த அவனுக்கு அந்த வாலிபனின் மன வேதனையைக் கண்டதும் அளவற்ற இரக்கம் உண்டாயிற்று. அந்த வாலிபனின் நிலையில் நாம் இருந்தால் என்ன பாடுபடுவோம்?' என்று சிந்தித்துப் பார்த்தான். அவன் மனம் பெருந் துயர் உற்றது. அடுத்த கணமே, 'வெகுமதியும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்' என்ற முடிவுக்கு வந்து விட்டான். அது மட்டும் அல்ல; தானும் கூட இருந்து மோதிரத்தை வாங்கிக் கொடுப்பது என்றும் தீர்மானித்தான். எனவே, வாலிபனைப் பார்த்து, "ஸார்! இப்பொழுதுதான் நான் ஒரு மோதிரத்தைத் தோட்டி ஒருவனின் கையில் பார்த்தேன். அதுவும் கல் இழைத்த மோதிரம்தான். அவன் அதை விற்றுவிட நின்று கொண்டிருந்தான். என்னிடம் கூட இருபது ரூபாய்க்குத் தருவதாகச் சொன்னான். வாருங்கள், நாம் இருவருமே போய் அதட்டி உருட்டி அதை வாங்கி வந்து விடுவோம்!'' என்றான்.

"நிஜமாக நீங்கள் பார்த்தீர்களா? வாருங்கள், ஸார்!'' என்று மகிழ்ச்சியுடன் முன்னேறிய வாலிபன், இரண்டு அடி வைப்



பதற்குள்ளாக, "ஸார்! ஒரு வேளை நான் வந்து அதட்டி உருட்டி வாங்க முயற்சித்தால் காரியம் கெட்டாலும் கெட்டு விடும். எப்படியும் நான் நூறு ரூபாய் வரை அதற்குப் பரிசு தருவதாகத் தீர்மானித்திருக்கிறேன் அல்லவா? அதனால் யோசனை செய்யாமல் அவனிடம் சென்று என்ன விலை சொன்னாலும் பேரம் பேசி அதை நீங்களே வாங்கி வந்து விடுங்கள்! நான் பணம் தந்து விடுகிறேன். மோதிரத்தின் விலை போக மீதியுள்ள பணத்தை உங்களுக்குப் பரிசாக அளிக்கவும் நான் சித்தமாயிருக்கிறேன்!" என்றான்.

ராமநாதனுக்கும் அவன் யோசனை சரியாகவே பட்டது. இரண்டு பேராக வருவதைக் கண்டு தோட்டி முறைத்தாலும் முறைக்கலாம் அல்லவா? அதனால், "ஸார்! நீங்கள் இங்கேயே இருங்கள்! இதோ போய் நான் வாங்கி வந்து விடுகிறேன்!" என்று கூறிவிட்டு ஸ்டேஷனை நோக்கி நடக்கலானான்.

ராமநாதன் சமிக்ஞை செய்து அவனை அருகில் அழைத்தான். அருகில் தோட்டி வந்ததும், "மோதிரம் எங்கே? கொண்டு வா, பார்ப்போம்" என்றான்.

"உங்களுக்கு அந்த மோதிரத்தைத் தருவதற்கில்லைங்க, போய் வாருங்க!" என்று பிகு செய்து கொண்டான் தோட்டி.

"நீ கேட்ட பணத்தைக் கொடுத்து விடுகிறேன், அப்பா!" என்றான் ராமநாதன்.

"நான் கேட்டதற்குப் பத்து ரூபாய் அதிகமாகக் கொடுத்தால் கூடக் கிடைக்காதுங்க!"

"அப்படிச் சொல்லாதே! நீ முதலில் கேட்ட பணத்தைக் கொடுத்து விடுகிறேன்."

"முடியாதுங்க!"

"என்ன அப்பா இது! 'வாங்கிக் கொள், வாங்கிக் கொள்' என்று கெஞ்சிக்கொண்டு பின்னோடு வந்தவன் இப்பொழுது தரமாட்டேன் என்கிறாயே! கொடு, அப்பா!"



தாயும் பிள்ளையும்

வ. சா. நாகராஜன்

நடராஜன் வீட்டுக்குள் நுழைந்து கடையில் செருப்பைக் கழற்றிவிட்டுக் கூடத்திற்கு வந்து சட்டையைக் கழற்றினான். அங்கே அவனுடைய மனைவியோ, தாயோ இல்லை. சட்டையை 'கோட் ஸ்டாண்'டில் மாட்டி விட்டுச் சமையல் அறைப் பக்கம் சென்றான். பத்மா அங்கே புடவைத் தலைப்பை விரித்துப் படுத்துக் கொண்டிருந்தாள். நடராஜனைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்து கொண்டு "காப்பி பிளாஸ்கில் ஊற்றி வைத்திருக்கிறேன், எடுத்துக் குடியுங்கள்" என்றாள் அவன் முகத்தைப் பாராமலேயே.

அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் "அம்மா எங்கே?" என்றான் நடராஜன்.

"எனக்குத் தெரியாது."

"எங்கேயாவது கோவிலுக்குக் கிவுலுக்குப் போயிருக்கிறாளா?"

"எனக்கு எப்படித் தெரியும்? கோவிலுக்குப் போனால் என்னிடம் சொல்லிக் கொண்டா போக வேணும்?" என்றாள் பத்மா.

நடராஜனுக்கு விஷயம் புரிந்து விட்டது. வழக்கம்போல் மாமியாருக்கும் மாட்டுப் பெண்ணுக்கும் எதைப்பற்றியோ பலத்த சண்டை நடந்திருக்கிறது என்று!

அவன் கூடத்திற்கு வந்தான். மேஜையின்மேல் இருந்த 'பிளாஸ்க்கை'த் திறந்து காப்பியைக் குடித்தான். பிறகு கூடத்து அறைக்குச் சென்றான். அங்கே அவனுடைய தாயார், பத்மா சமையல் அறையில் படுத்துக் கொண்டிருந்த மாதிரியே தலைப்பை விரித்துப் படுத்துக் கொண்டிருந்தாள். "அம்மா!" என்று குரல் கொடுத்தான் பிள்ளை.

அம்மா மௌனமாகப் படுத்திருந்தாள்.

"இதோ பார், அம்மா! தினம் தினம் இந்த மாதிரிச் சண்டை போட்டுக் கொண்டிருந்தால் நன்றாக இருக்கிறதா?"

"ஆமாண்டாப்பா, என்னைத்தான் வந்து கேட்பாய்! நான்தான் சண்டைக்காரி..."

"உன்னை நான் வந்து சண்டைக்காரி என்று சொன்னேனா?......ஆபீஸிலிருந்து அலுத்துச் சலித்து வந்திருக்கிறேன். ஒரு வாய்க் காப்பி கொடுக்க யாரும் இல்லை. இப்படி மூலைக்கொருவராகப் படுத்துக் கொண்டிருந்தால் எனக்கு 'ஏண்டாப்பா இந்த வீட்டுப் பக்கம் வருகிறோம்?' என்று இருக்கிறது......"

"சரி, நீ போய்க் காப்பியைக் குடி" என்று இறங்கி வந்தாள் தாயார்.

"எல்லாம் குடிச்சுத் தொலைச்சாச்சு!"

"இதோ பார், நடராஜா! இன்றைக்கு நடந்ததை நான் சொல்கிறேன். நீயே கேட்டுப் பார்......"

"எனக்கு ஒன்றும் கேட்க வேண்டாம். என்னைச் சற்று நிம்மதியாக இருக்க விடுங்களேன்!" என்று சொல்லிவிட்டு அவன் கூடத்திற்கு வந்து நடுவில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

"ஆமாம், நான் சொன்னால் உனக்குப் பிடிக்காது. அவள் கூட்டிக் குறைத்துச் சொன்னால் கேட்டுக் கொண்டிருப்பாய்!" என்று சொல்லிக் கொண்டே அவனைப் பின் தொடர்ந்தாள் அவனுடைய தாயார்.

நடராஜன் பதில் பேசாமல் பத்திரிகையை எடுத்து முகத்தை மறைத்துக் கொண்டான்.

"நீயே கேட்டுக்கொள். இன்றைக்கு மத்தியானம் மூன்று மணி இருக்கும். யாரோ இரண்டு சிநேகிதிகள் இங்கே வந்திருந்தார்கள். இவள் மத்தியானம் சாப்பிட்டு முடித்ததிலிருந்து மும்முரமாக டிபன் பண்ண ஆரம்பித்ததன் காரணம் அப்புறம்தான் எனக்குத் தெரிந்தது. 'இரண்டு சிநேகிதிகள் வரப்போகிறார்கள், அம்மா!' என்று என்னிடம் முன்னாடியே ஒரு வார்த்தை சொன்னால் நான் 'வரக் கூடாது' என்று அவளிடம் சொல்லி விடுவேனா?......"

இச்சமயத்தில் சமையல் அறையில் படுத்துக்கொண் டிருந்த பத்மா எழுந்து வந்து



நடராஜனின் இடது பக்கம் நின்று கொண்டாள். "நீங்கள் வேண்டாம் என்று சொல்வீர்கள் என்பதற்காக ஒன்றும் உங்களிடம் சொல்லாமல் இருக்கவில்லை. அவர்கள் இரண்டு பேரும் இன்று நிச்சயமாக வரப் போவதாகச் சொல்லவில்லை. சந்தேகமாகச் சொல்லியிருந்தார்கள். அதனால், 'வந்தால் பார்த்துக் கொள்ளலாம்' என்று இருந்து விட்டேன். இது ஒரு குற்றமா? இரண்டு சினேகிதர்களை இந்த வீட்டுக்கு அழைக்கும் உரிமைகூட எனக்குக் கிடையாதா?"

"படித்துக் கண்ட பலன் இந்த மாதிரி உரிமையைப் பற்றி வாய் கிழியப் பேசுவது தான்! ஹூம்...! நீ ஒன்று சொன்னாய், அவள் ஒன்றுசொன்னாள், அவ்வளவுதானே?"

"சரி! அவர்கள் வந்த பிறகாவது 'என் சிநேகிதிகள் வந்திருக்கிறார்கள்' என்று என்னிடம் சொல்லக் கூடாதா? வீட்டுக்குப் பெரியவளாக நான் ஒருத்தி......"

"எனக்குச் சொல்ல வேண்டாம் என்கிறது என்று ஒன்றும் இல்லை. நீங்கள் பாட்டுக்கு 'உர்' என்று கூடத்து உள்ளே போய் உட்கார்ந்து விட்டால் நான் எப்படி உங்களைக் கூப்பிடுகிறதாம்?"

"கேட்டுக் கொண்டாப்பா! நான் 'உர்' என்று உம்மணா மூஞ்சி மாதிரி இவளுக்கு இருக்கிறேனாம்!"

"இதே தொல்லையாகப் போச்சு, இந்த வீட்டில்! இதோ பார், அம்மா! நீங்கள் இரண்டு பேரும் எவ்வளவு வேண்டுமானாலும் சண்டை போட்டுக் கொள்ளுங்கள். ஆனால் என் எதிரில் மாத்திரம் போடாதீர்கள்......!"

"ஆமாண்டாப்பா! உன்னைப் பெற்று வளர்த்ததற்கு உன் பெண்டாட்டி வாயால் நான் வார்த்தை வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டியதுதான். நீயும் அதைக் கேட்டுக் கொண்டு என்மேல் பாய வேண்டியதுதான்!"

"இது என்ன பத்மா, இது? நீயாவது கொஞ்சம் ஒதுங்கிப் போகக் கூடாதா? அடாடா! எனக்குக் கொஞ்சங்கூடப் பொறுக்க முடியவில்லையே!"

"ஆமாம்! உங்களுக்கு என்மீதுதான் பாயத் தெரியும்......! முழுவதையும் கேட்க எங்கே பொறுமை இருக்கப் போகிறது?"

"போதும், நிறுத்து. தினம் பொழுது விடிந்தால் பொழுது போனால் இதுதான் தொல்லை! உன் பிறந்தகத்தைப் பார்க்க ஒரு மாதமாவது தொலைந்து போ. கொஞ்ச நாளாவது இந்தத் தொல்லையிலிருந்து நான் நிம்மதியாக இருக்கிறேன்" என்றான் நடராஜன்.

"நான் ஏன் தொலையணும்? வேணுமானால் உங்கள் அம்மாவைத்தான் போகச் சொல்லுங்களேன்......!" என்றாள் பத்மா.

இதற்கு நடராஜன் ஏதாவது பதில் சொல்வான் என்று தாயார், மனைவி இருவருமே எதிர்பார்த்தார்கள். ஆனால் நடராஜன் வாய் திறவாமல் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய மௌனம் தாயாருக்கு மிகுந்த ஏமாற்றமாகவும் அவமானமாகவும் இருந்தது. மாட்டுப் பெண் தன்னைத் தொலைந்து போகட்டும் என்று சொல்லும் போது தான் பெற்று வளர்த்த பிள்ளை பேசாமல் இருப்பதை நினைக்க அவளுக்குத் தொண்டையை அடைத்தது.

பத்மாவோ வார்த்தையை அதிகமாகவிட்டு விட்டதை நினைத்துச் சற்றுத் துணுக்குற்றாள். கணவன் தன்னைக் கண்டிப்பான், அந்தக் கண்டிப்புக்குள் தன் தவறு அடங்கி விடும் என்று எதிர்பார்த்தாள். ஆனால் நடராஜனுடைய மௌனம் அவளுடைய மனத்தில் பீதியை உண்டு பண்ணிற்று.

கண்களில் கண்ணீர்பொங்க, "சரிடாப்பா! நானே தொலைகிறேன். இன்றைக்கு அவள் என்னைப் பார்த்துத் தொலைந்து போ என்று சொல்ல நீயும் பேசாமலிருக்கிறாய்! அப்புறம் என்ன? எப்படியாவது நீங்கள் நன்றாக இருக்கணும். அவ்வளவுதான்!" என்று சொல்லிவிட்டுக் கூடத்து உள்ளுக்குச் சென்று

தன் புடவைகளை மூட்டையாகக் கட்டத் தொடங்கி விட்டாள் அவன் தாயார்.

நடராஜன் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் அம்மா கேட்கவில்லை. எனவே, மறு நாள் அம்மாவை ரயில் ஏற்றி விட்டு வீட்டுக்குத் திரும்பினான் நடராஜன். அம்மா சதா உட்கார்ந்து கொண்டிருக்கும் ரேழித் திண்ணை வெறிச்சென்று இருப்பதைக் கண்டதும் எதிரில் வந்த பத்மாவிடம், "இப்பொழுது திருப்தியாகப் போய் விட்டதல்லவா?" என்று விஷ்ரோமாகக் கேட்டான்.

"அம்மாவை நான் ஊருக்குப் போகச் சொன்னேனா?" என்று அவனிடம் திருப்பிக் கேட்டாள் பத்மா.

"இல்லை, நான் போகச் சொன்னேன்!"

இரண்டு மூன்று மாதங்கள் ஓடின. பத்மா வாயை விட்டுச் சொல்வதற்கு முன்னாலேயே நடராஜன், தான் தகப்பனாராகப் போவதை அறிந்து பெருமையும் சந்தோஷமும் அடைந்தான். இந்தச் சந்தோஷ சமாசாரத்தை அம்மாவுக்குத் தெரிவித்து நடந்ததை மறந்து உடனே அவள் கிளம்பி வர வேண்டும் என்று கடிதம் எழுதினான். ஆனால் அப்பொழுது நடராஜனுடைய தங்கையின் பிரசவ சமயமாக இருந்ததால் அம்மாவினால் உடனே புறப்பட்டு வர முடியவில்லை. அவள் திரும்பி வருவதற்குள் பத்மா பிறந்தகம் சென்று விட்டாள்.

பத்து மாதம் ஆனவுடன் பத்மா ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். குழந்தை பிறந்து பதினைந்து பதினாறு நாட்கள் ஆகி விட்டன. அன்று பத்மா குழந்தையை அணைத்துக் கொண்டு படுத்திருந்தாள். அந்தக் குழந்தைக்காகத்தான் படவேண்டியிருக்கும் வேதனைகளை எல்லாம் நினைத்துத் தாயுள்ளம் பெருமை அடைந்தது. அந்தப் பூரிப்பில் குழந்தையை இன்னும் இறுக அணைத்துக் கொண்டாள். மல்லிகைப் பூ மூட்டையை அணைத்துக் கொள்வது போல் இருந்தது. பத்மா அப்படியே தூங்கிப் போனாள்.



அம்மா (கோபத்துடன் குழந்தைகளிடம்):—எனக்குக் கடவுள் பத்துக் கைகள் கொடுத்தால் சௌகரியமாயிருக்கும், உங்கள் காரியங்களையெல்லாம் கவனிப்பதற்கு!

கடைசிப் பையன்:—உனக்குப் பத்துக் கைகள் வேண்டாம், அம்மா! இரண்டு கைகளினால் நீ அடிப்பதையே என்னால் தாங்க முடியவில்லை!

தூக்கத்தின் நடுவில் அவள் ஒரு கனவு கண்டாள். அந்தக் கனவில் அவள் குழந்தைக்குத் தாலாட்டிப் பாலூட்டி வளர்க்கும் ஆனந்தத்தை அநுபவித்தாள். பிறகு அவனுடைய தலையை இழைய இழைய வாரிக் கையில் புத்தகமும் பலகையும் கொடுத்து, ஆயிரம் முத்தங்களுடன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும் இன்ப நினைவைப் பெற்றாள். அப்புறம் அவன் கற்க வேண்டியதை எல்லாம் கற்று இளங் காளையாக தன் எதிரில் வந்து நிற்பதாக உணர்ந்தாள். பிறகு அவனுடைய ஆசைகளின் சிகரமாக அவன் பக்கத்தில் அழகிய ஒரு பெண் வந்து நிற்பதைப் பார்த்ததும் அவள் உடல் பூரித்தது. பத்மா ஆனந்தக் கண்ணீர் விட்டாள். கணவரை நினைத்தாள். பிறகு மாமியாருடைய நினைவு எழுந்தது.

மாமியாரின் நினைவு எழுந்ததும் திடீரென்று ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அந்த அழகிய பெண், பத்மாவை அவனுடைய பிள்ளைக்குச் சுட்டிக் காட்டி, "அதோ இருக்கிறாளே, அவள் நம்முடன் இங்கே இருக்கக் கூடாது! ஏனெனில் நீங்கள் என்னுடையவர்!" என்றாள்.

"அடி, பாவி! அவனை எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பெற்று வளர்த்துப் பாலூட்டிச் சீராட்டி அவனுடைய உடல் நலத்திற்காகப் பட்டினியும் பத்தியமும் கிடந்து, உயிரைக் கொடுத்து, உடலைக் கொடுத்து, உள்ளத்தைக் கொடுத்து ஆளாக்கினால் இன்று நீ 'அவள் இருப்பதனால் எனக்குச் சிரமமாக இருக்கிறது; அவன் என்னுடையவன்' என்கிறாயே, இது உனக்கு அடுக்குமா?"—என்று பத்மா கத்த நினைத்தாள்.

அதற்குள் கனவு கலைந்தது. பத்மா கண் விழித்தாள். அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவளுக்கு எதிரில் அவளுடைய மாமியாரும் கணவரும் நின்று கொண்டிருந்தார்கள். மாமியார் கண்களில் கண்ணீர் பொங்கக் குழந்தையைத் தூக்கிச் சீராட்டிக் கொண்டிருந்தாள்.

பத்மா மாமியாரின் கால்களில் விழுந்து "உங்களை 'ஊருக்குப் போங்கள்' என்று நான் சொன்னது தப்பு......என்னை மன்னித்து விடுங்கள். அவர் உங்களுடையவர் தான்!" என்றாள் உணர்ச்சி பொங்கும் குரலில்.

"பச்சை உடம்புக்காரி இப்படி எல்லாம் அவசரப்பட்டுக் கொண்டு எழுந்திருக்கலாமோ? பேசாமல் படுத்துக் கொள். பிள்ளை பிறந்து விட்டால் பெற்ற மனம் உனக்கும் வந்துவிடும் என்று எனக்குத் தெரியாதா? உன்மேல் எனக்கு என்ன கோபம்?" என்று கூறிய மாமியார் மாட்டுப் பெண்ணின் மனத்தில் உள்ள துயரச் சுமையை இறக்கினாள்.


"உபயோகித்துப் பாருங்கள்...
...லக்ஸ் டாய்லட் சோப் அதிக அழகைப் பெறச் செய்யும்."
என்று கூறுகிறார்
லலிதா
லலிதா கூறுவதாவது: "ஒரு அற்புதமான அழகு பராமரிப்பு இது. லக்ஸ் டாய்லட் சோப்பின் மென்மையான நுரையை உங்கள் சருமத்தின்மேல் நன்ருகத் தேய்த்து பிறகு கழுவவும். வழக்கமாக உபயோகித்தால் லக்ஸ் டாய்லட் சோப் உங்கள் சருமத்திற்கு மலர்ச்சியும் அழகும் தரும்."
லக்ஸ் டாய்லட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LUX
LUX TOILET SOAP
I.TS. 375-X30-TM

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

55. ஜானு சிர்ஷாசனமும், தாது பலமும்

ஜானு சிர்ஷாசனம், இதற்குச் சிர்ஷாசனம் என்று எப்படிப் பெயர் வந்ததென்று தெரியவில்லை. அது எப்படி யிருப்பினும் சிரசாசனத்தின் பலனில் பாதிக்கு மேல் இதில் இருக்கிறது என்று சொல்லலாம். அதனாலேயே இந்த ஆசனத்துக்கு இப்பெயர் வந்திருக்கலாம்.

ஒரு பெரியவர், வயது அறுபத்தைந்துக்கு மேல் இருக்கும். அவருக்குப் பல வியாதிகள் இருந்து ஆரோக்கிய ரகசியக் கட்டுரைகள் படித்து ஆசனங்களைச் செய்து போக்கிக் கொண்டாராம். அவர் நேரில் வந்து அவருடைய சந்தோஷத்தைத் தெரிவித்து, அவர் செய்யும் ஆசனங்களை யெல்லாம் செய்து காட்டினார். எல்லா ஆசனங்களையும் வெகு கச்சிதமாய்ச் செய்தார். அவ்வளவு வயதில் இவ்வளவு ஒழுங்காகச் செய்வது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அவ்வளவுக்கும் அவர் ஆசனங்களை ஆரம்பித்து ஒரு வருடம்தான் ஆகியிருந்தது. அவர் வரிசைக் கிரமமாய்ச் செய்து வரும்போது சிரசாசனம் செய்யும் கட்டம் வந்தது. அவர் தலைக்கு விரிப்பை மடித்துப் போட்டுக் கொண்டார். கைகளை ஊன்றிக் கோத்துக் கொண்டு தலையையும் மடிப்பில் வைத்தார். உடலை நெட்டக் குத்தலாய்க் கொண்டு வந்தார். அதாவது சிரசாசனம் செய்வதற்கு தரையிலிருந்து கால்களை உதைத்துக் கொண்டு மேல் கிளம்புகின்றோமே அதுவரை செய்தார். பின்பு காலை உதைத்து மேல் கிளம்பவில்லை. அவ்வாறே ஐந்து நிமிஷம் இருந்து விட்டு எழுந்து விட்டார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவரைக் கேள்விக் குறியுடன் பார்த்தேன். அவர் "நான் இந்த அளவுதான் சிரசாசனம் செய்கின்றேன். காலைத் தூக்கி நிறுத்த என்றால் முடியவில்லை. அப்படி நிறுத்தினால் எனக்கு என்னமோ மாதிரி யிருக்கிறது. சிரசிற்கு ரத்தம் மட்டும்தானே போக வேண்டும்! அதற்கு இப்படி நின்றாலும் போகத்தானே செய்யும்! இருதயம் இதில் மேல் பக்கம் இருக்கிறது; தலை கீழே யிருக்கிறது. அப்படியானால் அதிகம் ரத்தம் இருதயத்திலிருந்து பூமியின் ஆகர்ஷண சக்தியினால் தலைக்கு இழுக்குமல்லவா! அதனால் நான் அப்படிச் செய்கிறேன்" என்றார். எனக்கும் வாஸ்தவம்தானே என்று பட்டது. சரியாகச் செய்யும் சிரசாசனத்தில் செல்லுவதை விட சற்று குறைவாய்த்தான் இம்மாதிரி செய்வதில் இரத்தம் மூளைக்குச் செல்லும். என்றாலும், சிரசாசனம் செய்ய முடியாதவர்களுக்குக் கிடைத்தமட்டும் லாபம் தானே! எனவே இந்த மார்க்கமும் பரவாயில்லை என்றே எனக்குப் பட்டது.

இதன் பிறகு சிரசாசனம் செய்ய முடியாத மிக பலஹீனமான நிலையிலுள்ளவர்களுக்கு நான் ஒரு குறுக்கு யோசனை பண்ணினேன். அதாவது விபரீத கரணி செய்விப்பது போல நாலு ஐந்து தலையணைகளை ஒரு கயிற்றால் கட்டி அதன்மேல் மூளைப் பக்கம் உட்கார்ந்து அப்படியே பின்னால் தலையை கீழே வைப்பது. ஆனால் விபரீதகரணி செய்வதைப் போலக் கழுத்தும், புறமும் கீழே படாமல் சிரசை மட்டும் தரையில் படச் சற்றுச் சாய்வாகக் கால்களைத் தூக்கி நிற்க வைப்பது; இப்படிச் செய்வித்தேன். இதிலும் சிரசாசனத்தின் பலன் அநேகமாய் இருக்கும். இப்படிச் சில நாள், சில மாதங்கள் செய்து அதன் பின் சிரசாசனம் செய்விக்கிறேன்.

இவ்வளவும் எதனால் இங்கு எடுத்துச் சொல்லப்படுகின்றதென்றால் சாதாரணமாய்த் தலையைக் கீழே கொண்டு சென்று குனிந்தாலே சிரசுக்கு இரத்தம் போகிறது என்று தெரிகின்றது. அந்த முறைப்படி இந்த ஜானு சிர்ஷாசனத்திலும் செல்லுகின்றது. அதனால் அந்தப் பெயர் இந்த ஆசனத்துக்கு இட்டிருக்கலாம். இன்றும் ஏதாவது நல்ல காரணங்களுடனும் இதற்கு மேற்படி பெயர் சூட்டியிருக்கலாம். கால மாறுதலில் எத்தனையோ உயர்ந்த பொருள்களும் அதன் அருமையும் தெரியாமல் மறைந்து போனது போல் இந்த ஆசனத்துக்குப் பெயர் வைத்த சரியான காரணமும் மறைந்து போயிருக்கலாம்.

இது தவிர, இம்மாதிரி குனியும்போது முதுகந்தண்டின் வழியாக வரும் நரம்புக் கூட்டங்களெல்லாம் இழுக்கப்பட்டு, நன்றாய் மாலிஷ் கொடுத்த மாதிரி உற்சாகம் கொள்ளுகிறது. முதுகு எலும்புகளைப் பற்றியும் அதன் வழியே பிரிந்து செல்லும் நரம்புகளைப் பற்றியும் முன் பல இடங்களில் விவரித்துள்ளோம். இந்தப் பயிற்சி ஒவ்வொரு பக்கமாகச் செய்வதால் அதற்கு விசேஷ பலன் உண்டு. அதிலும் முக்கியமாகக் கால்களுக்குப் பிரிந்து செல்லும் நரம்புகளுக்குப் பிரத்தியேகப் பயிற்சி ஏற்படுகிறது. அதனால் சந்து வாதம், முடக்குவாதம், பக்கவாதம், கணுக்கால் வலி, காலில் பாதங்களில், முட்டுகளில் நீர் தங்கல், ஆகிய இம்மாதிரி நோய்கள் எல்லாம் வராது. வந்தவர்கள் செய்தால் குணமுண்டாகும்.

மற்றும் இந்த ஆசனம் ஒவ்வொரு பக்கமாகச் செய்யும்போது பெருங் குடல் கீழ் பாகங்கள் நன்கு நசுக்கப்படுகின்றது. அதனால் அவ்விடங்களில் மலங்கட்டவோ, மலச்சிக்கல் ஏற்படவோ செய்யாது. மலச் சிக்கல் இருந்தாலும் விலகும் என்று சொல்வதெல்லாம் இந்தக் காரணத்தைக் கொண்டுதான். வலது பக்கம் செய்யும்போது அப்பெண்டிக்ஸ் குடலும் நசுங்குவதால் அப்பெண்டிக்ஸைடிஸ் அதாவது குடல் பிதுக்க நோய் வராது.

இவைகளைத் தவிர மிக முக்கியமான சில குணங்கள் இந்த ஆசனத்தில் அமைந்திருக்கின்றன என்று சொன்னேன் அல்லவா! அவைதான் தாது சம்பந்தமான கோளாறும் விலகும் என்பது.

சிலருக்குத் தாது பலமின்றி வெளியாகிக் கொண்டிருக்கும், இதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். "எல்லாம் அவரவர்களின் செய்கையே காரணம்" என்று சுருக்கமாகச் சொல்லலாம். ஆனால் இம்மாதிரி அறியாமல் படுகுழியில் விழுகிறவர்கள் சில நாட்களில், சில வருடங்களில், அவர்கள் அறியாமைக்கு மிக்க வருந்துகின்றனர். நரம்புத் தளர்ச்சி, பலஹீனம், மார்பு வலி, மயக்கம், இருதயப் படபடப்பு, சோர்வு, சிந்தனைசக்தி குறைதல், கண் எரிச்சல், பசியில்லாமை, அஜீரணம் முதலிய பல கெடுதிகள் உண்டான பின்தான் வாலிபர்கள் விழிப்படைகின்றனர். பிறகுதான் தன் அறியா

மைக்கு வருத்தி அவைகளைப் போக்குவதற்கு வழிகளைத் தேடுகின்றனர்.

இம்மாதிரி தாது பலம் இழந்தவர்களுக்கு க்ஷயம், காசம், பெரு வியாதி, கிரந்தி, வெட்டை, மேகம், படை முதலிய கொடிய நோய்கள் வெகு சுலபமாய்த் தோன்றி விடும். காளைப் பருவத்தைக் கருத்தாய்க் காப்பாற்றாமல் கண்டபடி திரிந்தவர்களுக்கு என்னதான் வராது! என்ன வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சிலருக்குத் தன்னை யறியாமல் தூக்கத்தில் தாது வெளியாகும். சிறுநீர் விடும்போது வெளிப்படும். வெளிக்குப் போக முக்கினாலும் வெளி வரும். தாதுப் பையும் அதைச் சேர்ந்த நரம்பு வழிகளும் சீர்கேடுற்றவர்களுக்கு இம்மாதிரி உண்டாகும். சிலருக்கு இரத்தத் துளிகளும் கலந்து வரும். இது வியாதி ரொம்பவும் முற்றிவிட்டதற் கடையாளம்.

இம்மாதிரியானவர்களுக் கெல்லாம் இந்த யோக ஆசனங்கள்தான் விமோசனம் அளிக்க வல்லது. சலபாசனம், பஸ்சிமோத்தானு, ஹலாசனம், சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சிரசாசனம், அஸ்வினி முத்ரா, அர்த்த மத்ஸ்யேந்திராசனம், உட்டியாணு, நௌளி முதலியவைகளெல்லாம் இம்மாதிரி நோய்களுக்கு எடுத்தது என்றாலும், இந்த ஜானு சிர்ஷாஸனத்தில் இதற்கும் பிரத்தியேகமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அப்பயிற்சி குதிக்காலை அடி வயிற்றிற்கும் மர்மஸ்தானத்திற்கும் மேல் அழுத்தி வைத்து, அதன் பிறகு இன்னும் குனிந்து ஜானுசிர்ஷாசனம் செய்யும்போது கிடைக்கிறது. இந்தக் குதிக்காலை வைத்து அழுத்தும் இடத்தில்தான் தாது நரம்புகளும், நீர்ப் பையும் இருக்கு மிடமாகும். இம்மாதிரி வைத்து அழுத்தும்போது அந்த இடம் உறுத்தப்பட்டு விழிப்படைகிறது. பிறகு புதிய ரத்தம் அங்கு அதிகமாய் வருகிறது. அதனால் அந்த நரம்பு வழிகளெல்லாம் பலப்பட்டு, உள்ள குறைகள் மறைந்து புத்துயிர் அடைகின்றன. இம்மாதிரி பல தடவைகள் வீதம் சில மாதங்கள் செய்து வந்தால் உடலில் ஒரு புத்துணர்ச்சி, புது உற்சாகம், தெம்பு முதலியவைகளெல்லாம் தோன்றும். நரம்புத் தளர்ச்சி, பலஹீனம், அஜீரணம் மயக்கம், நடுக்கம், முதல் என்னென்ன இதற்கு முன் இருந்தனவோ அவைகளனைத்தையும் காலடையில் மறைந்துப் புது மனிதனுக்கிவிடும்.

வாதங்களுக்கெல்லாம் நரம்புக் கோளாறே காரணமாகும். இந்த ஜானுசிர்ஷாசனத்தில் நரம்புகளுக்கு நல்ல பயிற்சி கிடைப்பதாலும், குனியும் போது நன்கு மூச்சை இழுத்துவிட்டுக் கொண்டே குனிவதாலும், ரத்தத்தில் பிராணவாயுப் பிரயோகம் பூரணமாய்க் கிடைக்கிறது. அவ்வாறு கிடைத்த பிராண வாயுவுடன் ரத்தமானது இந்த ஜானுசிர்ஷாசனத்தில் எல்லாப் பாகங்களுக்கும் ஊடுருவிப் போவதால் வாத சம்பந்தமான நோய்களும் விலக ஏதுவாகிறது.

மற்றும் வயிற்று சம்பந்தமான கோளாறுகள் என்ன இருந்தாலும் இந்த ஜானு சிர்ஷாசனம் செய்பவர்களுக்கு விலகிவிடும். வழக்கமாய்ச் செய்கிறவர்களுக்கு வயிற்றுக் கோளாறுகள் எதுவும் வராது. வயிற்றிலுள்ள எல்லா உறுப்புகளும் நசுங்குவதால் எல்லாமே அதனதன் காரியங்களைச் செவ்வனே செய்யும்.

இந்த ஆசனத்தைச் செய்து பார்த்து அனுபவித்தவர்களுக்குத்தான் இதன் சுகம் தெரியும். உடலில் ஒருவித இன்பப் பெருக்கும், நடையில் ஒரு வேகமும் சொல்லில் ஒரு இனிமையும் மனதில் ஒரு தெளிவும் வாழ்க்கையில் ஒருவித களிப்பும் நிறைந்து பொங்குவதை அறிவார்கள். (தொடரும்)

அழாதே, அம்மா !






பைல் பீன்ஸ்

உங்களுக்கு

ஆனந்தத்தை மீண்டும் அளிக்கும்

டாக்டர்கள் அங்கீகரித்துள்ள பைல் பீன்ஸ் என்னும் டானிக் மாத்திரை மருந்து உடலின் வேலைவையாகவும், துன்பமாகவும், அருவருப்பாகவும், கஷ்டமாகவும் இருக்கச்செய்கின்றது. பைல் பீன்ஸ் உங்களை விரைவில் நிரந்தரத்திலோ எப்போதும் தென்படச்செய்யும். பைல் பீன்ஸ் வைசிக்கிய அகற்றுகிறது. சர்வ கோளாறு, சிர அயர்வு, மற்றும் உங்கள் சந்தோஷத்தைக் கெடுக்கும் பல பிணிகளைப்போக்குகின்றது. டாக்டர்கள் அங்கீகரித்துள்ள பைல் பீன்ஸை இன்றே உட்கொள்ளத் தொடங்குங்கள்.



டாக்டர்கள் அங்கீகாரம் பெற்ற பைல் பீன்ஸை உட்கொண்டு வாழ்க்கை இன்பத்தைப் பரிபூரணமாய்ப் பெறுங்கள்

பைல் பீன்ஸ்

எல்லா மருந்து வியாபாரி களிடமும் கிடைக்கும்.

மதராஸிற்கு சோல் ஏஜண்டுகள்: தாதா & கோ., பார்க்டவுன்

நூற்றாண்டு அநுபவத்தில் தேர்ந்தெடுத்த உயர் ரக புகையிலை தயாரிப்பு!



உலக மார்க்

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி

ORIGINAL

SHUNMUGAM SNUFF (ESTD. 1839) CO.

P. B. No. 140................MADRAS-1

PANDYAN INSURANCE COMPANY

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம்: 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது

நெருப்பு கப்பல் மோட்டார்

விடுதலை கிடைத்தது!

கடகம்

பொன்னுரங்கம் அன்று தம் காரியாலய மானேஜரைக் கூப்பிட்டார். "மானேஜர்! நீங்கள் உங்கள் சொந்தக் காரியத்துக்கு நம் காரியாலய குமாஸ்தாவை உபயோகப்படுத்தியதைப் பார்த்தேன். அது என் மனத்துக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்து விட்டது. அந்த குமாஸ்தா முகம் கோணாமல் அந்தக் காரியத்தைச் செய்தாலும் அவர் உள் மனசு படும் வேதனையை உங்களால் உணர முடியாது. ஆகையால் தயவு செய்து வீட்டு வேலைகளுக்கு நம் காரியாலயச் சிப்பந்திகளை உபயோகப் படுத்தாதீர்கள். ஆபத்துக்குப் பாதகமில்லையே ஒழிய, அதையே செய்யும்படி சொல்லக் கூடாது. அவ்வளவுதான். அதற்காகத்தான் உங்களைக் கூப்பிட்டேன். நீங்கள் போகலாம்" என்றார்.

மானேஜர் கருங்கிய முகத்துடன் தம்முடைய அறைக்குப் போய் விட்டார். பொன்னுரங்கம் தம்முடைய பழைய கால வாழ்க்கையை ஒரு தரம் நினைத்துப் பார்த்தார்.

• • •

குசேலா பாங்கு ஊருக்கு ஒரு பாங்காய், செல்வாக்கு மிக்கதாய் விளங்கிக் கொண்டிருந்தது. அதில் மானேஜரைத் தவிர, வேலை பார்த்து வந்த முப்பத்துமூன்று குமாஸ்தாக்களில் பொன்னுரங்கமும் ஒருவன். அவன் அங்கு வந்து சேர்ந்து மூன்றே ஆண்டுகள்தான் ஆகியிருந்தன.

பொன்னுரங்கம் படித்து, பட்டம் பெற்றுத் தன் பெயருக்குப் பின்னால் இரண்டு எழுத்துக்களின் பெருமை உடையவனாகத்தான் இருந்தான். ஆனாலும் அவன் வேலைக்கென்று அலையாத இடம் பாக்கி யில்லை. ஏறி இறங்காத காரியாலயங்களும் இல்லை. அவன் நம்பிக்கையை இழந்து, அலுத்துச் சலித்து வீட்டில் உட்கார்ந்து விடலாம் என்று மனதிடம் பெற்றபோதுதான், குசேலா பாங்கியில் ஒரு வேலை காலி யிருக்கிறது என்பது அவனுக்குத் தெரிந்தது.

அவன் விண்ணப்பித்துக் கொண்டான். வேலை கிடைத்தது. பாங்கில் தபால் குமாஸ்தா உத்தியோகம்தான் அவனுக்குக் கொடுத்தார்கள். அவனுக்கு அனுபவம் இல்லையாம். அவன் படிப்பு அப்போதைக்கு இதற்குத்தான் பயன் பட்டது. அவனும் திருப்தியோடு அந்த வேலையை ஏற்றுக் கொண்டான்.

மூன்று ஆண்டுகள் ஆகியும் அவன் இன்னும் தபால் குமாஸ்தாதான். அவன் வேறு பிரிவுக்கு மாறிப் போக வேண்டுமென்றால், அந்தப் பிரிவில் வேலை செய்யும் ஒருவர் பென்ஷனில் ஓய்வு எடுத்துக் கொண்டு போனால்தான் வழி பிறக்கும்.

பொன்னுரங்கம் கடமை தவறாதவன். காரியாலயத்துக்கு எல்லாருக்கும் முன் போய், வீடு திரும்பும்போது அனைவருக்கும் பின்னால் வந்து கொண்டிருந்தான். சூதுவாது அறியாத சாது அவன். தன்னிடம் குறை கண்டாலும், பிறரிடம் குறை காணமாட்டான். வாழ முயன்ற அப்பாவி.

ஒவ்வொரு முதல் தேதியும் நூறு ரூபாய் சம்பளம் பெற்றான். உழைப்புக்கோ, படிப்புக்கோ ஏற்ற ஊதியம் என்று அதைச் சொல்ல முடியாது. அதை விட்டாலும் அவனுக்கு வேறு கதியில்லை. அதை நம்பித்தான் அவன் குடும்பத்தின் ஆசாபாசங்களிருந்தன. தள்ளாத வயதில் தாய், இரு குழந்தைகள், சமயா சமயம் அறியாது வரும் விருந்தினர்கள், மற்ற மற்ற வாழ்க்கையின் அத்தியாவசியமான தேவைகள் எல்லாவற்றிற்கும் அந்தப் பணம் போதா விட்டாலும், வேண்டியிருந்தது. ஆகவே கிடைத்த வேலையை விட மனமின்றி, அவன் உழைத்துக் கொண்டிருந்தான்.

அவன் தனக்கு முதுகெலும்பு இருப்பதை நன்றாய் உணர்ந்துதானிருந்தான். இருந்தாலும் இழுத்த இழுப்புக்கு வளைந்து கொடுத்துக் கொண்டிருந்தான். காரியாலயத்தில் எந்தக் கடினமான வேலைக்கும் அவன் சளைக்கமாட்டான். கூட வேலை செய்த மற்ற நண்பர்கள், தங்கள் தங்கள் வேலையை அவனிடம் கொடுத்து முடித்துக் கொண்டு விடுவார்கள். அதையும் தனக்குக் கிடைக்கும் ஊதியத்திற்கான ஊழியமாகவே அவன் கருதி வந்தான்.

அவனிடத்தில் மற்றவர்கள் அனுதாபப்பட்டார்களோ, இல்லையோ, அன்பு செலுத்தினார்கள்.

மானேஜரும் "பொன்னுரங்கம், பொன்னுரங்கம்" என்று அடிக்கடி கூப்பிட்டு, அன்பாகப் பேசி, ஏதாவது ஒரு வேலையைப் பணித்துக் கொண்டே யிருப்பார். அவன் முகம் கோண மாட்டான். அவன் உடல் தளர்ந்தாலும், உள்ளம் தளராமல், காரியாலய வேலைகள் எதையும் செய்ய அவன் என்றும் பின் வாங்கியதில்லை.

அப்பொழுதுதான் பாங்கி மானேஜரை வேறு ஊருக்கு மாற்றியிருந்தார்கள். புது மானேஜரும் வந்து சேர்ந்தார். "புதியவர் எப்படி யிருப்பாரோ! என்ன சொல்லுவாரோ!" என்று பொன்னுரங்கம் ரொம்பவும் பயந்து கொண்டிருந்தான். அவன் சுபாவமே அப்படி.

அன்று எல்லாரும் வீட்டுக்குத் திரும்பிவிட்டார்கள், பொன்னுரங்கத்தைத் தவிர. புது மானேஜரும் இன்னும் வீட்டுக்குக் கிளம்பவில்லை. மணி ஏழாயிற்று. தெருவில் விளக்கு ஏற்றி விட்டார்கள். பொன்னுரங்கம் வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது மானேஜர் அவனைக் கூப்பிட்டார். அவர் முன் போய் மிகுந்த மரியாதையுடன் அவன் நின்றான்.

"இன்றைக்கு ஒரு கயிறும், ஒரு வீசை தக்காளிப் பழமும் வாங்கி, அப்படியே என் வீட்டில் கொண்டு போய்க் கொடுத்து விடுங்கள்" என்று அவனிடம் ஒரு ஐந்து ரூபாய் நோட்டை நீட்டி விட்டு, கிளம்பிவிட்டார் அவர்.

"மானேஜர் ஊருக்குப் புதிசு. வந்து இரண்டு மூன்று நாட்கள்தாம் ஆகின்றன. முதல் தடவையாக இடும் வேலை. தட்டக் கூடாது" என்று பொன்னுரங்கம் ஒத்துக் கொண்டான். இருந்தாலும் இத்தகைய வேலையை இதுவரை அவன் செய்தறியான். ஏன், அவன் தன் வீட்டிற்கென்று இம்மாதிரியான தட்டு முட்டு வேலையைச் செய்தும் அறியான். அன்று காலையில், அவன் காரியாலயத்துக்குக் கிளம்பிய போது "கடைத் தெரு வழியாகத்தானே வருகிறாய்! இரண்டு சேர் தக்காளிப் பழம் வாங்கி வாடாப்பா!" என்று அவன் அன்னை சொன்னாள். "உனக்கு வேலை யில்லை போ! என்றால் வாங்கிவர முடியாது. இந்த வேலை ஒன்றுதான் பாக்கி!" என்று அவளைக் கடிந்து கொண்டு அவன் வந்திருந்தான்.

ஆம், பொன்னுரங்கம் சின்னஞ் சிறு வயதிலிருந்து, பெற்றோர்களுக்குச் செல்லப் பிள்ளை. எந்தச் சிறு வேலையையும் அவர்களுக்கென்று அவன் செய்திருக்க மாட்டான். என்ன முடி முழுகிப் போகிற — தலைபோகிற காரியமாயிருந்தாலும், புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்கமாட்டான். கல்யாணம் பண்ணி, மனைவி மக்கள் ஏற்பட்ட பிறகுகூட, "சம்பாதிக்கிற வேலை ஒன்று இருந்தால் போதும். மீதி வேலையை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிக் காலத்தைக் கடத்திக் கொண்டு வந்திருந்த பொன்னுரங்கத்தைப் பார்த்துத்தான் மானேஜர் இந்த வேலையை இட்டிருந்தார். அப்பொழுதுதான் அவன் உள்ளத்தில் கொஞ்சம் கசப்பு ஏறிற்று. தயக்கம் சிறிது ஏற்பட்டது. மானேஜரின் சொந்த வீட்டு வேலை அது. அவன் அதைச் செய்ய வேண்டும்! பாங்கிற்குத்தான் அவன் ஊழியனே ஒழிய மானேஜர் வீட்டுக்கு அல்ல.

பொன்னுரங்கம் கயிறு வாங்கிக் கொண்டான். அடுத்தபடியாகத் தக்காளிப் பழம் வாங்குவதற்காகப் பழக்கடைக்கு அவன் போனான்.

பழக்கடை வியாபாரி கடலைமுத்து பெட்டியடியில் உட்கார்ந்திருந்தான். "வாருங்கள், வாருங்கள்!" என்று அவனை வரவேற்றான். "என்ன நீங்கள் இந்தப் பக்கம் வரமாட்டேன் என்கிறீர்கள். பார்த்து ரொம்ப நாளாச்சு. நானும்தான் உங்களோடு படித்தேன். என் விதி கடையில் உட்கார்ந்திருக்கிறேன். உங்களைப் போல படித்திருந்தால், உத்தியோகத்துக்குப் போயிருக்கலாம்" என்றான் கடலை முத்து.

கடலைமுத்து, பொன்னுரங்கத்தோடு நான்காம் வகுப்பு வரையில் படித்தவன். அதன் பிறகு எங்கெங்கோ சுற்றி யலைந்து விட்டு, தெருவில் தலைமேல் பழம் சுமந்து விற்றுக் கொண்டிருந்தான். அப்பொழுதெல்லாம் பொன்னுரங்கம் அவனைப் பார்த்தும், பார்க்காதது போல் போயிருக்கிறான். பிறகு சிறிய கடை, பெரிய பழக்கடை, நல்ல வியாபாரம். அதன் பலன் மாடி வீடு, ஒரு வேலி நிலம் அடிமையில்லாத சுதந்திரமான வாழ்க்கை. இவ்வளவு தூரம் கடலைமுத்து தன் சொந்த உழைப்பினால், வேலைக்கு மனு போடாமல் தன் வாழ்வை உயர்த்திக் கொண்டிருந்தான்.

ஆனால் பொன்னுரங்கமோ, அதிர்ஷ்டத்தை நம்பி எத்தனை, எத்தனையோ விதமான பெரிய பெரிய பதவிகளையெல்லாம் கனவு கண்டு, கண்களில் குழி விழப் படித்து, அதற்கடையாளமாக ஒரு கண்ணாடியை முகத்தில் அலங்கரித்துக் கொண்டு, ஒரு பாங்கி குமாஸ்தாவாய், வாங்கும் நூறு ரூபாய்க்கு, பாங்கி வேலையோடு மானேஜர் வீட்டு வேலையையும் சேர்த்துச் செய்ய அவன் முன்னே நின்று கொண்டிருந்தான்.

கடலைமுத்து அவனைப் போல அடிமை உத்தியோகம் செய்யவில்லை. மானமாக, கௌரவமாக இருக்கிறான். கைகட்டி நிற்க வேண்டிய அவசியம் அவனுக்கில்லை. உருட்டல், மிரட்டலுக்கும் அவன் பயப்பட வேண்டியதில்லை. அவன் பிறரிடம் வேலை வாங்கக்கூடிய ஒரு முதலாளி. ஆனால் அந்த மானேஜரைப்போல் அதிகாரம் செய்து வேலை வாங்கும் ஆசாமி அவனில்லை. உழைப்பால் உயர்ந்த அவனுக்குப் பிறர் கஷ்டம் தெரிந்திருந்தது. அவனைப் போன்ற மனம் குசேலா பாங்க் மானேஜருக்கு மட்டும் இருந்திருந்தால் பொன்னுரங்கம் தக்காளிப் பழம் வாங்க அங்கே எங்கே வந்திருக்கப் போகிறான்!

"என்ன, கடலைமுத்து! வியாபாரம் எல்லாம் எப்படியிருக்கு!" என்றான் பொன்னுரங்கம்.

"அவ்வளவு சுவாரஸ்யமாகச் சொல்ல முடியாதுங்க. முதல் தேதி சம்பளத்துக்கு இது ஈடாகுமா!" என்றான் கடலைமுத்து.

"இக்கரைக்கு அக்கரைப் பச்சை! அவ்வளவுதான் என்னால் சொல்ல முடிகிறது" என்றான் பொன்னுரங்கம் அலுத்துக் கொண்டே.





“உங்கள் வீட்டில் எலி உபத்திரவம் அதிகமோ? அது போட்ட சத்தத்தில் என்னால் ராத்திரி முழுவதும் தூங்க முடியவில்லை!”
“அது எலி இல்லை, ஐயா! நீர் குறட்டை விட்ட சத்தந்தான் எல்லோரையும் தூங்க விடாமல் அடித்தது!”

பழத்தை வாங்கிக்கொண்டான் அவன். கடலை மூத்து விலை கயமாகவே கொடுத்தான், பள்ளித் தோழன் என்று. அதை அவன் தன் வீட்டுக்கு என்று வாங்கி யிருந்தாலும், அவனுடைய செல்வ நிலைமையில் கொஞ்சம் உதவியாக இருந்திருக்கும்.

மானேஜரிடம் அவைகளை வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்தான் அவன். அவன் வீட்டுக்குக் கிளம்புவதற்கு முன், அவர் “நாளைக்கு ஊரி லிருந்து, ரயிலில் சாமான்கள் வருகின்றன. கொஞ்சம் வண்டி வைத்துக்கொண்டு வந்து போட்டு விட்டுப் போங்கள்” என்றார் அவர். “சரி” என்று ஒப்புக்கொண்டு வந்தான். அதையும் மறுநாளே சிரத்தையுடன் செய்து முடித்தான்.

இன்னொரு நாள் சாயந்திரம், மானேஜர் அவனிடம் கடைச் சாமான்களுக்கு ஒரு பட்டியலும், இருபது ரூபாய் பணமும் கொடுத்தார். “இந்த வேலை யெல்லாம் செய்ய நான் ஆளில்லை. உங்கள் வேலைக்காரனா நான்! முடியாது” என்று அவரிடம் வீசி எறிந்து விடலாமா என்று கூட அவன் பார்த்தான். ஆனால் ஏதோ ஒரு குணம், அப்படிச் செய்ய முடியாமல் அவனைத் தடுத்து விட்டது. அந்த வேலையையும் செய்து முடித்தான்.

புது மானேஜர் வந்த இந்த ஒரு மாத காலத்தில், எத்தனையோ விதமான காரியங்களை, அவர் வீட்டுக்கு என்று அவன் செய்திருந்தான். இவைகளை யெல்லாம், தன்னுடைய வீட்டிற்கென்று அவன் செய்திருந்தால், அவன் அன்னையும் அவன் மனைவியும், அவனுக்குள்ள குடித்தனப் பொறுப்பைக் கண்டு, உச்சி குளிர்ந்து போயிருப்பார்கள்; மகிழ்ச்சியினால் நினைந்துப் போயிருப்பார்கள்.

அவன் நல்ல மனசு முதலில் கொஞ்சம் தயவு காட்டப் போக, மானேஜர் அவனையே கையாளாக வைத்துக்கொண்டு விடுவார் போலிருந்தது. அவ்வளவு தூரம் அவன் வளைந்து கொடுத்துக் கொண்டு வந்து விட்டான். அவர் பணிக்கும் சிறு சிறு வேலைகளையும் மறுத்துவிடும் சக்தியை நாளடைவில் இழந்துவிட்டான். ஆனாலும் ஏதோ ஒன்று அவன் மனசை உறுத்திக்கொண்டிருந்தது.

அந்த மானேஜராவது, கொஞ்சம் சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். உள்ளே அவன் வெந்து சாம்பராகிக் கொண்டிருக்கானே அதை அந்த மனிதர், அறிந்து கொண்டிருக்கக் கூடாதா! பொன்னுரங்கத்தின் உள்ளே யிருக்கும் மனிதத் தன்மையை அதன் தன்மான உணர்ச்சியை அறிந்து கொண்டிருக்கலாமே! ஏன் அவரால் அது முடியவில்லை! அவருக்கு “நல்ல ஆள் ஒருவன் கிடைத்து விட்டான்” என்று மகிழ்ச்சிதான் மிஞ்சி யிருக்கும். மற்றது எது அவருக்குத் தெரியப் போகிறது! மானேஜரின் விருப்பத்துக்கு மாறாக, அவரைப் பகைத்துக் கொண்டு அங்கு வேலை பார்ப்பது மிகவும் கடினம் அல்லவா!

பொன்னுரங்கம் ஒரு நாள் ஒரு காரியம் செய்தான். எல்லாரையும் அது அதிசயத்தில் ஆழ்த்தி விட்டது. வீட்டிலோ வெளியிலோ, யாருடைய யோசனையையும், கேட்டுக் கொண்டு இந்தக் காரியத்தை அவன் செய்யவில்லை.

குமாஸ்தாக்கள் எல்லாருடைய முன்னிலையிலும் பொன்னுரங்கம் மானேஜரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். மானேஜர் படித்துப் பார்த்தார். அவர் முகம் சற்று மாறுதல் அடைந்தது. வியப்பால் விரிந்து சுருங்கியது.

“என்ன, பொன்னுரங்கம்! ஏன் வேலையை ராஜினாமா செய்கிறீர்கள்! வேறு எங்காவது வேலைக்குப் போகிறீர்களா!” என்று அவர் கொஞ்சம் உரக்கவே இதர சிப்பந்திகள் எல்லாரும் அறியும்படியாகக் கேட்டார்.

“இல்லை, ஸார்! சொந்தமாகவே ஒரு கடை முதலாளியாகலாம் என்று பார்க்கிறேன். இந்த வேலை எனக்கு அலுத்து விட்டது” என்றான் அவன், எவ்வித முக மாறுதலுமின்றி.

வெற்றிலைப் பாக்குக்கடை வைப்பதற்குக்கூட அவனிடம் காசில்லை. தன்மானத்துக்கு உலை வைக்கும் அவரிடமிருந்து தப்பித்துக் கொண்டால் போதுமென்றிருந்தது அவனுக்கு. எண்ணியதைக் காரியத்தில் கொண்டுவந்து விட்டான். இதை அவன் செய்வதில் தயக்கம் காட்டவில்லை. எண்ணத்தைச் சொல்லிக் காட்டும் இந்தத் தற்பெருமை அவனுக்கு என்றும் உண்டு. இந்தப் பெருமைதான் அவனை வாழச் செய்கிறது என்று கூடச் சொல்லலாம்.


“சரி, பொன்னுரங்கம்! உங்கள் ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளுகிறேன். உங்கள் இஷ்டத்தைத் தடை செய்ய நான் யார்!” என்றார் மானேஜர். ‘ஒரு நல்ல ஆள் போகிறானே’ என்று அவர் உள் மனம் முணு முணுத்தது.

“வணக்கம், சார்! எல்லாருக்கும் வணக்கம்! போய் வருகிறேன்!” என்று விடை பெற்றுக் கொண்டு, பொன்னுரங்கம் விடுதலை பெற்ற சிட்டுக் குருவியாய் வெளியே வந்தான். அவன் முன்னே உலகம் பரந்து விரிந்து கிடந்தது. அதில் எத்தனையோ பாதைகள். “தேவைக்கேற்ற துறை பிறக்கும். நடக்க நடக்க வழி தோன்றாமல் போகாது” என்று எண்ணியவனாய் அவன் வீட்டை நோக்கி விரைந்து நடந்தான்.

* * *

மறு நாளே அவன் ஒரு கறிகாய்க் கடை ஆரம்பித்தான். அது சற்று வளர்ந்து பழக்கடையாகியது. பிறகு கறிகாய்க் கடை, பழக்கடை, மளிகைக் கடை என்று விரிந்தது. ஐந்து ஆண்டுகளில் பொன்னுரங்கம் மிகப் பெரிய வியாபாரியாக மாறி விட்டான். இன்று பொன்னுரங்கத்தின் கீழ் எத்தனையோ குமாஸ்தாக்களும், தொழிலாளர்களும், வியாபாரத் தரகர்களும் இன்னும் பல சிப்பந்திகளும் வேலை செய்து வருகின்றனர்.

முயற்சி திருவினையாக்கும் என்று நம் முன்னோர்கள் சும்மாவா சொன்னார்கள்!



ஸ்பென்ஸர்ஸ்
ஸூதிங் ஸிரப்
குழந்தைகளை சிறப்பாக வைக்கிறது
SPENCER'S
SOOTHING SYRUP
AN INVALUABLE REMEDY FOR INFANT DISORDERS
DOSE
SPENCER & CO. LTD.
வாயுப் பொருமல், தேக அசௌகரியங்கள், அதிக அமிலச் சேர்கை முதலான காரணங்களால் ஏற்படும் வேதனைகளை மிக விரைவில் நிவர்த்திக்கிறது.
ஸ்பென்ஸர் & கோ., லிமிடெட்.,
மானுபாக்சரிங் கெமிஸ்டுகள்
1/153. மவுண்ட் ரோட், சென்னை-2 இந்தியா.



FZY-21-TAM
வெடிப்பும் நோயும் கொண்ட பாதத்திற்கு விரைவில் இதமளிக்கும்
வலியுள்ள பாதத்திற்கு ஜாம்-பெக் மூலிகை களிம்பைப் போடுங்கள். அதன் துரிதமான இதமளிக்கும் தன்மையை நீங்களே அறிந்து கொள்ளலாம். அழிவிருக்கும் நோய்க் கொல்லும் மருந்துக்கலப்புள்ள தைலங்கள், நோய், தன்னாமை ஆகியவற்றைப் போக்கி வெடிப்புக்களை ஆற்றி, வீக்கம் புண் ஆகிய வற்றைக் குணப்படுத்தும். ஜாம்-பெக்கின் ஊடுருவிப்பாய்ந்து வேலை செய்யும் குணம் எப்போதும் இதமளிப்பதாகும். இன்றே ஜாம்-பெக் வாங்குங்கள். சருமம் மண்டை நோய்களுக்கும், வெட்டுக்காயம், தெருப்புப்புண், கஞ்சிக் கொப்பளம், விஷப்புண்கள், ரணங்கள், சேற்றுப்புண், பூச்சிக் கடி, மூல உபத்திரவம் ஆகியவற்றிற்கும் ஜாம்-பெக் உலகப் பிரசித்தி பெற்ற நிவாரணியாகும்.
Zam-Buk
மிருகக் கொழுப்பற்றது என்பதற்கு உத்திரவாதம்
ஜாம்-பெக் உலகத்தின் தலைசிறந்த சரும ஆயின்ட்மெண்ட்
மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள் : தாதா & கம்பெனி, பார்க் டவுன்.

மலேரியா 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளைத் தீவிரமாகத் தாக்குகிறது

இவ்வாறுதான் மலேரியா நம் நாட்டிற்குக் கொடூரமான சேதத்தை நிரந்தரமாக விளைவித்துக் கொண்டிருக்கிறது.

குழந்தைகளின் வருங்கால ஆரோக்கியத்திற்கும் அறிவிற்கும் உறுதியான அஸ்திவாரம் அமைக்கப்படவேண்டிய இளம் பிராயத்தில் மலேரியா அவர்களுடைய ஆரோக்கியத்திற்கும் அறிவிற்கும் தீங்கிழைக்கிறது.

மலேரியாவிலிருந்து குழந்தைகளுக்கு வேண்டிய பாதுகாப்பை அளிக்காமலிருப்பது அவர்களுடைய வருங்கால க்ஷேமத்தையும், குடும்பத்தின் சுகத்தையும் தேசத்தின் நலனையும் புறக்கணிக்கும் பெரிய குற்றமாகும்:

உங்களுடைய குழந்தைகளை மலேரியாவிலிருந்து காப்பாற்ற அவர்களுக்கு 'பாலுட்ரின்' கொடுக்கும்படி வற்புறுத்துகிறோம்—நீங்களும் அப்பாதுகாப்பை அடையும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். 'பாலுட்ரினை' சிறு குழந்தைகளும் கர்ப்பவதியான ஸ்திரீகளும் யாதொரு தீங்குமின்றி ஒழுங்காக உட்கொள்ளலாம். அளவு முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அபாயத்தின் சின்னங்களைக் கவனியுங்கள்:

முதலில் குளிர் நடுக்கம் உண்டாகும். ஜுரம் ஆரம்பமாகும். இதனால் உடம்பு முழுவதும் வியர்க்கும். தேகம் முழுவதும் வலி உண்டாகும். இந்த அறிகுறிகளை ஒரு பொழுதும் அலட்சியம் செய்யாதீர்கள்—உடனேயே டாக்டரின் ஆலோசனையைக் கேளுங்கள். மலேரியா கண்டிருந்தால், 'பாலுட்ரின்' எப்படி உங்களுடைய ஜுரத்தை சில நாட்களில் நீக்குகிறது என்பதையும் எதிர்காலத்தில் மலேரியா உங்களை அணுகாமல் எப்படி பாதுகாப்பை அளிக்கிறது என்பதையும் அவர் சொல்லுவார்.

நம்பிக்கைக்குகந்த 'பாலுட்ரின்' மாத்திரைகள் சுத்தமான, தெளிவாகத் தெரியும் காகித உறைகளில் சுற்றப்பட்டு வருகின்றன. ஒரு மாத்திரை விலை ஒரே அணா தான்.




'பாலுட்ரின்'

மலேரியாவை வீழ்த்துகிறது

அளவுமுறை

சிகிச்சைக்கு: வயதானவர்களுக்கும் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஒரு மாத்திரை. 6லிருந்து 12 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு அரை மாத்திரை. 6 வயதிற்கு கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு கால் மாத்திரை வீதம் தினந்தோறும் ஜுரம் குணமடையும் வரை கொடுக்கவும்.

பாதுகாப்பிற்கு: மேலே குறிக்கப்பட்ட அளவுகளை அனுசரிக்கவும். ஆனால் வாரம் ஒருமுறை அதே தினத்தில் சாப்பிட வேண்டியது.



எப்பொழுதும் 'பாலுட்ரின்' சாப்பாட்டிற்குப் பிறகு அதிக அளவு தண்ணீருடனோ அல்லது பாலுடனோ உட்கொள்ள வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்.

ICP 77

கொட்டு மேளம்

பூவை

“எல்லாம் அதிசயக் கூத்தாகத்தான் இருக்கிறது. சின்னசாமித் தேவரும் மாரிமுத்துத் தேவரும் நகமும் சதையுமாக இருந்தவர்கள். அவர்களுக்குள்ளேயும் பிணக்கு வந்து விட்டது. சின்னசாமித் தேவரிடம் இருந்த செவலைக் காளையை மாரிமுத்துத் தேவர் விலை பேசித் தீர்த்து மதியத்துக்கு மாட்டையும் ஓட்டிக்கொண்டு போனாராம். அந்திக்கு வந்து நூறு ரூபாய் நோட்டை சின்னசாமித் தேவர் கையிலே நீட்டினாராம் மாரிமுத்துத் தேவர். ஆனால் அந்த நோட்டைத் தான் கையாலேகூடத் தீண்டவில்லை என்று முரண்டு பிடிக்கிறாராம் சின்னசாமித் தேவர். மாரிமுத்துத் தேவருக்குப் பையிலிருந்து நோட்டை எடுத்துச் சின்னசாமித் தேவரிடம் நீட்டியது நினைவு இருக்குதாம். இந்தச் சங்கதி வேடிக்கையாகத்தான் இருக்கிறது. இரண்டு கையும் நாணயத்திலே அரிச்சந்திரர்கள்தான்! என்னமோ சோதனையாட்டம் தவசல் விளைந்து போய் விட்டது. எப்படித்தான் நூறு ரூபாய் நோட்டு மாயமாய் மறைந்து போச்சோ! அடுத்த வெள்ளியன்று காளியாத்தா சந்நிதியிலே சீட்டுக் குலுக்கிப் போடப் போறாங்களாம். அம்மன் தீர்ப்புப்படித்தான் நடக்க வேணும்! மாரிமுத்துத் தேவர் சின்னசாமித் தேவரிடம் பணம் தந்தது மெய் என்று சீட்டு விழுந்தால் சின்னசாமித் தேவர் சும்மா இருந்துவிட வேண்டியது! இல்லை, மாரிமுத்துத் தேவர் பணம் கொடுக்கவில்லை என்று விழுந்தால் அப்பாலே சின்னசாமித் தேவருக்கு அவர் மறுபடியும் நூறு ரூபாய் ரொக்கம் கட்ட வேணும். ஆனால் ஒன்று...! சின்னசாமித் தேவர் மகள் பவளக் கொடியைச் சின்னசாமித் தேவர் மகன் சிவசாமிக்குப் பரிசம் போட்டுக் கல்யாணமும் வரும் ஆவணி மாதம் நடப்பதாக இருந்தது. ஆனால் சம்பந்திக்காரங்க இரண்டு தரப்பிலேயும் காளி ஆத்தா நல்ல வாக்குச் சொல்லி விவகாரத்தை முடித்து வைத்தால்தான் திரும்பவும் தேவர் இரண்டு பேரும் முன்போல் நட்போடு இருப்பார்கள். கொட்டு மேளம் கொட்டிக் கல்யாணமும் கைகூடி நடக்கும். காளி ஆத்தாளின் முடிவு எப்படி இருக்குமோ......”

பூவத்தகுடியில் அப்பொழுது அந்த ஒரு பேச்சைப் பற்றித்தான் ஆண் பெண் அடங்கலும் ‘கசமுச’வென்று கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். காட்டுத் தீயாக எப்படித்தான் அந்தச் செய்தி ஊரெங்கும் பரவி விட்டதோ!

* * *

மாம்பழக் கன்னத்தில் தாங்கிய கைகளுடனும், வேல் விழிகளில் தேங்கிய கண்ணீர் முத்துக்களுடனும் சோகப்பதுமையாகத் திண்ணையில் உட்கார்ந்திருந்தாள் பவளக்கொடி. அந்திசாயும் நேரத்தில் ‘மேல வளவு’க் கிணற்றில் தண்ணீர் இறைத்துத் திரும்புகையில் அவள் கேட்ட வார்த்தைகளை அவளால் நம்ப முடியவில்லை. அவள் உடல் நடுங்கியது.

“என் அப்பாவுக்கும் மாரிமுத்து மாமாவுக்கும் உள்ள நூறு ரூபாய்த் தகராறு ஒருவழியாத் தீர்ந்தால்தான் எனக்கும் என் மாமன் மகனுக்கும் கல்யாணம் நடக்கும். இல்லையானால்......நினைக்கக் கூட முடியவில்லையே. காளி ஆத்தா, இது என்ன சோதனை! அடுத்த வெள்ளியன்று கல்யாணத்துக்குத் தேதி வைக்க வேணுமென்று நினைத்திருந்தாங்களே. ஆத்தா, நீதான் ஒரு நல்ல முடிவு சொல்லவேணும். நீதான் என்னை என் சிவசாமி மச்சானிடம் ஒப்படைக்க வேணும். தாயே...!”

பவளக்கொடி வேண்டுதல் விடுத்தாள்; கண்ணீரைக் காணிக்கையாக்கிச் செலுத்தினாள் அம்மனுக்கு. நீர் திரையிட்ட விழி விரிப்பிலே ஒரு மன்மத உருவம் மின்னலெனத் தோன்றியது; நல்லவேளை அவ்வுருவம் மின்னலாக மறையவில்லை. அது சிவசாமியின் உருவம்; அவள் பவளக்கொடிக் குகந்த அர்ஜுனன்!

* * *

அந்த ஊரில் காளி அம்மன் திருவிழாவென்றால் அக்கம் பக்கத்து நாடு நகரங்களில் எல்லாம் ஏகப் பிரசித்தம். தேர் திருநாள் எல்லாம் அன்றைக்குத்தான். கரகம் எடுப்பதுண்டு; பொய்க்கால் குதிரை ஆட்டமும் நடக்கும். எல்லாவற்றையும் காட்டிலும் அன்று பட்டப்பகலில் நடக்கும் ‘வழுக்கல் மரம்’ விளையாட்டுப் போட்டிதான் கன ஜோராக இருக்கும். இதற்கென்றே வண்டி கட்டிக் கொண்டு மக்கள் வருவார்கள்.

அன்றும் அப்படிப்பட்ட வழுக்கல் மர விளையாட்டுப் பந்தயம்தான் நடந்தது. வானளாவி நின்றது பெரிய மரமொன்று. அதன் உச்சியில் தொங்கியது ஒரு சாயத்துண்டு முடிச்சு. அதில் தான் பத்து ரூபாய் சில்லறையிருந்தது. நட்டு வைத்த மரத்தின் மேனி முழுவதிலும் கத்தாழைச் சாறும் விளக்கெண்ணெயும் வழிந்தோடும். இத்தகைய வழுக்கலை யெல்லாம் மீறி, அவ்வப்போது பீச்சாங்குழலினால் வீசியெறியும் தண்ணீர்ப் பெருக்கையும் எதிர்த்து, உச்சி ஏறிச் சென்று பணத்தைக் கைப்பற்றுபவர்கள்தாம் விளையாட்டில் வெற்றி பெற்றவர்களாவார்கள். அப்படி ஜெயிப்பதென்பது அவ்வளவு லகுவல்லவே!

ஆங்காங்கு நின்ற வாலிபர்கள் வழுக்கல் மரத்தில் ஏற முயன்றார்கள்; ஆரம்பத்தில் தோற்றவர்கள்தாம் மிகுதி. ஒன்றிரண்டு பேர் பாதியைக் கடந்ததுதான் மிச்சம்; பிறகு மண்ணைக் கவ்வித் தன் நிலை அடைந்தவர்களும் உண்டு. தேர் புறப்பட நாழிகை நெருங்கிற்று. இந்தப் போட்டி முடிவு கண்டாலல்லவா புறப்படும்! அந்த மரம் பணமுடிச்சுடன் பெருமிதம் பூரிக்கத் தனிமரமாக நின்றபோதுதான் அந்த இளைஞன் ஓடோடி வந்தான். அவன் ஒருகணம் சுற்றும் முற்றும் பார்த்த பிறகு “இங்கே யாராவது எனக்கு ஒரு எலுமிச்சம் பழம் மட்டும் தருவீர்களா!” என்றான். அவன் பேச்சு முடிந்ததுதான் தாமதம், அவன் கையில் அழகிய எலுமிச்சம் பழத்தை வைத்துவிட்டு அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள் அந்த அழகுப் பெண் பாவை. வாங்கிய பழத்தை வாயில் போட்டு அடக்கிக் கொண்டான்; தலை முண்டாசை நன்கு இறுகப் பிணைத்தான். வழுக்கல் மரத்தில் ஏறித் தாவினான். அப்போது “மச்சான்! ஒரு சேதி. உச்சாணிக் கொம்பிலே இருக்கிற பணமுடிச்சு மட்டும் என் கைக்கு வந்துவிட வேணும். நினைவு வச்சுக்கிடுங்க...” என்றாள் அந்த அழகி. “ஆகட்டும், நான் வெற்றிபெற்று விடுவேன்; உனக்குத்தான் எல்லாப் பணமும்...” என்று முறுவல் கோலம் இழைபாயக் கூறியவாறே அவன் மரத்தில் படிப்படியாக ஏறிக்கொண்டே யிருந்தான். கடைசியில் வெற்றி அவன் பக்கம் சங்கநாதம்



சென்னை தபால் இலாகா சிப்பந்திகள் மே மாதம் மூன்றாம்தேதியன்று கோமதி சுவாமிநாதன் எழுதிய 'ரிடையர்டு மாமனார்', 'அம்மா பிள்ளை' என்ற இரு நாடகங்களையும் சிறப்பாக நடித்தனர். அந்த நாடகங்களில் பங்கெடுத்துக் கொண்டவர்களை மேலே படத்தில் காணலாம்.

இழைத்தது. அவள் கடைக்கண் நோக்கு ஒன்று மட்டும் போதுமே, அவன் பந்தயத்தில் வெற்றி பெற! அந்த வாலிபன்தான் சிவசாமி; அவள் பவளக் கொடி! அவன் அவளிடம் பந்தயத்தில் ஜெயித்த பணத்தைக் காணிக்கை ஆக்கின நிமிஷம் தொட்டு அவள் இதயத்தில் அவன்தான் ஆட்சி புரிந்து வந்தான்!

வேதனை மண்டிக் கிடந்த இதய உலைக்களத்தினின்றும் நினைவுச் சங்கிலிகள் அத்துடன் துண்டிக்கப்பெற்றன. பவளக்கொடி உணர்வைத் தன் வயப்படுத்தினாள். பீறிவரும் கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

இரவு அண்டியது; இருள் மண்டியது.

பவளக்கொடி விழி வழி வழிந்த கண்ணீரை விலக்கி விட்டவாறு, இதயம் செமித்த பெருமூச்சைப் பிரித்துக் கக்கிவிட்டவாறு எழுந்தாள்; நடந்தாள். அவள் மனம் சற்றுமுன் தன் தந்தையைப் பற்றியும் தன் மாமனைப் பற்றியும் கேள்விப்பட்ட பேச்சைச் சுற்றியே அலைபாய்ந்திருந்தது. இருதரப்புப் பெற்றவர்களிடையே நிலவிய தகராற்றின் விளைவு எந்த முடிவுக்குக் கொண்டு விடுமோ, அதன் பலனாகத் தன் மச்சானுக்கு நடக்க வேண்டிய கல்யாணம் எப்படி நடக்கப் போகிறதோ என்பதான பிரச்னைகள் பவளக்கொடியின் சிந்தையை அலைக்கழித்து விடலாயின. அவள் சிந்தை தடுமாறினாள். 'விர்'ரென்று வீட்டின் நடைக்குள் போனவள், வழியில் கிடந்த தன் தகப்பனின் மேல் சட்டையை எடுத்துக் கொடியில் போட்டாள். அந்தத் தருணம் சட்டையிலிருந்து ஓர் நூறு ரூபாய் நோட்டு விழுந்தது. அவள் அதைக் கைநீண்டிப் பற்றின நேரம் அவள் விரல்கள் நடுங்கின. மாலைப்பொழுது மயங்கி விட்ட போதில் கிணற்றடியில் நிகழ்ந்த சம்பாஷணையை வார்த்தைகளாக மறுபடியும் எண்ணினாள். "நூறு ரூபாய் நோட்டை சின்னசாமித் தேவர் கையிலே நீட்டினாராம் மாரிமுத்துத் தேவர். ஆனால் அந்த நோட்டைத் தான் கையாலே கூடத் தொடவில்லை என்று முரண்டு பிடிக்கிறாராம் சின்னசாமித் தேவர். மாரிமுத்துத் தேவருக்குப் பையிலே யிருந்து பச்சை நோட்டை எடுத்து சின்னசாமித் தேவரிடம் நீட்டியது நினைவிருக்குதாம்......!" என்ற வார்த்தைகள் பவளக்கொடியின் இதயத்தில் கனலை மூட்டின.

பேசாத சித்திரப் பாவையாக நின்றாள் பவளக்கொடி; சிந்தித்தாள். காலம் தேய்ந்தது. மறு கணம் அவள் நெஞ்சத்திலே ஏதோ ஓர் தீர்க்கமான நிர்மாணம் எல்லை காட்டி யிருக்க வேண்டும். அவள் முகம் சலனம் பெற்றும் சலனம் காட்டாமலிருந்தது. கையில் தத்தளித்த அந்த நூறு ரூபாய் நோட்டை 'விசுக்'கென்று மடித்து, தன் மடியில் திணித்து மறைத்து விட்டாள் பவளக்கொடி.

"என் அப்பா நூறு ரூபாயை மாமனிடமிருந்து வாங்கிக் கொண்டு 'இல்லை' என்று சொல்லுவார் என்று நான் கனவுகூடக் காண வில்லையே. இது என்ன அதிசயம்!" என்று எண்ணி வருந்தினாள்.

* * *

குடமும் கையுமாகக் கிணற்றை நெருங்கினாள் பவளக்கொடி. கயிற்றில் குடத்தைக் கட்டிக் கிணற்றில் விட்டாள். நீர் நிறைந்த குடம் மேலேறியது. அவள் குடத்தை இடுப்பில் வைத்துத் திரும்பிய சமயம்தான் அவள் தன் ஆசை மச்சான் சிவசாமியைக் கூப்பிடு தொலைவில் கண்டாள். உடனே "மச்சான்!" என்று கூப்பிட்டாள். அவன் திரும்பிப் பார்த்தால்தானே!

தன்னைப் பார்த்தும் பாராமுகமாகக் கடந்து விட்ட சிவசாமியின் புதுப்போக்கு அவளுக்கு ஆத்திரத்தையும் அழுகையையும் உண்டாக்கியது.

நீர் கசிந்த கண்களைத் துடைத்தவண்ணம் குடத்துடன் வழி நடந்தாள் அவள். உச்சி வெய்யில் நெருப்பாகச் சுட்டது. தன் தகப்பன் சட்டையிலிருந்து எடுத்து வைத்துக் கொண்ட அந்த நூறு ரூபாயைப் பற்றி நாளது தேதி வரைக்கும் தன் தந்தை எவ்வித விசாரணையும் நடத்தாதது அவள் மட்டில் பெரியதொரு புரியாப் புதிராகப் பட்டது. நூறு ரூபா யென்றால் லேசா, என்ன! "நானும் இந்த ஐந்து நாளாகப் பார்க்கிறேன், என் மனசு ஒரு மனப்படவில்லையே. அப்பா சட்டைப் பையிலிருந்து அன்றைக்குக் கண்டெடுத்த நூறு ரூபாய் நோட்டு முக்காலும் மாமா மாரிமுத்துத் தேவருடையதாகத்தான் இருக்க வேணும். ஆனால் அப்பா இப்படி பொய் சொல்லுவார் என்று நினைக்கவே முடியவில்லை. இந்த ரூபாய்த் தகராறு கடைசியில் என் கல்யாணத்துக்கு அணை போட்டு விடும் போலிருக்குதே. மச்சான் இல்லாமல் நான் எப்படி வாழப் போகிறேனோ! நாளை விடிந்தால் கோவிலிலே சீட்டுப் போடுகிறாங்களாம். காளி ஆத்தா, நீதான் கருணை காட்ட வேணும்!"

பவளக்கொடி மனை மிதிக்கையில் அங்கு அவள் மச்சான் சிவசாமி நின்று கொண்டிருந்தான். கூட

ஒரு செவலைக் காளை நின்றது. பணத் தகராறுக்கு முன்னதாகவே சின்னசாமித் தேவரிடமிருந்து மாரிமுத்துத் தேவர் ஓட்டிச் சென்ற காளை அது.

" உங்கள் செவலைக் காளையை அப்பா இங்கே கொண்டு வந்து விட்டுவரச் சொன்னார் " என்றான் சிவசாமி ரத்தினச் சுருக்கமாக.

" நீங்களே மூக்கிலிட்ட வரை பருத்தி புடவையாகக் காய்த்த மாதிரிதான். காளை நிற்கட்டும். ஊம்; சுருக்கமிலேதான் கோயிலிலே சீட்டுப் போடப் போறாங்களே. ஆத்தா தீர்ப்பு கிடைத்தால் யாரு குற்றவாளின்னு ஊருக்குத் தெரிஞ்சு விடும். என்னமோ அப்புறம் ஆத்தா விட்ட வழி" என்றார் சின்னசாமித் தேவர்.

சுயநினைவை அவள் உள்ளம் 'லகான்' பிடித்த போது, அங்கு சிவசாமி நிற்கக் காணோம். அங்கே சின்னசாமித் தேவர் நின்றார்.

" பவளக்கொடி...."

" அப்பா!"

" இனிமேலே நீ சிவசாமியை மறந்துவிட வேண்டியதுதான் " என்றார்.

அடுத்த கணம் பவளக்கொடி அப்படியே மூர்ச்சித்துத் தரையில் சாய்ந்தாள்!

* * *

அன்றைக்குக் காளி கோவிலில் ஊர் நாட்டாண்மைக்காரர்கள் கூடியிருந்தார்கள். சின்னசாமித் தேவருக்கும் மாரிமுத்துத் தேவருக்கும் இடையில் மூண்டிருந்த அந்த நூறு ரூபாய் நோட்டுத் தகராறுக்கு அன்று தானே அம்மன் திருச் சந்நிதானத்திலே சீட்டுக் குலுக்கிப் போடுவதாகத் திட்டம் போடப் பட்டிருந்தது!

நாழிகை ஏறிக் கொண்டிருந்தது. ஊர் ஜனங்கள் சின்னசாமித் தேவரையும் மாரிமுத்துத் தேவரையும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

அதே சமயத்தில்.

மாரிமுத்துத் தேவர் வீட்டில் பாயும் படுக்கையுமாகக் கிடந்தார். அவர் முகத்தில் களையே இல்லை; சோம்பி யிருந்தார். அப்பொழுது வாசலில் வந்து நின்ற வில் வண்டியிலிருந்து சின்னசாமித் தேவர் அவசரமாக இறங்கினார்.


'மச்சான்!" என்றழைத்தார் சின்னசாமித் தேவர் எடுத்த எடுப்பிலேயே.

"வாங்க மச்சான்!" என்று வரவேற்றார் மாரிமுத்துத் தேவர், நாட்டு வழக்கத்தைத் துளிக்கூட விட்டுக் கொடுக்காமல்.

" கோவிலிலே ஊர்க் கூடி யிருக்கிறது. ஆனால் ஆத்தா கடாட்சத்தாலே கூட்டத்துக்கும் சீட்டுப் போடறதுக்கும் தேவையே இல்லாமல் போய் விட்டது. நீங்கள் அன்று என்னிடம் மாட்டுப் பணத்துக்காக நூறு ரூபாய் நோட்டைத் தந்தது மெய்தான். காலையில்தான் அந்த நோட்டு அப்படியே என் சட்டையில் இருக்கக் கண்டேன். இவ்வளவு நாளாக அது எப்படியோ என் கண்ணைக் கட்டி மறைந்திருந்தது தெய்வ சோதனை தான். இனியாவது நீங்கள் செவலைக் காளையை ஓட்டிக்கிடுங்க" என்று சொல்லிவிட்டு நூறு ரூபாய் நோட்டை எடுத்து மாரிமுத்துத் தேவரிடம் காட்டினார் சின்னசாமித் தேவர்.

சற்று நேரம் சின்னசாமித் தேவரையே பார்த்துக் கொண்டிருந்தார் மாரிமுத்துத் தேவர். அவர் கண் வட்டம் நீர் மண்டிக் கிடந்தது. மறு நிமிஷம் உடம்பில் ஊறி யிருந்த காய்ச்சலையும் கதகதப்பையும் மறந்தவராகப் படுக்கையை விட்டெழுந்து சின்னசாமித் தேவரின் கைகளைப் பற்றிய வண்ணம், "மச்சான், உங்கள் பேச்சு ஒரே ஆச்சரியமாக இருக்கிறது. நான் அன்று உங்கள் கையிலே நூறு ரூபாய் நோட்டு தந்தது வாஸ்தவமா! ஊஹூம், இல்லவே இல்லே. என் மேலே உங்களுக்கு உள்ள பிரியத்திலே — என் நாணயத்தை ஊரிலே நிலைகாட்ட வேணும் என்ற நல்லெண்ணத்திலே நீங்க இப்படிச் சொல்லுறீங்க. உண்மை அதுவா! மச்சான், அன்று நான் உங்களிடம் நூறு ரூபாய் நோட்டைத் தந்து விட்டதாகத்தான் எண்ணினேன். அதுதான் அப்போ அப்படி அடிச்சுப் பேசி உங்கள் பொன்னான மனசையும் அறியாமல் புண்ணாக்கினேன். ஆனால் நடந்ததைக் கேட்டால் நீங்கள் திகைப்பீங்க! அன்று பேச்சு வாக்கிலே உங்களுக்குக் கொடுக்க வேண்டிய நோட்டை ஞாபகப் பிசகாய் அப்படியே கைத் தவறுதலாய்க் கசக்கிச் சின்னச் சுருளாக்கிவிட்டேன். இரவு வீட்டுக்கு வந்தவுடன் அதை எங்கேயோ வீசியிருக்கேன். இன்று தான் மருந்து மடிப்பதற்கு ஒரு சின்ன கடுதாசு தேடப் போக, காளி ஆத்தா இந்தச் சுருளை என் கண்ணுக்குக் காட்டினாள். பிரித்துப் பார்த்தால் அது நூறு ரூபாய் நோட்டு! நானே வந்து உங்களிடம் கொடுத்து விட்டு உங்கள் மன்னிப்பையும் பெற வேணுமென்று நினைத்திருந்தேன். மச்சான், இந்தாங்க அந்த நோட்டு" என்று பெருமூச்சு வாங்கச் சொல்லி நிறுத்தினார் மாரிமுத்துத் தேவர்.

"பலே மச்சான்!" என்றார் சின்னசாமித் தேவர் பொங்கி வந்த சிரிப்புடன்: பூரிப்புடன்.



நடிகர்:—எங்கள் நாடகத்தில் எந்த இடம் உங்களுக்கு ரொம்பப் பிடித்திருந்தது, சொல்லுங்கள்?

ரசிகர்:—இடைவேளைதான் ரொம்ப உன்னதமாக இருந்தது!

நடிகர்:—இடைவேளையில் நாங்கள் அப்படி ஒன்றும் செய்யவில்லையே?

ரசிகர்:—இல்லை, இல்லை! நாங்கள் தான் 'அசோகா'வுடன் வெற்றிலை போட்டுக்கொண்டு ரொம்ப ரசித்துக் கொண்டிருந்தோம்!

முயற்சி பலிக்குமா?



நேபாளத்தில் நடந்து வரும் அட்வைஸரி சர்க்காரை மாற்றிப் பழையபடி ஜனநாயக மந்திரி சபையை அமைக்க முயற்சி நடந்து வருகிறது.

அப்பொழுது அங்கு சொல்லி வைத்த மாதிரி பவளக் கொடியும் அவள் மச்சான் சிவசாமியும் தோன்றினார்கள். தம் பெற்றோர்களுக்குள் நடந்த பேச்சை அவர்களா கேட்காமலிருப்பவர்கள்! பவளக்கொடி மனதிற்குள், "இது என்ன கூத்து! அப்பா பையிலேயிருந்து நூறு ரூபாயை இப்பத்தான் கண்டதாகச் சொல்லிக் கொஞ்சம் முந்தி நூறு ரூபாய்த் தாளையும் கொடுத்தாங்க. அப்படியானால் நான் அப்பா சட்டையிலேயிருந்து எடுத்து ஒளித்த அந்த நூறு ரூபாயைப் பற்றி ஒன்றும் கேட்க வில்லையே..." என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கிப் போனாள்.

அப்பொழுது பவளக்கொடியையும் சிவசாமியையும் திரும்பி விஷமச் சிரிப்புடன் பார்வையிட்ட பிறகு, "மாரிமுத்து மச்சான், நமக்குள்ளே இந்த ரூபாய்ச் சண்டை வந்ததும் போதும், அப்பப்பா, பவளக்கொடியும் சிவசாமியும் ஒருமனப்பட்டுப் பேசி நாடகமே நடத்தி விட்டார்கள்! பணத் தகராறிலே நான் உங்கள் பேரில் கொண்டிருந்த ஆத்திரத்தை மாத்தி நானே உங்களிடம் வலியத் தேடி வருவதற்கு இந்த இரண்டு பேரும் தான் காரணம். நேற்றுப் பொழுதோடே சிவசாமி மாப்பிள்ளை வந்து, நூறு ரூபாய் நோட்டு உங்களிடம் தான் அகப்பட்டதென்று சொல்லி பச்சைத் தாளை நீட்டினாங்க. விடிந்ததும் ஆத்தா முடிவுப் பிரகாரம் பார்த்துக்கலாம் என்று நான் மாப்பிள்ளையைப் பணத்தோடே அனுப்பி வைத்து விட்டேன். அரை நாழி கழித்துப் பார்த்தால் என் பெண் பவளக்கொடி ஓடி வந்து என்னிடம் வாசலிலே கிடந்ததாகச் சொல்லி ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்தாள். மாப்பிள்ளை ஆண் பிள்ளை; பணத்துக்குக் கவலை யிருக்காதது சரிதான்! ஆனால் பவளக் கொடியிடம் எப்படி நூறு ரூபாய் வந்தது தெரியுமா? அன்று நம் ரூபாய்ச் சச்சரவு முடிந்து வீட்டுக்குப் போனபோது கங்காணிகிட்டே ஒரு நூறு ரூபாய் கடன் வாங்கிப் பையிலே வைத்தேன். ராத்திரி என் பையிலே சொல்லி வைத்த மாதிரி நூறு ரூபாய் தாளைப் பார்த்திருக்கிறான் என் மகன்! நம் விவகாரமும் அவன் காதுக்கு எட்டியிருக்கும். நான் உங்களிடமிருந்து பணத்தை வாங்கிக் கொண்டுதான் இல்லையென்று பொய் சொல்வதாக எண்ணி, பெற்ற அப்பனையே சந்தேகப்பட்டுக் கடைசியாக அந்த நூறு ரூபாய் நோட்டையும் எடுத்து மறைத்து விட்டதையும் நான் கண்ணாலே கண்டறிந்தேன். கடைசி வரைக்கும் இந்த நாடகத்தைப் பார்த்துவிடத்தான் என் மகனிடம் பணத்தைப் பற்றிப் பேச்சு மூச்சு எடுக்கவேயில்லை. கெட்டிக்காரன் புளுகை எண்ணி எட்டு நாளிலே தெரியுமின்னு வாசக மிருக்கே!......" என்று சொல்லி நிறுத்தினார் சின்னசாமித் தேவர்.

அதே தருணம் "அப்பா, என்னை மன்னித்து விடுங்க. நான் செய்தது தப்புத் தான்..." என்று கூறியவாறு பவளக்கொடி தன் தந்தையிடம் கெஞ்சினாள்.

"பவளக்கொடி, கண்ணைத் துடைத்துக்கொள். இப்பொழுது ஒன்றும் பெரிதா நடந்து விடவில்லை. அம்மா வேடிக்கையாகத்தானே சொன்னேன் மச்சானிடம்......" என்று ஆறுதல் படுத்திக் கண்ணீரைத் துடைத்தார் சின்னசாமி.

"சின்னசாமி மச்சான், பவளக்கொடி போட்ட நாடகத்துக்கு என் பையன் சிவசாமி போட்ட நாடகமும் சளைத்ததில்லைதானே! இல்லை என்றால் எனக்கும் தெரியாமல் நூறு ரூபாய் சம்பாதித்து நான் தந்ததாக உங்களிடம் வந்து கொடுக்க வருவானா! இவர்கள் இரண்டு பேரும் மட்டும் இந்தமாதிரி நாடகத்தை இவ்வளவு திறமையோடு நடத்தவில்லை என்றால், நாம் இரண்டு பேரும் ஒருவருக்கு ஒருவர் கடுமையான துவேஷம் கொண்டு சிண்டைப் பிடித்துக் கொண்டு நின்றிருப்போம். நம்முடைய பழைய சிநேக மெல்லாம் காற்றிலே பறந்து போயிருக்கும். இவர்கள் இரண்டு பேர் நாடகமும் நம் இரண்டு பேர் வீட்டிலேயும் கொட்டு மேளம் கொட்டினால்தான் வெற்றியடைந்ததாக முடியும்! மச்சான், நாளை விடிந்தால் ஆவணிமாதம். முதலில் பவளக்கொடிக்கும் சிவசாமிக்கும் மூணு முடிச்சுப் போடுவதற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்யுங்கள்" என்றார் மாரிமுத்துத் தேவர்.

"ஆகா!" என்று ஆனந்தம் குமிழியிடத் தலையசைத்தார் சின்னசாமித் தேவர்.

அந்தக் கணம்தான் ஒருவரை யொருவர் புத்தம் புதிதாகப் பார்த்துக் கொள்ளுபவர்களைப் போல் காதல் கண்களால் பார்த்துக் கொண்டார்கள் சிவசாமியும் பவளக்கொடியும்! இதற்கு முன்பு அவர்கள் எத்தனையோ தடவைகள் ஒருவரை யொருவர் ஓரக் கண்களாலும் சாய்ந்த பார்வைகளாலும் அலுப்பு சலிப்பில்லாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போது அந்த இளம் காதலர்களின் கருவிழிக் கண்கள் பேசிக் கொண்ட இன்பக் கதைகளை ஏடுகள் சொல்வதுண்டோ!

உருவம் மாறிய கதை

ஜெயமணி

இரும்புத் திரைக்கு உட்பட்ட அல்பேனியா, பல்கேரியா நாடுகளைப் பார்த்தாகி விட்டது. இனி பல்கேரியாவின் வட எல்லையைக் கடந்து அடுத்துள்ள ருமேனியாவுக்குச் சென்று பார்க்க வேண்டும்.

ஆனால் அந்த நாட்டுக்குச் செல்லு முன், ருமேனியா, ஹங்கேரி, செக்கோஸ்லவேகியா முதலிய இரும்புத் திரைக்கு உட்பட்ட பல நாடுகளும் யாரால், எப்போது சிருஷ்டிக்கப் பட்டன என்ற வரலாறை முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

முதலாவது உலக மகா யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்டதல்லவா? அப்போது தோல்வியுற்ற ஜெர்மனி அலங்கோல மாகக் கிடந்தது. ஜெர்மன் சக்கரவர்த்தி கெய்சர் நாட்டை விட்டு வெளியேறி அன்னிய நாட்டில் அடைக்கலம் புகுந்தார். ஜெர்மன் இராணுவம் பல் பிடுங்கப்பட்ட பாம்பைப் போல் ஆகியது. ரைன் நதிவரையில் ஜெர்மனியைச் சேர்ந்த பிரதேசங்களை அது கை விட வேண்டியதாயிற்று. ஜெர்மன் நகரான கொலோனைச் சுற்றியுள்ள பிரதேசங்களை நேச தேசங்கள் ஆக்கிரமித்துக் கொண்டன.

இவற்றைத் தவிர ஜெர்மனி தன் போர்க் கப்பல்கள், நீர் மூழ்கிகள், விமானங்கள், ரயில் இஞ்ஜின்கள், மோட்டார் லாரிகள் முதலிய யாவையும் நேச தேசங்களிடம் பறிகொடுக்கநேர்ந்தது.

இவ்வாறாக ஜெர்மன் முடியரசும் சாம்ராஜ்யமும் சிதைந்தன. இறுதியில் ஜெர்மனி குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

* * *

வெற்றி பெற்ற நேச தேசங்கள் 1919-ம் ஆண்டில் பாரிஸ் நகரிலே சமாதான மகாநாட்டைக் கூட்டின. அந்த மகாநாட்டில் தான் வல்லரசுகளின் பிரதிநிதிகளும் ராஜ தந்திரிகளும் கூடி உலகத்தின் எதிர்கால விதியை நிர்ணயிக்கத் தொடங்கினர்.

மேற்படி சமாதான மகாநாட்டினால் உலகத்துக்கே க்ஷேமம் ஏற்படப் போவதாக உலக ஜனங்கள் நம்பினார்கள். நீதியை அடிப்படையாகக் கொண்ட உலக சமாதானம் ஏற்படும் என்று மனப்பால் குடித்தார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வர்செயில்ஸ் நகரில் உள்ள எந்த மண்டபத்தில் ஜெர்மன் சாம்ராஜ்யம் பிரகடனம் செய்யப் பட்டதோ, அதே மண்டபத்தில்தான் 1919-ல் சமாதான மகாநாடு ஆரம்பமாயிற்று.

முதலில் ஐந்து வல்லரசுகளுடன் ஆரம்பமான மகாநாட்டிலிருந்து, இத்தாலியும் ஜப்பானும் கத்தரித்துக் கொண்டு விட்டன. எனவே ஐரோப்பாவின், உலகத்தின் விதியை நிர்ணயிக்கும் பொறுப்பு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் இந்த மூன்று வல்லரசுகளின் தலையில் விழுந்தது.

அந்த வல்லரசுகளின் பிரதிநிதிகளாக முறையே அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன், பிரிட்டிஷ் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ், பிரஞ்சு பிரதம மந்திரி கிளிமென்ஷோ மூவரும் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். மற்றும் பல ராஜ தந்திரிகளும் அரசியல் நிபுணர்களும் கூட அதில் பங்கு எடுத்துக் கொண்டார்கள்.

சமய சஞ்சீவிகளும் சுயநலப் புலிகளுமான லாயிட் ஜார்ஜையும் கிளிமென்ஷோவையும் சமாளித்து நிற்க வில்சனால் முடியவில்லை.

எனவே, சர்வதேச சங்கம் ஒன்றை ஆரம்பிக்கும் விஷயமாக பிரிட்டன், பிரான்ஸ் சம்மதத்தைப் பெற்றதுடன் அவர் திருப்தி அடைந்து விட்டார். அதன் விளைவாக, சமாதான மகாநாட்டில் லாயிட் ஜார்ஜும் ஜெர்மனியின் பரம விரோதியான கிளிமென்ஷோவும் இட்டதே சட்டமாகி விட்டன.



ஐரோப்பா: முதலாவது மகா யுத்தத்துக்கு முன்



ஆப்பிரிக்காவில் ஜெர்மனிக்குச் சொந்தமாக இருந்த காலனிகளைப் பிரிட்டனும் பிரான்சும் பங்கு போட்டுக் கொண்டன.

ஐரோப்பாவிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. பல புதிய பிரதேசங்கள் சிருஷ்டிக்கப் பட்டன.

இந்தக் கட்டுரையில் பிரசுரிக்கப் பட்டுள்ள படங்களைப் பாருங்கள்!


முதலாவது மகா யுத்தத்துக்கு முன் இருந்த ஐரோப்பா கண்டத்துக்கும் யுத்தத்துக்குப் பிறகு உருவான ஐரோப்பாவுக்கும் எவ்வளவு வேற்றுமை!

யுத்தத்துக்கு முன் பெரிய நாடாகஇருந்த ஆஸ்திரியா - ஹங்கேரி மறைந்து, அதன் ஸ்தானத்தில் ஆஸ்திரியா, ஹங்கேரி, செக்கோஸ்லவேகியா என்


தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்...



லைப்பாயின் பாதுகாக்கும் நுரையினால்!



நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலுங்கூட, தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாக நேரிடும். லைப்பாய் சோப் உபயோகித்துத் தவறாமல் ஸ்நானம் செய்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். லைப்பாய் சோப்பின் பாதுகாக்கும் நுரை அழுக்கிலிருக்கும் கிருமிகளை விரட்டுகிறது. உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.



லைப்பாய் சோப்

தினசரித்தொல்லையான கிருமிகளிலிருந்து நுரை உங்களைக்காப்பாற்றுகிறது

J.. 330-50 TM

REGD. No. M. 4392
Registered as a newspaper in Ceylon